Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

தினமுரசு

THINAMURASU

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும்
உயர்தரத்துடனும்
குறைந்த செலவுடனும்
குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

முரசு – 05 | திருவள்ளுவர் ஆண்டு 2045 ஐப்பசி 12 புதன்கிழமை (29.10.2014) | பக்கங்கள் 20 | ஓசை – 029

# வட மாகாணசபையில் களேபரம்


## ✠ கருத்து மோதல் ✠ கூச்சல் குழப்பம்

## ✠ முதல்வருக்கு எதிராக கோசம் ✠ ஒலி வாங்கிக்கு பூட்டு

(யாழ்ப்பாணம்)

வடமாகாணசபையின் நேற்றைய அமர்வில் ஆளும் கூட்டமைப்பின் உறுப்பினர்களிடையே ஏற்பட்ட கருத்து முரண்பாட்டால் அவையில் பெரும் அல்லோல கல்லோலம் ஏற்பட்டதுடன் ஆளும் மாகாணசபை உறுப்பினர்கள் மூட்டி மோதும் அளவுக்கு சென்றது. தகாத வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டவேளை ஒலிவாங்கியை நிறுத்திய அவைத்தலைவர் சிவஞானம், அவர்களைக் கட்டுப்படுத்தமுடியாது திணறியதைக் காண முடிந்தது.

19 ஆம் பக்கம் பார்க்க



## அனந்தியின் சீற்றம் அவைத்தலைவர் மீது



(யாழ்ப்பாணம்)

எங்களது கருத்துக்கு நீங்கள் இடம் தராது சர்வாதிகாரமாக அவையை நடாத்துகிறீர்கள் என வடமாகாண சபையின் அவைத்தலைவர் சிவஞானத்தை கடிந்து கொண்டார் அனந்தி சசிதரன்.

நேற்றைய அமர்வின்போது கருத்துத் தெரிவிக்க முற்பட்ட அனந்தி சசிதரனை கருத்து தெரிவிக்காது தடுத்த அவைத்தலைவரை நோக்கி இதனைத் தெரிவித்தார். பிரதி அவைத்தலைவர் மட்டும் அல்ல. நாமும் பெரும் மனக்கஷ்ரத்துடன் தான் இங்கு வருகின்றோம் ஐந்து அமைச்சர்களும் தான் வடமாகாணசபை

19 ஆம் பக்கம் பார்க்க

## தபால் திணைக்களத்துக்கு 200 கோடி நட்டம்

தபால் திணைக்களம் இவ் வருடத்தில் 200 கோடி ரூபா நட்டத்தைச் சந்திக்கவுள்ளதாக அரசாங்க கட்சியின் பிரதான அமைப்பாளர் தினேஷ் குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், தபால் திணைக்களம் எதிர்வரும் 2015 ஆம் ஆண்டில் 175 கோடி ரூபாவாலும் 2016 ஆம் ஆண்டில் 150 கோடி ரூபாவாலும் நட்டமடையும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அவர் நேற்று முன்தினம் நாடாளுமன்றத்துக்கு முன்வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

19 ஆம் பக்கம் பார்க்க

## மாகாண அமைச்சர்கள் மீதும் ஆளும் கட்சி உறுப்பினர் பாய்ச்சல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணசபை தனது நிர்வாகம் ஊடாக உச்ச பயனை மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கத்தவறிவிட்டது என்றும், வடக்கின் பொது மக்களை இனியும் ஏமாற்றும்செயற்பாடு செல்லாது. பாமரமக்கள் எம்மை நோக்கி கேடகும் கேள்விகளுக்கு எம்மால் பதில் வழங்க முடியாதுள்ளது என்று பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன் நேற்று மாகாண அமர்வில் கலந்துகொண்டு உரை நிகழ்த்தும் போது தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது,

எங்களை தூக்கி எறியும் வகையில் முதலமைச்சரும், நான்கு அமைச்சர்களும் அவைத்தலைவரும் சேர்ந்து மாகாணசபையை நடத்துவது என்றால் நாம் வெளியேறுகின்றோம். என தனது மனக்குமுறலை கொட்டித்தீர்த்தார் மாகாணசபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெயநாதன்.

வடமாகாணசபையின் 18 ஆவது அமர்வு நேற்று இடம் பெற்ற போது கூட்டுறவு சங்கங்கள் தொடர்பில் அவைத்தலைவரினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை குறித்து சபையில் உறுப்பினர்களால் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டது. இதன்போது தனது உள்ளக் குமுறலை கொட்டித் தீர்த்தபோதே ஜெயநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

மக்கள் எம்மைத்தெரிவுசெய்தது வேலை செய்ய. இங்கு படங்காட்டிப்போட்டு, மருத்துவ பரிசோதனை செய்யவும், சாப்பிடவும் அல்ல. யாரும் யாருக்காகவும் வக்காளத்து வாங்கவேண்டாம். அமைச்சர்கள் அரசு ஒதுக்கிய நிதியை 5 மாவட்டங்களுக்கும் சமமாக ஒதுக்கவேண்டும். கிளிநொச்சிக்கும், மன்னாருக்கும், வவுனியாவுக்கும் நெல்கொடுக

19 ஆம் பக்கம் பார்க்க

## லண்டன் விபத்தில் யாழ். வாசி மரணம்

யுத்த சூழ்நிலை காரணமாக இலங்கையிலிருந்து சென்ற புகலிடக் கோரிக்கையாளர் ஒருவர் பிரித்தானியாவின் குரோய்டன் எனும் இடத்தில் வாகனம் மோதியதால் மரணமடைந்துள்ளார்.

குரோய்டன் பகுதியிலுள்ள இவரது வீட்டிலிருந்து சற்று தூரத்தில் அமைந்துள்ள பாதசாரிக் கடவையில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது. ஆனால், வாகனச்

19 ஆம் பக்கம் பார்க்க

## இந்திய மீனவர்கள் உண்ணாவிரதம் முடிவுக்கு வந்தது நேற்று

தமது விடுதலையை வலியுறுத்தி யாழ். சிறைச்சாலையில் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் தமது போராட்டத்தைக் கைவிட்டனர். நேற்று யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் பிரதித் துணைத் தூதுவர் எஸ்.தட்சணாமூர்த்தி சிறைச்சாலைக்குச் சென்று வழங்கிய உறுதிமொழியை அடுத்தே மீனவர்களின் போராட்டம் கைவிடப்பட்டது. இதன்போது, கொழும்பு மற்றும் புதுடில்லியிலுள்ள தூதரக உயர் அதிகாரிகளுடன் பேச்சுக்களை நடத்தி விரைவில் விடுதலையாவதற்கான ஏற்பாடுகளைச் செய்வார் என துணைத்

19 ஆம் பக்கம் பார்க்க

## நிபந்தனை விதிக்கிறது பொதுபலசேனா

தாங்கள் விதிக்கும் நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டாலே ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களுக்கு ஆதரவளிக்க முடியும் என பொதுபலசேனா மீண்டும் தெரிவித்துள்ளது. பொதுபலசேனாவின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் இதனை தெரிவித்துள்ளார். ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு தற்போதைய ஜனாதிபதியே பொருத்தமானவர் என தாம் கருதுகின்றனர் எனவும் அவர் தெரிவித்துள்ளார். எனினும் தேர்தலின் போது இன்னும் சிறப்பான வேட்பாளர் ஒருவர் போட்டியிட முன் வருவாரானால், அவர் எமது நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் அவருக்கு நாம் ஆதரவளிப்போம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.


## பாப்பரசர் வருவது நிச்சயம் திருச்சபைப் பேச்சாளர் தகவல்

(கொழும்பு)

பாப்பரசர் பிரான்சிஸ் எதிர்வரும் ஜனவரிமாதம் 13ஆம் திகதி இலங்கை வருவது உறுதியென கத்தோலிக்க திருச்சபை பேச்சாளர் சிறில் காமினி தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் ஜனவரிமாதம் 13ஆம் திகதி பாப்பரசர் காலை 9 மணிக்கு கொழும்பை வந்தடைவார். அன்றையதினம் அவர் இலங்கையிலுள்ள ஆயர்களை பொரளையிலுள்ள ஆயர் இல்லத்தில் சந்திப்பார். அதனையடுத்து அலரிமாளிகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடுவார். அன்றுமாலை பண்டாரநாயக்க மாநாட்டு மண்டபத்தில் உள்ளூர்மதத் தலைவர்களை சந்திப்பார். மறுநாள் 14ஆம் திகதி காலை 8.30 மணிக்கு ஜோசப்வாஸிற்கு புனிதர் பட்டத்தை வழங்குவார். அன்றுமாலை 3.30 மணிக்கு மடுமாதா ஆலயத்தில் விசேட பிரார்த்தனையில் ஈடுபடுவார்.

இதேவேளை வத்திக்கானிலிருந்து நவம்பர் 2ஆம் திகதி விசேட குழு இலங்கைக்கு வருகை தர உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# வலி.மேற்கு பிரதேசத்தில் காற்றலை மூலம் மின் உற்பத்தி

## நேற்றைய கூட்டத்தில் ஆராய்வு

வடக்கில் காற்றலை மூலம் மின் வழங்கும் செயற்றிட்டம் பளைப்பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வெற்றியளித்துள்ள நிலையில், பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் திட்டத்தின் ஊடாக இவ் மின்சார உற்பத்தி செயற்றிட்டம் முன்னகர்த்தப்படு வருகிறது.

விரைவில் வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி, பொன்னாலை ஆகிய பிரதேசங்களில், இடம்பெறும் என வலி. மேற்கு பிரதேச சபை எதிர்க்கட்சி தலைவர் சிவகுரு பாலகிருஸ்ணன் தெரிவித்தார்.

காற்றலை மூலம் மின்சார உற்பத்தி தொடர்பாக பாலகிருஸ்ணன் மேலும் தெரிவிக்கையில்,


வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அராலி - கோட்டைக்காடு, பொன்னாலை ஆகிய இரு கடற்கரைப் பிரதேசங்களில் காற்றலை மூலம் மின் உற்பத்தி செயற்றிட்டத்திற்காக இரு நிறுவனங்கள் முறைப்படி விண்ணப்பித்துள்ளன.

இதற்கான முன்னோடி அபிவிருத்திக் கூட்டம் நேற்று வலி. மேற்கு பிரதேச செயலயகத்தில் இடம்பெற்றது. இத்திட்டத்தினை முன்னெடுப்பதற்கு பிரதேச செயலகமும், பிரதேச சபையும் பூரண ஒத்துழைப்பை வழங்கும்.

விரைவில் இத்திட்டம் முன்னகர்த்த பிரதேச ஒருங்கிணைப்பு குழுவின் அனுமதி பெறப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இச் செயற்றிட்டத்தின் மூலம் வருடாந்தம் சபை வருமானத்தை அதிகரித்துக்கொள்ளும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# வடமாகாண சபை உறுப்பினர்களுக்கு தொற்றா நோய் பரிசோதனை



(யாழ்ப்பாணம்)

வடமாகாண சபையில் நேற்றுக்காலை தொற்றா நோய் தொடர்பான இலவச விசேட மருத்துவ முகாம் இடம்பெற்றது.

வடமாகாண அமைச்சரின் வேண்டுகோளுக்கு இணங்க நேற்றுக் காலை வடமாகாண சபையில் தொற்றா நோய் இலவச மருத்துவ முகாம் யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டது.

மாகாண சபை உறுப்பினர்கள், ஊழியர்கள், இம்முகாமில் கலந்துகொண்டு உடற்பரிசோதனைகளை மேற்கொண்டு பயன் பெற்றனர். இரத்த அழுத்தம், நீரிழிவு, இதயநோய் போன்ற நோய்களுக்கான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையாளர் டாக்டர் ஆர்.கேதீஸ்வரன் தலைமையில் வைத்தியர்கள், தாதியர்கள் இம்முகாமில் கலந்துகொண்டிருந்தனர். (இ)

# ஐஸ்கிறீம் தயாரிப்பாளர்களுடன் யாழ்.மாவட்டத்தில் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் உற்பத்தி செய்யப்படும் ஐஸ்கிறீம் மற்றும் யூஸ் உற்பத்திகளுக்கான தடை தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்துடன் கலந்துரையாடல் ஒன்று நாளை யாழ்.வணிகர் சங்கத்தில் இடம்பெறவுள்ளது.

மேற்படித் திடீர் தடை தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் சங்கத்தில் இடம் பெற்றது.

மேற்படிக் கலந்துரையாடலில் கூடியிருந்த யாழ்.மாவட்ட உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர்கள் தமது உற்பத்திக்கான தடைச் சட்டத்திற்கு புறம்பானது என்றும், கால அவகாசம் வழங்கப்படாமல் திட்டமிட்டு உள்ளூர் உற்பத்திகளை முடக்க எடுத்த முயற்சி என்றும் குற்றம் சுமத்தியிருந்தனர்.

இந்நிலையில் தமக்கான நீதி சொல்ல வேண்டிய வடமாகாண சுகாதார அமைச்சு மௌனமாக உள்ளது தொடர்பிலும், தமது அதிருப்தியை வெளியிட்டிருந்தனர்.

இதன் காரணமாக மேற்படி கலந்துரையாடலினை ஒழுங்கு செய்திருந்த யாழ்.வணிகர் சங்கத்தலைவர் ஆர்.ஜெயசேகரம் உடனடியாக வடமாகாண சுகாதார அமைச்சருடன் தொலைபேசியூடாக தொடர்பினை ஏற்படுத்தி உற்பத்தியாளர்களினால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக சுகாதார அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தார்.

மேலும் யாழில் உள்ள உப உணவு மற்றும் குளிர்பான உற்பத்தியாளர்களை சந்தித்து அவர்களுடன் கலந்துரையாட வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருந்தார்.

இதன்பிரகாரம் சம்பந்தப்பட்டவர்களுடன் யாழ்.வணிகர் சங்கத்தில் சந்தித்து கலந்துரையாடுவதாக சுகாதார அமைச்சர் உறுதியளித்திருந்தார். (பா)

# வேலணை மத்திய கல்லூரி பரிசளிப்பு விழாவும் கல்லூரித்தினமும்

(வேலணை)

வேலணை மத்திய கல்லூரியின் கல்லூரி தினமும், பரிசளிப்பு விழாவும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

மத்திய கல்லூரி முதல்வர் சி.கிருபாகரன் தலைமையில் சேர்.வைத்தியலிங்கம் துரைச்சுவாமி மண்டபத்தில் இந்நிகழ்வு இடம்பெறும்.

பிரதம அதிதியாக மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர் திருமதி இரஞ்சிதமலர் மோகனேஸ்வரன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் தி. ஜோன்.குயின்ரன்ஸ், கௌரவ விருந்தினராக வேலணை மத்திய கல்லூரி முன்னாள் ஆசிரியர் திருமதி திலகம் பாலகுமார் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இதேவேளை கல்லூரியின் வளர்ச்சிப் பாதையில் பங்களித்த முன்னாள் ஆசிரியர்கள் 26 பேரின் ஆசியைப் பெறும் சிறப்பு ஏற்பாடுகளும், கலைநிகழ்வுகளும், பரிசளிப்பு விழாவும் இடம்பெறும். (பா)


சிறு விளம்பரம்

டயானா பிளாஸ்ரிக்

நீசைக்கிள் (மீள் சுழற்சி)

அனைத்து வகையான கழிவு பிளாஸ்ரிக், பொலித்தீன் என்பன விலைக்கு வாங்கப் படும். ரூபா 30 தொடக்கம் ரூபா 70 வரை.

இல.108 பலாலி வீதி யாழ்ப்பாணம்.
(இலுப்பையடி சந்தி அருகாமை)

021 222 8680,
077 592 5088.

(C/3800)


# மருத்துவ பீட வளாகத்தில் உலக உளநல தின விழா

(யாழ்ப்பாணம்)

உலக உளநல தினத்தை முன்னிட்டு உளநாள் விழா நாளை இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கூவர் அரங்கில் 'சித்தம் அழகியார்' எனும் தலைப்பில் நிகழ்வு நடைபெறும்.

இந்நிகழ்வுக்கு வரவேற்புரையை வடமாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நிகழ்த்துவார்.

பிரதம அதிதிகளாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி மற்றும் வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்து சிறப்பிப்பர்.

இந்நிகழ்வில் யாழ்., வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களின் உளநல வைத்திய நிபுணர்களின் சிறப்புரை இடம் பெறும். இறுதியாக இசை மற்றும் நடன நிகழ்வுகளும் இடம் பெறும்.


# நோய்கள் - இறப்பு தொடர்பில் இன்று யாழ்.போதனாவில் மாநாடு

(யாழ்ப்பாணம்)

பாரிசவாதத்தினால் ஏற்படும் இறப்புக்களையும், பாதிப்புக்களையும் தடுத்தல் தொடர்பாக ஊடகவியலாளர்களுக்கு விளக்கமளிக்கும் மாநாடு இன்று இடம்பெறவுள்ளது.

யாழ்.மருத்துவ சங்கத்தின் தலைவரும், சமுதாய மருத்துவ நிபுணருமான டாக்டர் முரளி வல்லிபுரநாதன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இன்று காலை 11 மணி முதல் 12 மணி வரை யாழ்.போதனா வைத்தியசாலை மாநாட்டு மண்டபத்தில் ஊடக நிறுவனங்ளின் ஆசிரியர்கள், செய்தியாளர்களை இம்மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு வடுக்கப்பட்டுள்ளது. இச்சிறப்பு மாநாட்டில் ஊடகவியலாளர்களுக்கு துறைசார் நிபுணர்கள் பதிலளிக்கத் தயாராக உள்ளதாக டாக்டர் மு.வல்லிபுரநாதன் தெரிவித்துள்ளார்.



ஏ9 வீதியில் கொடிகாமம் நகரில் அமைந்திருந்த கடை ஒன்று நேற்றைய தினம் யாழ்தேவி அதிர்வலையை தாங்கிக் கொள்ளமுடியாமல் இடிந்து வீழ்ந்துள்ளது. கொடிகாமம் சந்தியில் அமைந்துள்ள மணியம் களஞ்சியமே இவ்வாறு இடிந்து வீழ்ந்தது. (பா)


ஜயோதா

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இலக்கம் 1104

திகதி 27.10.2014

வெற்றி எண்கள்: 11 31 40 55 — ஆங்கில எழுத்து: T

ஜக்பொட் பரிசு ரூ. 4,29,39,660/= வெல்லப்படவில்லை

| பரிசு அமைப்பு | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 0 | 4,29,39,660/= | ரூ. - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 2 | 10,00,000/= | ரூ. 20,00,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 15 | 50,000/= | ரூ. 7,50,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 272 | 1,000/= | ரூ. 2,72,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 520 | 1,000/= | ரூ. 5,20,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 12614 | 60/= | ரூ. 7,56,840/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 6559 | 40/= | ரூ. 2,62,360/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 164750 | 20/= | ரூ. 32,95,000/= |
| ஆங்கில எழுத்து | 23883 | 20/= | ரூ. 4,77,660/= |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 83,33,860/=

எதிர்வரும் வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட்
ரூபா. 43,262,120/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2014.10.30 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை

(C/3535)

# பொலிஸ் சோதனைச் சாவடி முள்ளியில் அமைக்க கோரிக்கை

(வரணி)

கொடிகாமம் - பருத்தித்துறை பிரதான வீதியான முள்ளிப் பகுதியில் பொலிஸ் சோதனைச்சாவடி ஒன்று அமைக்கப்பட வேண்டும் என பொது மக்களினால் கருத்து தெரிவிக்கப்படுகிறது. குறிப்பாக இப்பகுதியில் இரவு வேளைகளில் சட்டவிரோதச் செயற்பாடுகள் இடம்பெறுவதாகவும் இதனால் இரவு வேளைகளில் இவ் வீதியூடாக பயணம் செய்வதற்கு பலரும் அஞ்சுவதாகவும் பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சட்டவிரோதமான மரக்கடத்தல், கால்நடைகள் கடத்தல், மண்கடத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெறுவதுடன் மதுப்பிரியர்களின் வேண்டத்தகாத செயற்பாடுகளும் இடம்பெறுவதாக தெரிவிக்கும் பொதுமக்கள் பொலிஸ் சோதனை சாவடி அமைக்கப்படுமிடத்து இத்தகைய சட்ட விரோத நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முடியும் எனவும் பொதுமக்கள் அச்சமின்றி போக்குவரத்தை மேற்கொள்ள முடியும் எனவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே இவ்விடயத்தில் உரிய தரப்பினர் கவனம் எடுத்து மக்களின் இலகுவான அச்சமற்ற போக்குவரத்துக்கு வழியேற்படுத்த ஆவன செய்ய வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (150)

# புகையிரத நிலையங்களின் கட்டுமானப்பணிகள் துரிதகதியில்

(யாழ்ப்பாணம்)

இவ்வருட இறுதிக்குள் காங்கேசன்துறை வரை புகையிரத சேவை நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளதை அடுத்து புகையிரத நிலையங்களை அமைக்கும் பணிகள் துரிதகதியில் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக கோண்டாவில், மருதனார்மடம், சுன்னாகம், மல்லாகம், தெல்லிப்பளை ஆகிய பிரதேசங்களில் அமைந்துள்ள புகையிரத நிலையங்களின் கட்டுமானப் பணிகள் துரிதகதியில் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மல்லாகம் வரையிலான புகையிரத பாதை தண்டவாளப் பணிகளும் நிறைவடைந்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை தாம் புகையிரத வருகையினை ஆவலுடன் எதிர்பார்த்து இருப்பதாக வலிகாமம் பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர். (66)

# பதிவு செய்யவும்

தேசிய சேமிப்பு வங்கி கிளைகளில் சிறுவர் சேமிப்புக் கணக்கைப் பேணிவரும் மாணவர்களில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் பரீட்சை நடைபெறுவதற்கு முன்பு தாம் ஆரம்பித்த கணக்கில் 01.10.2014 இல் 2500 ரூபா மீதியாக உள்ளோர் தத்தமது வங்கிக் கிளைகளில் பாடசாலை அதிபரால் உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழுடன் பதிவு செய்யுமாறு வங்கியின் யாழ்.பிராந்திய முகாமையாளர் அறிவித்துள்ளார்.

# ஜெயரட்ண தினமும் பரிசில் வழங்கலும்

(தெல்லிப்பளை)

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியின் "ஜெயரட்ணதினமும் பரிசில் வழங்கல் நிகழ்வும்" இன்று புதன்கிழமை காலை 9 மணி முதல் பாவலர் துரையப்பாபிள்ளை கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது.

கல்லூரி அதிபர் ம.மணிசேகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக பொறியியலாளர் மகாஜனன் ம.சூரியசேகரன் கலந்து கொள்ளவுள்ளார். நினைவுப் பேருரையினை சிரேஷ்ட விரிவுரையாளர் மகாஜனன் திருமதி கவிதா நவகுலன் ஆகியோர் வழங்கவுள்ளனர். ஆசியுரையினை கௌரவ விருந்தினராகக் கலந்துகொள்ளவிருக்கும் தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் வழங்குவார்.

சிறப்பு விருந்தினராக தெல்லிப்பளைக் கோட்டக்கல்விப் பணிப்பாளர் சு.சண்முககுலகுமாரன் கலந்து கொள்வார். (48)

# தலைமைத்துவகருத்தரங்கு




"மீள்குடியேறிய மக்களின் மீள் திறனை கட்டியெழுப்பல்" என்னும் செயற்றிட்டத்தை சேவாலங்கா அமைப்பு வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளனத்துடன் இணைந்து செயற்படுத்தி வருகின்றது. இதன் முதல் அங்கமாக இரண்டு நாட்கள் கொண்ட தலைமைத்துவகருத்தரங்குகள் இடம்பெற்று வருகின்றன.

இதன்படி கடந்த 25 ஆம், 26 ஆம் திகதிகளில் மாதகல் கிழக்கு இளைஞர் கழகத்திற்கான தலைமைத்துவக் கருத்தரங்குகள் மாதகல் கிழக்கு சகாயமாதா ஆலய மண்டபத்தில் காலை 8.30 மணி முதல் இடம்பெற்றன.

இந் நிகழ்வில் வலி.தென் மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச இளைஞர் கழக சம்மேளன தலைவர் ச.செந்தில்குமரன், பிரதேச இளைஞர் நாடாளுமன்ற உறுப்பினர் க.உஷாந்தன், சம்மேளனத்தின் பொருளாளர் அ.ஜெபநேசன், உபதலைவர் றொபின்சன் சம்மேளனத்தின் ஊடகச் செயலாளர் F.X.D.கூரே சேவாலங்கா நிறுவனத்தின் பெண்கள் வலுவூட்டல் உத்தியோகத்தர் திருமதி ரஞ்சிதமலர் மற்றும் வளவாளர்கள் மாதகல் கிழக்கு இளைஞர் கழகத்தின் அங்கத்தவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (48)

# தமிழற்ற அரசியல் பிரச்சினையை எப்பிடித் தீர்க்கலாம் –19




அரசியல் எண்டது நலன்களின் அடிப்படையில்தான் இயங்குகிறது எண்டால், அவரவர் தமக்குத் தமக்குச் சாதகமான முடிவுகளைத்தான் எடுப்பினம்.

அப்பிடித்தான் கடந்த காலத்திலும் நடந்திருக்கு.

இப்பவும் அப்பிடித்தான் நடந்து கொண்டிருக்கு.

இனியும் அப்பிடித்தான் நடக்கும்.

இந்த அடிப்படையிலதான் உலக நாடுகள் எல்லாம் இலங்கை அரசாங்கத்தோட தொடர்பு கொண்டு உறவாடி வருகுதுகள்.

இலங்கையும் அப்பிடித்தான் உலகத்தோட உறவாடிக் கொண்டிருக்கு.

இதில மகிந்த ராஜபக்ஷ எண்டால் என்ன ரணில் எண்டால் என்ன சோமசுந்தரமோ கந்தசாமியோ காதரோ அல்லது வேற யார்தான் ஆட்சியில இருந்தாலும் இதுதான் விதி.

அறத்தின் அடிப்படையிலயும் நீதியின் அடிப்படையிலயும் உலகம் இயங்குமாக இருந்தால் உலகத்தில எத்தனையோ இனங்கள் எப்பொழுதோ விடுதலையைப் பெற்றிருக்கும்.

எத்தினையோ இனங்கள் உரிமையைப் பெற்றுச் சுதந்திரமாக வாழும்.

இலங்கைத்தமிழர்கள் இப்பிடி அறுபது வருசமாக அலைக்கழிஞ்சு கொண்டிருந்திருக்க மாட்டினம்.

இவ்வளவு கொள்ளையாக சனங்கள் செத்திருக்கவும் மாட்டுதுகள்.

ரண்டு மாசத்துக்கு முதல், காசாவில ரண்டாயிரத்து ஐநூறு பேர் செத்திருப்பினமா?

அறம் எண்டது நான் முதலே சொன்னமாதிரி அவரவர் தமக்குத் தமக்கு ஏற்றமாதிரி உருவாக்கி வைச்சிருக்கிற ஒண்டு.

அது எல்லாருக்கும் பொருந்தும். பொதுவாக இருக்கும் எண்டில்லை.

இதை விளங்கிக் கொண்டுதான் நாங்கள் அரசியல் செய்ய வேணும்.

உலகத்துக்கு தமிழர்கள் ஒண்டும் பெரிய நலன்களைக் குடுக்கிற ஆட்கள் இல்லை.

சாதாரணமாகவே கஞ்சப் பயல்களாகத்தான் பெரும்பாலான தமிழர்கள் இருக்கினம்.

மனசிலையும் கஞ்சத்தனம். வாழ்க்கையிலயும் கஞ்சத்தனம்.

இலங்கைத்தமிழர்களின்ர நிலப்பகுதியும் பெரிய செல்வம் கொழிக்கிற பகுதியில்லை.

முந்தி நீளமான கடல் வடக்குக் கிழக்குப் பகுதிகளில இருந்திது. இப்பவும் அந்தக் கடல் அப்பிடித்தான் இருக்கு. ஆனால் கடலில இந்திய மீனவற்றை ஆதிக்கமும் அத்துமீறலும்தான் நடந்து கொண்டிருக்கு.

இலங்கைக் கடற்படை கொஞ்சம் இறுக்கமாக இருந்து இந்திய மீனவர்களைக் கைது செய்து. படகுகளையும் பறிக்காட்டில் இந்திய மீனவர்கள் இங்க உள்ள கரைக்கே வந்து, வாடிக்குள்ள இருக்கிற வலையை எடுத்துக் கொண்டு போயிடுவாங்கள்.

சிலவேளை கரைக்கு வந்து நம்மட பொம்பிளையளைக் கொண்டுபோனாலும் போயிடுவாங்கள்.

அந்தக் காலத்திலயே மாதகல், வல்வெட்டித்துறைப்பகுதிக்கு வாற இந்திய மீனவர்கள் தங்கட வம்சத்தை இந்தப்பகுதிகளில பெருக்கிப்போட்டுப்போன சங்கதிகள் எல்லாம் உண்டு.

வடக்கு கிழக்குப் பகுதிகள் விவசாயத்தையும் ஆதாரமாகக் கொண்டது எண்டு ஒரு பேச்சு இருக்கு.

வடக்குக் கிழக்கின் விவசாயம் இப்ப மெல்ல மெல்ல படுத்துக் கொண்டு வருகுது.

1970 களில விவசாயம் ஒரு முக்கியமான தொழிலாகவும் மையப்பொருளாதார வழி–முறையாகவும் இருந்தது.

அப்ப பெரும்பாலான தமிழர்கள் – தமிழ் இளைஞர்கள் விவசாயம் செய்யப் புறப்பட்டார்கள்.

இப்ப பரம்பரை விவசாயக்குடும்பங்களே அந்தத் தொழிலைச் செய்வதை விரும்பவில்லை. இளைஞர்களின் கவனம் எல்லாம் புலம்பெயர்ந்து மேற்குலகத்தையோ அவுஸ்ரேலியா போன்ற நாடுகளையோ நோக்கிப் போவதாக உள்ளது.

இதற்கு வாய்ப்பில்லாதவர்கள் அரசாங்க உத்தியோகத்தை நாடுகிறார்கள்.

அரசாங்க உத்தியோகம் பார்ப்பதில் தமிழர்களுக்கு அலாதி ஈடுபாடிருக்கு.

இல்லையெண்டால் கோழி மேய்த்தாலும் கோறணமெந்திலதான் (அரசாங்கத்திலதான் ) மேய்க்க வேணும் எண்டு பொன்மொழியைச் சொல்லுவினமா?

இப்பிடியான மென்ராலிற்றியோடயும் யதார்த்தத்தோடயும் இருந்து கொண்டு லட்சிய அரசியலை வென்றெடுக்கிறது எண்டால்.... தமிழீழத்தைக் காண்கிறது எண்டால்...

தமிழர்கள் வெளியாருக்கு உவப்பளிக்கக் கூடிய நலன்களை வழங்கக் கூடிய நிலத்தையோ வளத்தையோ கொண்டதும் இல்லை.

இலட்சிய அரசியலை நிறைவேற்றக் கூடிய மனப்பாங்கை உடையவர்களும் இல்லை.

அப்பிடி இருந்த போராளிகளே இப்ப சிதைஞ்சுபோயிருக்கும்போது எப்பிடி வரும் விரும்பிய தீர்வு?

உற்சாகம்தான் மனிதனைத் தூண்டி வெற்றிப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. - ஹில்.

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## முதலில் நாம் மாற வேண்டும்....

"தமிழர்கள் வெளியாருக்கு உவப்பளிக்க கூடிய நலன்களை வழங்கக் கூடிய நிலத்தையோ வளத்தையோ கொண்டதும் இல்லை. இலட்சிய அரசியலை நிறைவேற்றக் கூடிய மனப்பாங்கை உடைய வர்களும் இல்லை.

அப்படி இருந்த போராளிகளே இப்ப சிதைஞ்சுபோயிருக்கும் போது எப்படி வரும் விரும்பிய தீர்வு?" என்று வடபுலத்தான் தனது பத்தியில் கேட்டிருக்கிறார்.

தமிழ் மக்களிடம் இன்றைக்கிருக்கும் சிந்தனைகளும் தமிழ்த் தலைவர்களாகச் சொல்லிக் கொள்பவர்களிடம் இருந்துகொண்டி ருக்கும் அரசியல் வங்குரோத்துச் செயற்பாடுகளும் சமீபத்தில் தீர்வு வரக்கூடிய அறிகுறிகள் எதையும் காட்டவில்லை என்பதை யாரும் விளங்கிக் கொள்ளலாம் தான்.

நம்மிடம் இருக்கும் மற்றொரு மகா முட்டாள்தனம், நமக்குத் தீர்வு கிடைக்காததற்கு மற்றவர்கள்தான் காரணம் என்று சொல்லிக் கொண்டிருப்போரையே நம் தலைவர்களாகவும் சமூகத்தை வழி நடத்தும் புத்திமான்களாகவும் கருதி அவர்களை வாய்பார்த்துக் கொண்டே காலத்தைக் கடத்துவதுதான்.

நம்முடைய யதார்த்த நிலைமை என்ன,உலக யதார்த்தம் என்ன, கடந்தகாலப் படிப்பினைகள் என்ன என்று எதையுமே விளங்கிக் கொள்ளவோ விவாதிக்கவோ முயலாமல்... தோல்விக்குப் பழி வாங்கி விட்டுத்தான் மறுவேலை என்று மன்னர்காலத்து வீம்புகளு டன் நடந்துகொண்டால் இன்றைய காலத்துக்கான தீர்வை எப்படி அறுக முடியும்?

நமக்கு இப்போதைக்குத் தீர்வு வருவதற்கு வாய்ப்பில்லை என் பதை தீர்வுக்கு எதிரானதாகவோ தீர்வை விரும்பாத வாதமாகவோ பார்ப்பதில் அர்த்தமில்லை. ஏன் என்று யோசிக்க ஆரம்பிப்பதே புத்தி சாலித்தனமானது.

பல ஆண்டுகளாக பல தேர்தல்களில் தமிழொற்றுமை பெருமள வுக்கு காட்டப்பட்டுவிட்ட பிறகும் தீர்வைக் காணமுடியாமல் இருப் பது ஏன்? தீர்வொன்று சாத்தியமாகாத வகையில் இழுத்துக் கொண்டே செல்வதற்கு நம்மிடமுள்ள எந்தத் தன்மைகள் அல் லது எந்தத் தவறுகள் காரணம் என்று யோசிக்க வேண்டாமா?

மகிந்தவும், ரணிலும், சஜித்தும், சம்பிக்கவும், ஹக்கீமும், தொண் டமானும், மோடியும், ஜெயலலிதாவும், கருணாநிதியும், ஒபாமா வும், கமரூனும், பான் கீ மூனும், நவியம்மாவும், ஐநாவும், சீனாவும், பாகிஸ்தானும், ஈரானும், ஜப்பானும், தென்னாபிரிக்காவும் இன்னு மின்னும் நம் பிரச்சினையில் எதிர்காலத்தில் தலையிடப்போகிற மற்றவர்களும் சரியில்லை என்பதால்தான் நம் பிரச்சினை தீராமல் இழுபடுகிறதா?

என்ன கொடுமை இது? இவர்களையெல்லாம் நாம் எப்போது திருத்தி வழிக்குக் கொண்டுவருவது? நம்மைத் தவிர யாரும் நம் விஷயத்தில் சரியாக இருக்க மாட்டேன் என்கிறார்களே... என்ன செய்வது நாம்?

மகாபாரதக் கதையில், மத்ர தேசத்து அரசன் சல்லியன் பாண் டவர்களுக்குத் தாய்மாமனாவான். ஆயினும் தவறுதலாக வாக்குக் கொடுத்த காரணத்தால் துரியோதனன் தரப்பிலிருந்து பாண்டவரை எதிர்த்தே போர் புரிகிறான்.

துரியோதனனின் ஆணைப்படி 17ஆம் நாள் போரில் படைத்தள பதியாகும் கர்ணனுக்குத் தேர்ச்சாரதியாகிறான் சல்லியன். தேரோட் டிக்கொண்டே துரியோதனன் தரப்பிலுள்ள தவறுகளையும், தோல் வியுறப் போவதையும், கர்ணனால் அர்ஜுனனை வெல்ல முடியாது என்பதையும் சொல்லிக் கொண்டேயிருக்கிறான்.

இவ்வாறு தான் சார்ந்திருக்கும் தரப்பின் தவறுகளைச் சொல்லிக் காட்டி வருவதை "சல்லிய சாரத்தியம்" என்றசெற்றொடராகவே பின் னால் வழங்கப்படுவதாயிற்று. சல்லியன் தன் தரப்பிற்கு எதிராகப் பேசுவது போல தோன்றினாலும், உண்மையில் வீண் அழிவை உணர்த்தி துரியோதனனை போர்த் தவறிலிருந்து மீளும்படியே வலியுறுத்துகிறான்.

அப்படி நம் தவறுகளைக் கண்டு சொல்லும் ஆட்களே நம்மத்தி யில் தேவையாயிருக்கிறது. நம் தவறுகளைக் கண்டுகொள்ளா மல் இங்கு மாற்றமில்லை.

- ஆசிரியர்.

# வடக்கில் 164 கிராமங்களுக்கு இவ்வருட இறுதிக்குள் மின்சாரம்

### - நாடாளுமன்றில் மின்சக்தி அமைச்சர் அறிவிப்பு -

(கொழும்பு)

வட மாகாணத்தில் மின்சார மில்லாத 164 கிராமங்களுக்கு இவ்வருடம் டிசம்பர் மாத இறு திக்குள் மின்சாரம் வழங்கப்படு மென எரிசக்தி மின் சக்தி அமைச்சர் பவித்ரா வன்னி யாரச்சி தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று சஜித் பிரேமதாஸ எழுப்பிய வாய்மொழிமூல கேள்விக்கு விடையளிக்கும் போதே எரி சக்தி மின்சக்தி அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி இத்தகவலைத் தெரிவித்தார்.

வட பகுதி மக்களுக்காக மின்சாரத்தை பெற்றுக் கொள் வதற்கான செலவுகளை திவி நெகும 'வாழ்வாதார திட்டத் தின் கீழ் மின்சார பில்லுடன் கழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தவிர வட பகுதி மக்களுக்கு மேலும் சலுகையடிப்படையில் மின்சா ரத்தை வழங்க முடியுமா என்பது குறித்தும் ஆராயப்படுகின்றது.

நுரைச்சோலை மின் நிலை யத்துக்கு நிலக்கரியை இறக்கு மதி செய்வதில் ஊழல் இடம் பெற்றதாக நான் கூறவில்லை. நஷ்டம் ஏற்பட்டுள்ளதாகவே கூறினேன். அந்த நஷ்டத்தை எவ்வாறு ஈடுசெய்யலாம் என்பது குறித்து ஆராய்ந்து மீண்டும் அந்த நஷ்டத்தை அறவிடுவ தற்காக நடவடிக்கை எடுக்கப் படும் என்றார்.

## ஐ.தே.க.வின் உலகசாதனை

(கொழும்பு)

எதிர்க்கட்சி உறுப்பினர் எவரும் இல்லாதநிலையில் நேற்று நாடாளுமன்றில் வாய் மூல கேள்விகள் கேட்காமலேயே அமர்வுகள் இடம்பெற்றன.

இதன்போது அரசாங்கத்தின் பிரதம அமைப்பாளர் அமைச்சர் தினேஸ் குணவர்த்தன, நாடா ளுமன்ற அமர்வின்போது எதிர்க் கட்சி உறுப்பினர்கள் பங்கேற் காமையானது உலக சாதனை என்று வர்ணித்தார்.

இதேவேளை தமது உறுப் பினர்களில் பெரும்பாலானோர் நீதிமன்ற வழக்கு ஒன்றுக்கு சென்றமையால் நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்க முடிய வில்லை என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பதில் வழங்கியுள் ளார்.

# புலிகள் மீதான தடைநீக்கம் தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தாது

### - பிரதியமைச்சர் பைசர் முஸ்தபா நம்பிக்கை -

புலிகள் மீதான தடை நீக்கம் ஜனாதிபதி தேர்தலில் பாதிப்பை ஏற்படுத்தாது என பிரதி அமைச்சர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

புலிகளுக்கு எதிரான தடை நீக்கத்தின் ஊடாக, புலி ஆதரவாளர்களின் நிதி திரட்டல் மற்றும் ஏனைய நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் நியாயப் படுத்தியுள்ளது.

2005ஆம் ஆண்டு ஜனாதிபதித்தேர்தலில் ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டியப்பின் 2006ஆம் ஆண்டில ஐரோப்பிய ஒன்றியம் புலிகளுக்கு எதிரான தடையை அறிவித்தது தடை நீக்கம் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளையே மோசமாக பாதிக்கும்.

தடை நீக்கப்பட்டுள்ள நிலையில் புலிகள் மீள ஒருங்கிணையவும் நிதி திரட்டல்களில் ஈடுபடவும் கூடிய சாத்தியங்கள் காணப்படுகின்றன.

புலிகளுக்கு எதிரான தடை நீக்கம் இலங்கை யர்களை மோசமாக பாதிக்கும் எனவும் அனைத்து இலங்கையர்களும் இந்த தடை நீக்கத்திற்கு எதிராக அணி திரண்டு குரல் கொடுக்க வேண்டு மெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# 2015 வரவு செலவுத்திட்டம் சர்வதேச பாராட்டை பெற்றுள்ளது

### - பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவிப்பு -

(கொழும்பு)

இலங்கையின் பொருளா தாரப் பாதைக்கு வலுவூட்டும் வகையில் வரவுசெலவுத்திட்டம் முன்வைக்கப்பட்டுள்ளது . இம் முறை வரவுசெலவு சர்வதேச பாராட்டை பெற்றுள்ளது என ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் வியாபார பொருளா தார விஞ்ஞான ஆய்வுப்பிரிவின் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இலங்கை மன்றக்கல்லூரியில் நடைபெற்ற வரவுசெலவு 2015 தொடர்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் கருத்து தெரிவிக்கும் ஊடக வியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரி விக்கையில், இலங்கையில் 7.5 வீத பொருளாதார அபிவிருத்தி வேகம் காணப்படுகிறது.

சீன பொருளாதார அபிவி ருத்தி வேகம் 8.5 வீதமாக காணப்படுகிறது. இந்திய இலங்கையை விடவும் மிக பின் தங்கிய நிலையில் காணப்படுகி றது.

உலக பொருளாதாரத்தில் மாற்றங்களைக் காட்டும் இத்த கைய காலகட்டத்தில் 7.5 வீதமாக பொருளாதார வளர்ச்சி காணப்ப டுகின்றமை மிகவும் முக்கிய விடயம்.

2015 ஆண்டின் வரவுசெலவி னூடாக 7.5 வீத வளர்ச்சி வேகத்தை 8.2 வீதமாக அபிவி ருத்தி செய்ய எதிர்பார்ப்பதுடன் எதிர்வரும்2016ஆம் ஆண்டளவில் அதனை 8.3 வீதமாக அதிகரிக் கச் செய்ய எதிர்பார்க்கப்படுகிறது.

தேசிய உற்பத்தியில் 4.2 வீதம் வரை சென்ற வரவு செலவு துண்டுவிழும் தொகை தற் போது குறைக்கப்பட்டுள்ளதுடன் எதிர்வரும் காலங்களில் அதனை 3.2ஆக குறைக்க எதிர்பார்ப்ப தாகவும் அவர் மேலும். தெரிவித் தார்.

# கல்விக்கு ஒதுக்கப்பட்டநிதி; அதிகாரிகளுக்கு விளக்கம்

2015ஆம் ஆண்டுக்கான வரவுசெலவுத் திட் டத்தினூடாக கல்வித்துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ள நிதி தொடர்பில் கல்வி நிர்வாக அதிகாரிகளை தெளிவுபடுத்தும் நிகழ்வொன்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று முன்தினம் காலை அலரிமாளிகையில் நடை பெற்றது.

இதன்போது அண்மையில் இந்தோனேசியா வில் நடைபெற்ற இரண்டாவது சர்வதேச கணித மற்றும் விஞ்ஞான ஒலிம்பியட் போட்டியில் திற மையை வெளிக்காட்டி இலங்கைக்கு பெருமை தேடித் தந்த பிள்ளைகளுக்கு பதக்கங்கள் மற்றும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

ஹோமாகம மஹிந்த ராஜபக்ஷ வித்தி யாலயத்தின் நடனக்குழுவுடனும் ஜனாதிபதி இதன் போது கலந்துரையாடினார்.இந்நிகழ்வில் கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன- பிரதி அமைச்சர் மொஹான் லால் கிரேரு- மாகாண முதல மைச்சர்கள்- ஜனாதிபதி செயலாளர் லலித் வீரதுங்க - கல்வி அமைச்சின் செயலாளர் அநுர திஸா நாயக்க- ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## "இலங்கையின் கிராமங்கள்" நூல் கையளிப்பு

கலாசார திணைக்கள- மகாவம்ச செயல கத்தின் செயலாளரான பேராசிரியை மாலினி எந்தகமவினால் எழுதப்பட்ட இலங்கையின் கிராம சபை முறை வரலாறு என்ற நூல் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிடம் அண்மையில் கைய ளிக்கப்பட்டது.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்ற இந்த நிகழ் வில், அமைச்சர் டி.பீ. ஏக்கநாயக்க, அமைச்சின் செயலாளர் வசந்த ஏக்கநாயக்க ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நாம் பிராணிகளைக் கவனித்து அவற்றின் பழக்க வழக்கங்களுக்கேற்ப நம்மை மாற்றிக் கொள்வதற்குப் பதிலாக இப்போது அவை நம்மைக் கூர்ந்து கவனித்து நம்மைப்போலவே வாழ முற்படுகின்றன!

யானை, செயலில் மனிதர்களை மிஞ்ச கற்றுக்கொண்டு விட்டது. யானைகளின் போக்கில் காணப்படும் மாறுதல்களை டார்வினின் கொள்கைப்படி அறிவதைவிட கலாசாரத்தை ஆராய்வதன் மூலம் நன்கு அறிந்துகொள்ள முடியும்.

பரதன் என்பது தந்தமில்லாத ஆண் யானை. பார்த்தாலே உள்ளுக்குள் உதறல் எடுக்கும் அளவுக்கு பெரிய மேனி. நல்ல புத்திசாலி. தன்னைச் சுற்றியிருக்கும் மக்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் என்ன செய்கிறார்கள் என்பதை ஊன்றிக் கவனித்து செயலில் அவர்களை வென்றுவிடுகிறது.

தினந்தோறும் இரவு காட்டிலிருந்து இரைதேடி கிராமத்துக்கு வருகிறது. பலாப்பழ வியாபாரி எப்போது மறைவிடத்துக்குப் போவார் என்று புதர் மறைவில் காத்திருக்கிறது. அவர் அசந்த நேரத்தில் பழத்தை





**காட்டுக்கு அருகிலிருந்த ஒரு வீட்டை முரட்டு யானையொன்று இடித்துத்தள்ளத் தொடங்கியது. திடீரென வீட்டுக்குள்ளிருந்து பச்சிளம் குழந்தையின் அழுகைச் சத்தம்... உடனே அந்த யானை வீட்டை இடிப்பதை நிறுத்தி விட்டு உள்ளே சென்று, அந்தக் குழந்தைக்கு அருகிலிருந்த இடிபாடுகளைத் தும்பிக்கையால் தூக்கி வெளியே வீசி அந்த இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு அகன்றது.**

# பிராணி அறிவும் பிராணி நேயமும்

**தர்ஷ் தெக்கேகரா**

தூக்கிக்கொண்டு இருளில் மறைகிறது.

வனத்துறையினர் காட்டின் எல்லையில் யானை வெளியேற முடியாத பள்ளத்தை வெட்டி வைத்துள்ளனர். பரதனோ காவலரை, தன்னுடைய பிளிறலால் அச்சுறுத்தி ஓட வைத்துவிட்டு செக்-போஸ்ட் பக்கமாகவே தார்வீதியில் வேகமாக நடந்து எல்லையைத் தாண்டிவிடுகிறது. அதன் குறும்புத்தனங்களை சிக்கும் உள்ளூர் மக்கள் கிராமத்துக்கு அது வந்துவிடக் கூடாது என்பதற்காக வீதியில் மனிதச் சுவராக நிற்கிறார்கள். அதுவோ துணைக்கு இன்னொரு யான்னையைக் கூட்டிவந்து நிறுத்துகிறது. மக்களின் பின்னால் சென்று பலமாக பிளிறி எல்லோரையும் அலறியடித்து ஓடவைத்துவிட்டு கிராமத்துக்குள் ஓடிவிடுகிறது. மனிதர்களைத் தூக்கிப்போட்டு மிதிப்பதோ, அடிப்பதோ நீண்டகாலத்துக்குப் பயன்படாது என்று தெரிந்து கொண்டு தினம் ஒரு தந்திரத்தைக் கடைப்பிடிக்கிறது.

மனிதர்களுக்கும் பிராணிகளுக்கு மான உறவை இப்போது மனித-புவியியல்தான் தீர்மானிக்கிறது. மானுடவியல் ஆராய்ச்சியாளர்கள் உலகம் முழுக்க பூர்வகுடிகளும் பிராணிகளும் விலங்குகளும் எப்படி காட்டில் ஒன்றாக வாழ்கிறார்கள் என்று ஆராய்ந்து வருகிறார்கள்.

மனிதனுக்கும் பிராணிகளுக்கும் வாழ்வியல் கலாசாரம் மாறிக் கொண்டிருக்கிறது. பிராணிகளுக்கும் விலங்குகளுக்குமான வனப் பகுதி சுருங்கிக்கொண்டே வந்து இப்போது நாம் வசிக்கும் இடத்திலேதான் அவையும் வசித்தாக வேண்டும் என்ற கட்டாயத்தை நாம் ஏற்படுத்திவிட்டோம். நாம் அவற்றைக் கவனித்து அவற்றின் பழக்க வழக்கங்களுக்கேற்ப நம்மை மாற்றிக்கொள்வதற்குப் பதிலாக இப்போது அவை நம்மைக் கூர்ந்து

**மனிதர்களுக்கு அடுத்தபடியாக யானைகள்தான் அறிவிற் சிறந்தவை. நம்முடைய மூளையைப் போலவே அவற்றின் மூளையும்அமைப்பிலும் நுட்பத்திலும் சிறந்தவை. கண்ணாடி முன்னால் நிற்கும்போது அது தான்தான் என்பதை ஒவ்வொரு யானையும் தெரிந்துகொள்கிறது. கண்ணாடியில் தெரிவது இன்னொரு யானை என்று வெருள்வதோ கோபம் கொள்வதோ இல்லை. காட்டில் தாங்கள் எடுக்கும் பழங்கள், முறிக்கும் மரங்கள் போன்றவற்றின் எண்ணிக்கையைக்கூட அவை தெரிந்து வைத்துள்ளன. பிற உயிரினங்களைக் காக்க அவை சமயங்களில் உயிர்த்தியாகமும் செய்கின்றன.**

கவனித்து நம்மைப்போலவே வாழ முற்படுகின்றன!

காட்டில் வாழும் பிராணிகளுக்கும் விலங்குகளுக்கும்கூட வாழ்க்கை அனுபவங்கள் இருக் கின்றன. அவற்றுக்கும் உணர்ச்சிகள் ஏற்படுகின்றன. அவற்றுக்கென்று சில நம்பிக்கைகளும் இருக்கின்றன. அறிவுபூர்வமாகவே அவை கூட்டாகச் சிந்திக்கின்றன, வரும் ஆபத்தை உணர்கின்றன, வாழ்வதற்குரிய வழிகளைக் கண்டுபிடிக்கின்றன.

பிராணிகளுடன் வாழ்வது என்ன என்பதை பூர்வகுடிகளிடமிருந்து மானுடவியலாளர்கள் கற்றுவருகின்றனர். காட்டில் வசிக்கும் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் காடும் மரமும் கற்களும் பாறைகளும் புதர்களும் நீரோடைகளும் பொது.

அவர்கள் காட்டில் உள்ள எல்லா விலங்குகளின் குணங்களையும் நன்கு அறிந்து வைத்துள்ளனர். யானைகளை, "மனிதர்கள் அல்லாத காட்டு குடிமக்கள்" என்றே பார்க்கின்றனர். அவற்றில் சில நல்லவை, சில தீயவை. அவற்றுக்கு உரிய மரியாதையைக் கொடுத்துவிட்டால் அவை நம் வழியில் குறுக்கிடுவதில்லை என்பதை அனுபவபூர்வமாகக் கண்டுள்ளனர். முரட்டுத்தனமாக பிளிறிக்கொண்டு வரும் காட்டு யானைகளிடம் கூட அவர்கள் சாந்தமாகப் பேசுகின்றனர். உயிரியலாளர்கள் இந்தப் பாடங்களைச் சமூக அறிவியலில் படிக்க முடியாது.

மனிதர்களுக்கு அடுத்தபடியாக யானைகள்தான் அறிவிற் சிறந்தவை. நம்முடைய மூளையைப் போலவே அவற்றின் மூளையும் அமைப்பிலும் நுட்பத்திலும் சிறந்தவை. அவற்றின் மூளைக்குள்ளும் ஏகப்பட்ட நியூரோன்கள். கருவிகளைப் பயன்படுத்த அவை விரைவில் கற்றுக்கொள்கின்றன. சிக்கலான வேலைகளைப் பிற யானைகளுடனோ மனிதர்களுடனோ சேர்ந்து செய்கின்றன.

கண்ணாடி முன்னால் நிற்கும்போது அது தான்தான் என்பதை ஒவ்வொரு யானையும் தெரிந்துகொள்கிறது. கண்ணாடியில் தெரிவது இன்னொரு யானை என்று வெருள்வதோ கோபம் கொள்வதோ இல்லை. காட்டில் தாங்கள் எடுக்கும் பழங்கள், முறிக்கும் மரங்கள் போன்றவற்றின் எண்ணிக்கையைக்கூட அவை தெரிந்துவைத்துள்ளன. பிற உயிரினங்களைக் காக்க அவை சமயங்களில் உயிர்த்தியாகமும் செய்கின்றன.

ஒரு முறை ஊருக்குள் 9 யானைகள் ஒன்றாக வந்துகொண்டிருந்தன. ஒரு வீட்டுக்கு மிக அருகில் சென்றபோதுதான் மின்சார வேலி போட்டிருந்ததை யானைகள் கவனித்தன. அந்த வயரை மிதிக்காமல் இடையில் இருந்த இடைவெளியில் எச்சரிக்கையாக கால்களை வைத்து அந்த வீட்டை மேலும் நெருங்கி, சுற்றிப்பார்த்துவிட்டு சென்றுவிட்டன.

இத்தனை யானைகள் அந்த வீட்டுக்கு அருகில் ஏன் வந்தன, அந்த வீட்டை ஏன் சுற்றின, வீட்டுக்குள் என்ன பார்த்தன என்றெல்லாம் யாருக்கும் புரியவில்லை. யானைகளை ஆராய்ச்சி செய்கிறவர்களிடம் கேட்டனர். "அந்த யானைகள் அந்தக் காட்டுக்குப் புதிதாக வலசை வந்துள்ளன, தங்களின் தங்குமிட சுற்றுப்புறம் எப்படி என்று தெரிந்துகொள்ளவே அந்த வீட்டைச் சுற்றிப் பார்த்துள்ளன. எனவேதான் எதையும் உடைக்கவில்லை. பூக்களைப் பறிக்கவில்லை, மாஞ்செடிகளைப் பிய்க்கவில்லை, மூங்கில் குருத்துகளைக்கூட உண்ணவில்லை" என்று அவர்கள் விளக்கினர்.

அந்த வீட்டையும் அதன் சுற்றுப்புறத்தையும் அந்த யானைகள் தங்களுடைய மூளையில் பதியவைத்துக் கொள்ளுமாம். அதைத் தங்களுடைய எல்லையாகவோ எல்லைக்கு உட்பட்ட பகுதியாகவோ கருதுமாம்.

"காட்டு யானைகள் ஊருக்குள் புகுந்து அட்டகாசம்" என்று இனி வசைபாடாதீர்கள். காடும் நாடும் நமக்கும் அதற்கும் பொது. நாம்தான் அவற்றுக்கு ஆபத்து நேராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். நம் வீட்டில் குழந்தை, தாத்தா, பாட்டி ஆகியோரைப் பராமரிப்பதைப்போல நம்முடைய ஊருக்கு அருகில் வரும் காட்டு யானைகளை இம்சித்து விரட்டாமல் அதன் போக்கில் போக விட்டுவிட வேண்டும். மனிதர்கள் இல்லாமல் விலங்குகளும், விலங்குகள் இல்லாமல் மனிதர்களும் வாழ்வது முழுமையான வாழ்க்கை இல்லை. சற்றே பெரிய மனது வைத்து அவற்றின்பால் இரக்கமும் அக்கறையும் காட்டுவோம்.

யானைகள் யாரையாவது தவறுதலாகக் கொல்ல நேர்ந்துவிட்டால் குற்றவுணர்ச்சியால் அந்த இடத்தை விட்டுப் போகாது. அந்தச் சடலத்தை இலைகளாலும் குழைகளாலும் சில சமயங்களில் மண்ணைப் போட்டும் மூடி மறைக்கப் பார்க்கும். அந்தச் சடலத்தை நாய், நரி போன்ற விலங்குகள் கடித்துக் குதறாமல் இருக்க அவை தங்களுக்குத் தெரிந்த வகையில் பாதுகாக்கின்றன!

சமீபத்தில் மத்திய இந்தியாவில் காட்டுக்கு அருகிலிருந்த ஒரு வீட்டை முரட்டு யானையொன்று இடித்துத்தள்ளத் தொடங்கியது. திடீரென வீட்டுக்குள்ளிருந்து பச்சிளம் குழந்தையின் அழுகைச் சத்தம் வீறிட்டுக் கிளம்பியது. உடனே அந்த யானை அந்த வீட்டை இடிப்பதை நிறுத்தி விட்டு உள்ளே சென்று, அந்தக் குழந்தைக்கு அருகிலிருந்த இடிபாடுகளைத் தும்பிக்கையால் தூக்கி வெளியே வீசிவிட்டு அந்த இடத்தைச் சுத்தம் செய்துவிட்டு அகன்றது.

வீட்டு வேலைகளுக்கு நன்கு பழக்கப்படுத்தப்பட்ட ஒரு யானை, பெரிய கொட்டகை அமைக்க மூங்கில்களை அவற்றுக்காக தோண்டப்பட்டிருந்த குழிகளில் ஒவ்வொன்றாக் இறக்கிக்கொண்டே வந்தது. ஒரு குழியில் மட்டும் மூங்கிலை இறக்க மறுத்தது. சில முறை அங்குசத்தால் குத்திய பாகன், ஏன் இப்படி முரண்டு பிடிக்கிறது என்று யோசித்தபடியே அந்தக் குழிக்குள் எட்டிப்பார்த்தார். அந்த குழிக்குள் ஒரு நாய்க்குட்டி தூங்கிக்கொண்டிருந்தது.

# வெறும் 4 இலட்சம் வாக்குகளுடன் பேரம் பேச முயற்சிக்கும் கூட்டமைப்பு



வடக்கில் நான்கு இலட்சம் வாக்குகளை வைத்து கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பேரம் பேச முயற்சிப்பதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

### அமைச்சர் விமல் வீரவன்ஸ கிண்டல்

அனுராதபுரத்தில் நடை பெற்ற நிகழ்வு ஒன்றில், உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேசத்தின் சவால்களுககு மத்தியில் நாடு முன்னோக்கி செல்லும் இந்தச் சந்தர்ப்பத்தில் அரசியலில் பயந்த சுபாவ முடைய ஒருவரை ஜனரதிபதி பதவியில் அமர்த்தி நாட்டை மீண்டும் பின்னோக்கி இழுப்பதே தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தேவையாக உள்ளது.

இனவாத சக்திகளை பிரநி தித்துவப்படுத்தும் அல்லது பிரதி நிதித்துவப்படுத்தாத எவராக இருந்தாலும், இந்த தேசத்துரோக செயலுக்கு ஆதரவு வழங்கி, சர்வதேச சக்திகள் மற்றும் புலம் பெயர் தமிழர்களின் தேவைகளை நிறைவேற்ற உந்துசக்தியை கொடுக்க முன்வந்தால் அதனை விட அரசியல் காட்டிக்கொடுப்பு நாட்டில் வேறு எதுவுமில்லை.

உருத்ரகுமார், அருட் தந்தை இம்மானுவேல் ஆகியோருக்கு நாட்டில் பொம்மையான நிர்வாகத்தை ஏற்படுத்தி நாட்டை மீண்டும் பிரிக்கும் தேவையே உள்ளது எனவும் வீரவன்ஸ கூறியுள்ளார்.

# ஜனாதிபதி இருக்கும் வரை நாட்டைப் பிளவுபடுத்த முடியாது

### பிரதியமைச்சர் குணசேகர நம்பிக்கை

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இருக்கும் வரையில் புலி ஆதரவாளர்களினால் நாட்டை பிளவு படுத்த முடியாது என பிரதி அமைச்சர் ஏர்ல் குணசேகர தெரிவித்துள்ளார்.

கட்சி, இன, மத மற்றும் மொழி பேதங்களைக் களைந்து அனைத்து தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். அவ்வாறு செயற்பட்டால் மட்டுமே நாடு பிளவுபடுவதனை தடுக்க முடியும்.

சர்வதேச ரீதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தலை தூக்கினாலும், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையின் ஊடாக ஜனாதிபதி மகிந்த ஆட்சி செய்யும் வரையில் நாட்டில் பிரிவினை வாதம் ஏற்பட வாய்ப்பில்லை.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷவை தோற்கடிக்க கடுமையான முயற்சி எடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த முயற்சிகளை தோற்கடிக்கக் கூடிய சக்தி பொது மக்களுக்கு காணப்படுகின்றது என்றார்.

# நாடாளுமன்றில் கமலேஸ் சர்மா



பொதுநலவாய செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா நாடாளுமன்றத்திற்கு நேற்றுமுன்தினம் விஜமொன்றினை மேற்கொண்டுள்ளார்.

நாடாளுமன்ற சபாநாயகர் சமல் ராஜபக்ஷவை அவரது உத்தியோகபூர்வ அலுவலகத்தில் சந்தித்த பின்னர் நாடாளு மன்றத்திற்கு விஜயம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது.

நாட்டிற்கு வருகை தந்த நாயகம் சர்மா நாளை வரை நாட்டில் தங்க வுள்ளதாக நாடாளுமன்ற செய்திகள் தெரிவிக்கின்றன.

2008 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை பொதுநலவாய செயலாளர் நாயகமாக பதவி வகிக்கும் சர்மா 5 ஆவது செயலாளர் நாயகமாவார். இதற்கு முன்னர் லண்டனுக்கான இந்தியாவின் உயர்ஸ்தானிகராக இவர் பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது.

# பிரேஸில் ஜனாதிபதிக்கு மகிந்த வாழ்த்து

பிரேசிலின் ஜனாதிபதியாக மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ள டில்மா றூசூப்புக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

பலமான இருதரப்பு உறவுகளுக்காக அவருடன் பணியாற்ற எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி, தனது வாழ்த்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# அரசாங்கத்திலிருந்து விலகுவதற்கு இதுவரை முடிவு எடுக்கவில்லை

### ஜனாதிபதியிடம் ஹெல உறுமய தெரிவிப்பு



அரசாங்கத்தில் இருந்து விலகு வதற்கு தமது கட்சி இன்னமும் முடிவெடுக்கவில்லை என்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இடம்பெற்ற விசேட சந்திப்பின் பின்னர், நாடாளுமன்ற உறுப்பினர் அத்துரலியே ரத்தன தேரர் இதனை தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கத்தை சரியான பாதையில் கொண்டு வரவேண்டும் என்பதே தமது கட்சியின் நோக்கமாகும்.

இதன்படி தாம் அரசாங்கத்தின் பிழைகளை உரிய முறையில் சுட்டிக் காட்டியதாகவும் ரத்தன தேரர் குறிப்பிட்டார்.

19 ஆவது அரசியல் அமைப்பு தொடர்பில் அரசாங்கம் செயற்படுவதற்கு இன்னமும் வாய்ப்பு உள்ளது என்றார்.

சந்திப்புக்கு முன்னர் கருத்து வெளியிட்டிருந்த அத்துரலியே ரத்தன தேரர் இந்தச் சந்திப்பு தீர்க்கமானதாக இருக்கும் என்ற நம்பிக்கையை வெளியிட்டமை குறிப்பிடத்தக்கது.

# கடும் ஆபத்துக்கு உள்ளாகி இருக்கும் சிறுபான்மை இனங்களின் எதிர்காலம்

### அமைச்சர் ரவூப் ஹக்கீம் கவலை



இலங்கையில் சிறுபான்மை இனங்களின் எதிர்காலம் கடும் அபாயத்துக்குள்ளாகியிருப்பதாக அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கையிலுள்ள அடிப்படை வாத அமைப்புகளின் செயற்பாடுகள் காரணமாக முஸ்லிம்களுக்கு ஆபத்தான நிலை தோன்றியுள்ளது.

அடிப்படைவாத சக்திகளின் செயற்பாடுகள் தற்போது கடுமையான விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. இதன் காரணமாக முஸ்லிம்கள் மட்டுமன்றி ஒட்டு மொத்த சிறுபான்மை இனங்களும் அச்சுறுத்தல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர்.

புலிகளுடனான யுத்த வெற்றிக்குப் பின்னர் முஸ்லிம்கள் மீது கடுமையான அழுத்தங்கள் பிரயோகிக்கப்படுகின்றன. இதனை எவ்வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழர்களின் நிலையிலும் எதுவித முன்னேற்றங்களும் இல்லை. இவ்வாறான நிலையில் சிறுபான்மை இனங்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகி உள்ளது என்றார்.

# மன்னிப்புச் சபையின் அறிக்கையை கண்டிக்கிறார் உயர் கல்வி அமைச்சர்

இலங்கையின் பல்கலைக் கழக மாணவர்களின் போராட்டம் தொடர்பில் சர்வதேச மன்னிப்புசபை விடுத்துள்ள அறிக்கையை உயர்கல்வி அமைச்சர் எஸ்.பி திஸாநாயக்க கண்டித்துள்ளார்.

அண்மையில் நாடாளுமன்றத்துக்கு அருகில் இடம்பெற்ற அனைத்து பல்கலைக்கழக மாணவர் போராட்டத்தின்போது பொலிஸார் கண்ணீர் புகைப் பிரயோகம் மேற்கொண்டனர்.

இதன்போது 12 மாணவ, மாணவிகள் காயமடைந்தனர். இந்த சம்பவம் இடம்பெற்றதை அடுத்து சர்வதேச மன்னிப்புசபை இலங்கை அரசாங்கத்தை கண்டித்திருந்தது.

மாணவர் போராட்டத்தை



இலங்கை அரசாங்கம் அடக்குமுனைவதாக சர்வதேச மன்னிப்பு சபை குறிப்பிட்டிருந்தது. இந்த நிலையில் சர்வதேச மன்னிப்பு சபையை போன்ற சர்வதேச அமைப்புக்கள் முதலில் இலங்கையின் பல்கலைக்கழக முறைமை தொடர்பில் முழுமையாக தெரிந்து கொள்ள வேண்டும் என்று அமைச்சர் எஸ்.பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இதனை தெரிந்து கொள்ளாமல் சர்வதேச மன்னிப்புசபை அறிக்கையை வெளியிடும் போது அது நகைச்சுவையாக மாறி, அந்த நிறுவனத்தின் நம்பகத்தன்மையையும் பாதிக்கும் என்று அமைச்சர் கூறியுள்ளார்.

### -தேர்தலில் யாருக்கு ஆதரவு-

# முஸ்லிம் காங்கிரஸின் முடிவு நாளை மறுதினம் வெளியாகும்

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பது குறித்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் முடிவு நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வெளியிடப்படும் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பட்ஜெட், ஜனாதிபதி தேர்தல் குறித்து மக்களின் கருத்துக்களை கேட்டு வருகின்றோம். இவை தொடர்பான முடிவு எங்கள் கட்சித் தலைமையகத்தில் நாளை மறுதினம் வெள்ளியன்று எடுக்கப்படும். இந்த பட்ஜெட்டை மக்கள் “தேர்தல்” பட்ஜெட் என்றுதான் அழைக கின்றனர். இதனால் மக்களுக்கு நன்மை கிடைக்கும் நேரத்தில் 2015 ஜனவரியில் ஜனாதிபதித் தேர்தல் முடிந்துவிடும்.

அதன் பின்னர் உண்மையில் என்ன நடக்கும் பெப்ரவரி மாதத்தின் பின்னர் பட்ஜெட் என்ற பழத்தை மக்கள் ருசிக்க முடியாது. அத்துடன் பட்ஜெட்டில் துண்டு விழும் தொகையை அரசாங்கம் எவ்வாறு ஈடு செய்யப் போகிறது எனக் கூறவில்லை. என்றாலும் இந்த பட்ஜெட்டில் நன்மைகள் இல்லாமல் இல்லை.

எது எவ்வாறு இருந்தாலும் இந்த பட்ஜெட் 2015 ஜனவரி 01 இல் நடைமுறைக்கு வர வேண்டும். ஆனாலும் பட்ஜெட், ஜனாதி பதி தேர்தலில் அரசுக்கு ஆதரவு அளிப்பதா?, இல்லையா என்பது குறித்த முடிவு நாளை மறுதினமே இறுதி செய்யப்படும் என்றார்.

# நெல்லியடி பஸ் நிலையத்துக்கான அடிக்கல் நாட்டப்பட்டது



வடமராட்சி, நெல்லியடியில் மாகாண சபை நிதி ஒதுக்கீட்டில் புதிய பஸ் நிலையம் அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றது.

வடமாகாண சபையின் 38 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ள இந்தக் கட்டடத்துக்கான அடிக்கல்லை வடக்கு மாகாண மீன்பிடி, போக்குவரத்து அமைச்சர் பா.டெனீஸ்வரன் நாட்டி வைத்தார்

கரவெட்டி பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், மாகாணசபை உறுப்பினர்களான எம்.கே .சிவாஜிலிங்கம், கே.பரஞ்சோதி, வே.சிவயோகன், பா.கஜதீபன், ச.சுகிர்தன் ஆகியோரும் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் சபா.ரவீந்திரன், வல்வெட்டித்துறை நகரசபை உப தலைவர் க.சதீஸ், பருத்தித்துறை இ.போ.ச. முகாமையாளர் க.கந்தசாமி, வடமராட்சி சிற்றூர்திச் சேவைச் சங்க தலைவர் அ.அன்ரன். முச்சக்கர வண்டி சங்கத் தலைவர் மற்றும் கரவெட்டி பிரதேச சபை உறுப்பினர்கள், பொது மக்கள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

இந்தக் கட்டடம் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 திகதிக்குள் பூர்த்தியாக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (48,18)

## சண்டிலிப்பாய் சுகாதார பிரிவில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் டெங்கு நோயை கட்டுப்படுத்தும் முகமாக பரிசோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

சண்டிலிப்பாய் பிரிவில் டெங்கு நோயத்தாக்கம் அதிகரித்துள்ளதை அடுத்தே இந் நடவடிக்கை அமுல்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி இப்பகுதியில் டெங்குநோய் பரவுவதை தடுக்கும் வகையில் வீடுகள், பொது இடங்கள் என்பவற்றை பரிசோதனைக்கு உட்படுத்த தீர்மானித்துள்ளதாக சுகாதார வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார்.

## பண்ணிசைப்போட்டியில் மாணவி மூன்றாமிடம்



(யாழ்ப்பாணம்)

மாகாண மட்ட பண்ணிசைப் போட்டியில் கலாநிதி. ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலயம் மூன்றாம் இடம் பெற்று வெற்றி பெற்றுள்ளது

வடமாகாண மட்டத்தில் அண்மையில் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் இப் பாடசாலையில் கல்வி பயிலும் மாணவி செல்வி. சி. புருஷோத்தமி மூன்றாம் இடத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்துள்ளார்.

இம்மாணவிக்கு பயிற்சி வழங்கிய ஆசிரியர்களான திருமதி கலாசக்தி றொபேசன், திருமதி. பங்கயச்செல்வி முகுந்தன் ஆகியோரை பாடசாலை சமூகமும், பழைய மாணவர்களும் வாழ்த்தியுள்ளனர்.



ஏகலைவன் தென்மோடி நாட்டுக்கூத்து யாழ்.கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய பொன்விழாவன்று மேடையேற்றப்பட்டது. அக் கூத்தின் ஒரு பகுதியைக் காணலாம். (27)




## தேசிய மட்ட கால்பந்தாட்டம்

# வடமாகாணத்துக்கு வெள்ளிப் பதக்கம்



(அநுராதபுரம்)

40ஆவது தேசிய விளையாட்டு விழாவின் கால்பந்தாட்டப் போட்டியில் வட மாகாணம் வெள்ளிப் பதக்கத்தைக் கைப்பற்றியுள்ளது.

40ஆவது தேசிய விளையாட்டு விழா நேற்று முன்தினம் அநுராதபுரம் வட மத்திய மாகாண விளையாட்டுத் தொகுதி மைதானத்தில் நிறைவடைந்தது.

ஆண்களுக்கான கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை அநுராதபுரம் சிறைச்சாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் தென்மாகாண அணியும் வட மாகாண அணியும் மோதின. எட்டு நிமிடங்கள் நடைபெற்ற இப்போட்டி மின்னல் மற்றும் கடும் மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டது. இந்நிலையில் மேற்படி இரு அணிகளுக்குமிடையிலான இறுதிப் போட்டி நேற்று முன்தினம் முற்பகல் 10.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய தென்மாகாண அணி அடுத்தடுத்து கோல் மழை பொழிந்தது. இதில் தென் மாகாண அணி சார்பாக 22ஆவது நிமிடத்தில் அணித் தலை வர் டி. நுவன் குமார, 48ஆவது, 71ஆவது நிமிடங்களில் ஈ.பி. சன்ன ஆகியோர் கோல்களைப் போட்டு அணியை முன்னிலைப்படுத்தினர். இடைவேளையின் பின்னர் வடமாகாணத்துக்கு கிடைத்த கோல் அடிக்கும் இரு இலகுவான வாய்ப்புகள் கோட்டைவிடப்பட்டன. நிறைவில் தென்மாகாண அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று தங்கப் பதக்கத்தை வென்றது.

கடந்த 2009, 2012 ஆகிய ஆண்டுகளில் தங்கப் பதக்கத்தைக் கோட்டைவிட்டதுபோன்று இந்த ஆண்டும் தங்கப் பதக்கத்தை கோட்டைவிட்ட வட மாகாணம் வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இதேவேளை, இப்போட்டித் தொடரின் ஒட்டுமொத்த புள்ளிகள் அடிப்படையில் மேல் மாகாணம் 75 தங்கப் பதக்கங்கள், 54 வெள்ளிப் பதக்கங்கள், 57 வெண்கலப் பதக்கங்களை வென்று முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. வடமாகாணம் நான்கு வெள்ளி, 10 வெண்கலப் பதக்கங்களை வென்று இறுதி இடத்தைப் பிடித்துக் கொண்டது.

## தென்னாபிரிக்கா மீண்டும் முதலிடம்

(ஹமில்டன்)

நியூசிலாந்து அணிக்கெதிரான் ஒரு நாள் தொடரைக் கைப்பற்றியதன் மூலம் தென்னாபிரிக்க அணி மீண்டும் முதலிடத்தைப் பிடித்துள்ளது.

தென்னாபிரிக்கா, நியூசிலாந்து அணிகளுக்கிடையில் ஹமில்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற மூன்றாவது ஒருநாள் போட்டி மழையால் பாதியில் கைவிடப்பட்டது.

இதனையடுத்து முதலிரண்டு போட்டிகளில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணி, மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 2-0 என்ற கணக்கில் கைப்பற்றியது. நியூசிலாந்துக்கு எதிரான தொடரை கைப்பற்றிய தென்னாபிரிக்க அணி, ஐ.சி.சி., ஒருநாள் போட்டி அணிகளுக்கான தரப்படுத்தலில் 115 புள்ளிகளுடன் முதலிடம் பிடித்தது. இதன்மூலம் 5 ஆண்டுகளுக்கு பின், மீண்டும் முதலிடத்தை கைப்பற்றியது. அடுத்த இரண்டு இடங்களில் அவுஸ்ரேலியா (114 புள்ளி), இந்தியா (113) அணிகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஐந்து ஆண்டுகளின் பின்னர் மீண்டும் முதலிடம் பிடித்தமை உத்வேகம் அளிக்கின்றது. குறிப்பாக, உலகக் கிண்ண கிரிக்கெட் தொடர் நெருங்கி வரும் இவ்வேளையில் நாங்கள் முதலிடத்தைப் பிடித்தமை என்பது உண்மையிலேயே மகிழ்ச்சி. அதில் சாதிக்க இது மேலும் ஊக்கத்தை அளிக்கும் என தென்னாபிரிக்க அணிக்கப்டன் டிவில்லியர்ஸ் தெரிவித்துள்ளார்.

## வலுக்கிறது கருத்து மோதல்

### பிராவோ மீது மீண்டும் சாமுவேல்ஸ் சீற்றம்

இந்திய கிரிக்கெட் தொடர் இடையில் இரத்து செய்யப்பட்டமை தொடர்பில் மேற்கிந்தியத்தீவுகளின் ஒருநாள் போட்டி கப்டன் பிராவோவுக்கும், அந்த அணியின் முன்னணி துடுப்பாட்ட வீரர் சாமுவேல்ஸுக்கும் இடையே கருத்து மோதல் வலுத்து வருகின்றது.

இந்திய தொடரை பாதியில் இரத்து செய்துவிட்டு நாடு திரும்ப எனக்கு விருப்பம் இல்லை என்றும், இந்திய தொடரை முழுமையாக முடிக்க விரும்பினேன் என்றும் சாமுவேல்ஸ் அண்மையில் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இது பிராவோவுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது. அவர் இது குறித்து கருத்துத் தெரிவிக்கையில், அனைத்து வீரர்களும் இணைந்து தான் தொடரை இரத்து செய்யும் முடிவை எடுத்தனர்.எனது தனிப்பட்ட முடிவு அல்ல. வீரர்கள் கூட்டத்தில் சாமுவேல்ஸ் ஆவேசமாக பேசினார். எந்த முடிவுக்கும் துணை நிற்பதாக கூறிய அவர் இப்படிக் கருத்துத் தெரிவித்தமை அதிர்ச்சியானதே என்று பிராவோ பதிலடி கொடுத்தார்.

இந்த நிலையில் பிராவோ என்ன நடந்தது என்பது பற்றி விளக்கம் அளிக்க வேண்டியது அவசியம் என்று சாமுவேல்ஸ் நேற்று தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கருத்துத் தெரிவித்ததாவது,

மே.தீவுகள் வீரர்கள் சங்கம் எனக்கு ஒரு போதும் ஆதரவு தெரிவித்ததில்லை. அதில் நான் உறுப்பினராக இல்லை. இந்தப் பிரச்சினைக்கு காரணம் மே.தீவுகள் வீரர்கள் சங்கம் தான். அதன் தலைவர் வேவல் ஹிண்ட்ஸ் பிரச்சினையை பெரிதாக்கினார்.

இந்த விடயத்தில் பிராவோ என்ன நடந்தது என்பது பற்றி விளக்கம் அளிப்பது அவசியமாகும். வீரர்கள் கூட்டத்தில் நான் எதுவும் ஆக்ரோஷமாக கூறவில்லை. ஏனென்றால் என்னிடம் யாரும் எந்த கேள்வியும் கேட்கவில்லை. எந்த ஒரு முடிவுக்கும் ஆதரவாக இருப்பதாக நான் ஒருபோதும் கூறவில்லை என அவர் தெரிவித்துள்ளார். இதன் மூலம் சாமுவேல்ஸுக்கும், பிராவோவுக்கும் தொடர்ந்தும் கருத்து மோதல் நிலவுகிறது.

## விபுலானந்தன் நினைவு கூடைப்பந்து யாழ். மத்தியில் நாளை இறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையினால் வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் அமரர் பொன். விபுலானந்தன் நினைவு கூடைப்பந்தாட்டத் தொடரின் இறுதி ஆட்டங்கள் நாளை மாலை யாழ் மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

24 அணிகள் பங்குகொண்ட இப்போட்டித் தொடர் வடமாகாண ரீதியாக நடாத்தப்பட்டது. இதில் பெண்கள் பிரிவில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியும் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி அணியும் மோதின. ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய இராமநாதன் கல்லூரி அணி 35-27 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது.

தொடர்ந்து நடைபெற்ற இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி அணி 27-15 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.


இதேவேளை, ஆண்களுக்கான முதலாவது அரையிறுதிப் போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணியும் மாணிப்பாய் ஏஞ்சல் சர்வதேசப் பாடசாலை அணியும் மோதின. விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் மல்லாவி மத்திய கல்லூரி அணி 43-32 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறியது.

நாளை மாலை நடைபெறும் பெண்களுக்கான இறுதிப் போட்டியில் யாழ். இந்து மகளிர் கல்லூரி அணியும் இராமநாதன் கல்லூரி அணியும் மோதவுள்ளன. இதனைத் தொடர்ந்து ஆண்களுக்கான இறுதிப். போட்டி நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (93, 48)

## மானிப்பாய் இந்துவுக்கு வெண்கலம்

(நீர்கொழும்பு)

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்துப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி வெண்கலப் பதக்கத்தை வென்றுள்ளது. அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான தேசிய மட்ட கால்பந்துப் போட்டித் தொடரின் இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான ஆட்டங்கள் நேற்று நீர்கொழும்பு பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது. மூன்றாமிடத்திற்கான போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணியும் மன்னார் சென். சேவியர் ஆண்கள் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளுமே சமபலம் கொண்டவை என்பதால் இப்போட்டி இறுதிவரை விறுவிறுப்பாக நடைபெற்றதுடன் இரு அணிகளாலும் ஒவ்வொரு கோலையே பெற்றுக்கொள்ள முடிந்தது. இந்நிலையில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரி அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வெண்கலப்பதக்கத்தை வென்றது. (93)





ஆசிய பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் வெற்றி பெற்ற இலங்கை குழாமை கௌரவிக்கும் நிகழ்வொன்று எம்.ரீ.வி.எம்.பீ.சி ஊடக வலையமைப்பின் பிரதான அலுவலக வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. தென்கொரியாவில் நடைபெற்ற ஆசிய பரா ஒலிம்பிக் விளையாட்டு விழாவில் இலங்கைக்கு ஒரு தங்கப் பதக்கம் உட்பட 14 பதக்கங்கள் கிடைத்தன. இக்கௌரவிப்பு நிகழ்வில் முன்னாள் இலங்கை கிரிக்கெட் கப்டன் அர்ஜுண ரணதுங்க, சுசந்திகா ஜயசிங்க, தமயந்த தர்ஷா ஆகியோர் கலந்து கொண்டு வீரர்களுக்கு விருது வழங்கிக் கௌரவித்தனர்.

# முரளி நல்லிணக்க ருவென்ரி-20 இன்று ஆரம்பம்

## கொழும்பு ஆனந்தா கல்லூரியுடன் யாழ். மாவட்ட அணி இன்று மோதல்




(யாழ்ப்பாணம்)

முரளி நல்லிணக்க ருவென்ரி-20 கிரிக்கெட் இன்று யாழ்ப்பாணம், ஒட்டு சுட்டான், கிளிநொச்சி, மாங்குளம் ஆகிய இடங்களில் ஆரம்பமாகவுள்ளது. சென். ஜோண்ஸ் கல்லூரியில் இன்று நடை பெறவுள்ள முதல் போட்டியில் யாழ். மாவட்ட கூட்டு அணி கொழும்பு ஆனந்த கல்லூரி அணியை எதிர்கொள்ளவுள் ளது.

மூன்றாவது ஆண்டாக நடைபெற வுள்ள இப்போட்டியில் ஆண், பெண் என 24 அணிகள் பங்குகொள்கின்றன.

இப்போட்டிகளில் குழு ஏ யில் யாழ். பாடசாலைகள் கூட்டு அணி, கொழும்பு ஆனந்தா, மொறட்டுவை பிறின்ஸ் ஒவ் வேல்ஸ், சர்வதேச பாடசாலைகள் கூட்டு அணி ஆகியனவும் குழு பி யில் மட்டக்களப்பு, - திருகோணமலை பாட சாலைகள் கூட்டு அணி, காலிறிச் மண்ட், கரந்தெனிய மத்திய கல்லூரி, பண்டாரவளை புனித தோமஸ் ஆகிய னவும் பங்குபற்றவுள்ளன.

குழு சி யில் கிளிநொச்சி, - முல்லைத்தீவு பாட சாலைகள் கூட்டு அணி, நடப்பு சம்பியன் பம்பலப் பிட்டி புனித பீற்றர், சீனிகம பாடசாலைகள் கூட்டு அணி, மொனராகலை,- பதுளை பாடசாலைகள் கூட்டு அணி ஆகியனவும் குழு டி யில் மன்னார், வவுனியா பாடசாலைகள் கூட்டு அணி, ரத்கம தேவபத்திராஜ, நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா, பொலன்னறுவை மாவட்ட பாடசாலைகள் கூட்டு அணி ஆகியனவும் போட்டியிடுகின்றன.

லீக் அடிப்படையில் நடைபெறும் இப்போட்டித் தொடரில் முதல் நான்கு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்படும்.

பெண்களுக்கான போட்டி பகிரங்க அடிப்படை யில் நடாத்தப்படும். பெண்களுக்கான போட்டி களில் எட்டு அணிகள் இரண்டு குழுக்களில் பங்கு பற்றுவதுடன் ஒரு குழுவில் வடக்கு. கிழக்கு பெண்கள் கூட்டு அணி இடம்பெறுகின்றமை சிறப்பம்சமாகும். லீக் சுற்று முடிவில் முதலிரண்டு இடங்களைப் பெறும் அணிகள் நேரடியாக இறுதி ஆட்டத்தில் விளையாட தகுதிபெறும்.

இப்போட்டித் தொடர் கிளிநொச்சி மத்திய கல்லூரி, மாங் குளம், மகாவித்தியாலயம், ஒட்டுசுட்டான் மகாவித்தியாலம், யாழ். மத்திய கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது. இப்போட்டித்தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, யாழ். மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ள ஆரம்ப நிகழ்வில் இலங்கை அணியின் சாதனைப் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் கலந்து கொண்டு சிறப் பிக்கவுள்ளார்.

இதேவேளை, யாழ். மாவட்ட பாடசாலைகள் கூட்டு அணியின் விபரம் நேற்று வெளியிடப்பட்டது. 16 பேர் கொண்ட இந்த அணியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூ ரியைச் சேர்ந்த ஜெனக்சன், ஜெனந்தன், கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த உதயசுபேசன், யாழ். இந்துக் கல்லூரியைச் சேர்ந்த மதுஷன், சஜிகன், கல்கோபன், கொக்குவில் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த சத்தியன், சென். ஜோண்ஸ் கல்லூரியைச் சேர்ந்த துவாரக சீலன், கபில்ராஜ், பிளமிங், லோகதீஸ்வர், கானமிர்தன், சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த தனுசன், யாழ். மத்திய கல்லூரியைச் சேர்ந்த கே. மதுஷன், நிரோசன், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியைச் சேர்ந்த கதியோன் ஆகி யோர் யாழ். பாடசாலைகள் கூட்டு அணியில் இடம்பிடித் துள்ளனர். (எஸ்.பி.)

## முரளி நல்லிணக்க தொடர் குறித்து சங்கா, முரளி, மஹேல கருத்து

கிராமப்புற மக்களிடையேயும் நகர்ப்புற மக்களிடையேயும் நிலவும் இடைவெளியை நிரப்பும் ஒரு பாலமாகவே முரளி நல்லிணக்க ருவென்ரி-20 நடாத்தப்படுகின்றது. தென் பகுதியில் சீனிகமவில் நடாத்தப்பட்ட முதலாவதுபோட்டிகள் அதன் பின்னர் ஒத்திசைவை கட்டியெழுப்பும் நோக்கில் வட பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டன. வட பகுதியில் உள்ள சிறார்களுடன் தோழமையை ஏற்படுத்துவது இதன் மற்றொரு நோக்கமாகும். அதுமட்டுமல்லாமல் சிறார்கள் இத்தகைய போட்டிகளைக் காணும்போது குதூகலிப்பில் மிதக்கின்றனர். கடந்த காலங் களை விட இப்போட்டிகள் வெற்றிப் பாதையில் சென்று கொண்டிருக்கின்றன. இதன் மூலம் வட பகுதியில் உள்ள சிறார்களின் கனவுகள், சிந்தனைகள் எதிர்காலத்தில் நனவாக அமையவேண்டும் என்பதற்காகவே நாங்கள் உழைக்கின்றோம்.

**குமார் சங்கக்கார**

இப்போட்டிகளை நடாத்துவதில் அனைவரும் அதிக பட்ச பங்களிப்பை வழங்கிவருகின்றனர். மஹேலவும் சங்காவும் தங்களது எண்ணங்களில் உருவானவற்றை செயலுருவில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர். இதன் பலனாக வடபகுதி யினர் தென் பகுதியினருடன் கிரிக்கெட் விளையாடுவதற்கான வாய்ப்பு உருவானது. இப்போட்டிகள் நடாத்தப்படுவ- தற்கு தனிப்பட்ட சிலர் எதிர்ப்பு வெளியிட்டனர். ஆனால் ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் ஆகியோரின் ஆசியும் ஆதரவும் எங்களுக்கு நிறையவே இருக்கின்றது. எனவே வேறு எவராலும் இப்போட்டிகளை தடுத்து நிறுத்த முடியாது. இதனை இன்னும் பல்லாண்டுகளுக்கு தொடர்ந்து நடாத்த வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கின்றோம்.

**முத்தையா முரளிதரன்**

ஆரம்பத்தில் எத்தனையோ தடங்கல்கள் ஏற்பட்ட போதி லும் நாங்கள் அவற்றை எல்லாம் விஞ்சி வெற்றி நடைபோட்டு வந்துள்ளோம். யுத்தம் முடிந்த பின்னர் தற்போது வட பகுதியில் ஆற்றல்கள் வெளிப்படத் தொடங்கியுள்ளன. சிறந்த அணிகளோடு சரிசமமாக போட்டியிடக்கூடிய ஆற்றல்கள் வடபகுதி சிறார்களிடம் காணப்படுகின்றன. அவர்களது எதிர் கால நலன்கருதி ஓர் அத்திவாரம் இடப்படவேண்டும். அத்துடன் வசதி வாய்ப்புகளும் செய்துகொடுக்கப்படவேண்டும். கூட்டு அணி என்ற நிலை மாறி வட பகுதி பாடசாலைகள் இப்போட்டி களில் தனி அணிகளாக பங்குபற்ற வேண்டும் என்பதே எனது அவா. அதன் மூலம் இலங்கை அணிக்கு விளையாட வேண்டும் என்ற வடபகுதி வீரர்களது குறிக்கோள் நிறை வேறவேண்டும். இங்கு ஆனந்த, நாலந்தா போன்ற பாடசாலை களுக்கு உள்ள வசதி வாய்ப்புகளைப் போன்று அவர்களுக்கும் வசதி வாய்ப்புகள் செய்துகொடுக்கப்படவேண்டும்.

**மஹேல ஜெயவர்த்தன**

### கால்பந்து லீக்குகளின்

## அபிவிருத்திப் பேரவை அங்குரார்ப்பணம்

(கிளிநொச்சி)

வடமாகாணத்தில் கால்பந்தாட் டத்தை அபிவிருத்தி செய்யும் முகமாக வடமாகாண கால்பந்தாட்ட அபிவிருத் திப் பேரவை கிளிநொச்சியில் அங் குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள் ளது.

இவ் வைபவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை கிளிநொச்சி கூட்டுறவுச் சபை மண்டபத்தில் வடமாகாணத்திற்கு உட் பட்ட கால்பந்தாட்ட லீக்குகள் இணைந்து இந்த பேரவையை அங்குரார்ப்பணம் செய்து வைத்தன.

இந்நிலையில் கிளிபேட் அன்ரனிப் பிள்ளை தலைமையில் இடம்பெற்ற கூட்டத்தில் பின்வருவோர் நடப்பாண்டுக் கான புதிய நிர்வாக உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தலைவர் - கிளிபேட் அன்ரனிப் பிள்ளை (யாழ். கால்பந்தாட்ட லீக்), உப தலைவர்- கே.ஸ்கந்தன் (வவுனியா கால்பந்தாட்ட லீக்), செயலாளர்- எம்.டி. வேதாபரணம் (வடமராட்சி கால்பந்தாட்ட லீக்), உப செயலாளர்- எஸ்.நிமலதாஸ் (கிளிநொச்சி கால்பந்தாட்ட லீக்), பொரு ளாளர் அன்ரனி ஜெராட் (மன்னார் கால் பந்தாட்ட லீக்) ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன், நிர்வாகக் குழு - என்.நவரத்தினராசா (வலிகா- மம் கால்பந்தாட்ட லீக்), அருட்தந்தை சி.வி.பீற்றர் (தீவக கால்பந்தாட்ட லீக்), எஸ்.அருளானந்தசோதி (பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்), வைத்தியகலாநிதி வீ.கணேசராசா ( முல்லைத்தீவு கால்பந் தாட்ட லீக்) ஆகியோர் நிர்வாகக் குழு உறுப்பினர்களாக தெரிவு செய்யப்பட் டுள்ளனர்.

# புற்றரை ஆடுகள அங்குரார்ப்பணம் பற்றிக்ஸ் கல்லூரியில் இன்று



(யாழ்ப்பாணம்)

வடமாகாண கிரிக்கெட் வீரர்களை வளர்த்தெடுக்கும் நோக்கில் நிர்மாணிக் கப்பட்ட புற்றரை ஆடுகள அங்குரார்ப் பணம் இன்று காலை சென். பற்றிக்ஸ் கல்லூரியில் இடம்பெறவுள்ளது.

இலங்கை கிரிக்கெட் சபை, சென். பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் யாழ். மாவட்ட படைத் தலைமையகம் ஆகியவற்றின் உதவியுடன் இம்மைதானம் அமையப் பெற்றது.

இன்று காலை இடம்பெறவுள்ள அங்குரார்ப்பண நிகழ்வில் இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவர் சனத் ஜெயசூரிய கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பிக்கவுள்ளார்.

அத்துடன் வடக்கு-கிழக்கு இணைந்து 23 வயதுப் பிரிவு அணிக்கும், சனத் ஜெயசூரிய தலைமையிலான முன்னாள் இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களுக்குமிடையிலான கண்காட்சிப் போட்டி ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இதேவேளை, மைதானத்தை கடந்த வாரம் பார்வையிட்ட இலங்கை கிரிக்கெட் சபையின் உப தலைவர் லயன் மொகான் டி சில்வர் கருத்து தெரி விக்கையில். வடமாகாணத்தில் கிரிக்கெட் வளர்க்கப்பட வேண்டும். அதன் மூலம் யாழ். மாவட்ட வீரர்களும் தேசிய அணி யில் இடம்பெறவேண்டும் என்பதற் காகவே யாழ்ப்பாணத்திலும் புற்றரை யிலான கிரிக்கெட் ஆடுகளம் அமைக் கப்பட்டுள்ளது என்றார். (எஸ்.பி.)

விளையாட்டுச் செய்திகள்

## நாளை 2ஆவது டெஸ்ட்

(அபுதாபி)

பாகிஸ்தான், அவுஸ்ரேலிய அணி களுக்கிடையிலான இரண்டு போட்டி களைக் கொண்ட டெஸ்ட் தொடரின் இரண்டாவதும், இறுதியுமான ஆட்டம் இன்று அபுதாபியில் நடைபெறவுள்ளது. ஏற்கனவே. நடைபெற்ற முதல் போட்டி யில் பாகிஸ்தான் அணி அபார வெற்றிபெற்றது.

இந்நிலையில் இப்போட்டி இரு அணிகளுக்கும் முக்கியத்துவம் மிக்க தாக அமையவுள்ளதாக கிரிக்கெட் வல்லு நர்கள் தெரிவித்துள்ளனர்.

# சினிமா ஹீரோக்களின் போலி சமூக அக்கறை




கத்தி படத்தைப் பற்றி கருத்து தெரிவித்திருக்கும் சினிமா பிரபலங்கள் அதில் சொல்லப்பட்டிருக்கும் சமூகப் பிரச்சினைக்காக படத்தை புகழ்ந்துள்ளனர். இது வெறும் படமல்ல என்றும் தெரிவித்துள்ளனர். ரசிகர்களும் சமூக அக்கறையுடன் எடுக்கப்பட்டிருக்கும் படம் என்று புல்லரிக்கின்றனர்.

நாயக பிம்பத்தை கட்டியெழுப்ப சமூகப் பிரச்சினைகளை தொட்டுக் கொள்ள ஊறுகாயாக தமிழ் சினிமா எப்போதுமே பயன்படுத்தி வந்திருக்கிறது. கத்தியிலும் அப்படிதான் முருகதாஸ் தண்ணீர் பிரச்சினையை தொட்டிருக்கிறார், ஊறுகாய் அளவுக்கு.

தமிழ்ப்பட ஹீரோக்கள் திரையில் எந்தப் பிரச்சினைக்காக போராடுகிறார்களோ அந்தப் பிரச்சினைக்கு காரணமானவர்களின் கைப்புள்ளயாகதான் நிஜத்தில் இருக்கிறார்கள். உதாரணமாக கத்தியில் சொல்லப்பட்டிருக்கும் தண்ணீர் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம். இந்த கொள்ளைக்கு தலைமை தாங்குகிறவர்கள் கோலா கம்பெனிகள்.

முக்கியமாக கோகோ கோலாவும், பெப்சியும். கோக் கம்பெனிதான் தாமிரபரணியில் தண்ணீர் உறிஞ்சியது. அந்த கோக் கம்பெனியின் விளம்பரத்தில் கோக் குடி கொண்டாடு என்று ஆடி நடித்தவர் விஜய். அதற்காக கோடிக்கணக்கில் பணத்தையும் பெற்றுக் கொண்டார். கோக் கம்பெனியின் தண்ணீர் கொள்ளைக்கு எதிராக பொது நல அமைப்புகள் தொண்டை வறள கத்திக் கொண்டிருந்த போது கோக் குடி கொண்டாடு என்று ஆடி கோடிகளில் சம்பாதித்தவர் இப்போது தண்ணீர் பிரச்சினை குறித்த படத்தில் நடித்து தனது நாயக பிம்பத்தை புதுப் பித்துக் கொண்டுள்ளார்.

சினிமாவில் இப்படி ஊறுகாயாக சொல்லப்படும் எந்தப் பிரச்சினையும் ஜனங்களை விழிப்படையச் செய்து அந்தப் பிரச்சினைக்கு எதிராக போராட வைத்ததாக சரித்திரம் இல்லை. மாறாக அப்படி நடித்தவர்களின் நாயக பிம்பம் கற்பனைக்கு எட்டாத அளவுக்கு ஊதி பெரிதாக்கப்பட்டிருக்கிறது.

அப்படியொரு போலி சமூக அக்கறைதான் கத்தி படத்திலும் காட்டப்பட்டிருப்பது.

1993 இல் வெளியான ஜென்டில்மேனின் கொள்ளை அடித்த பணத்தில் ஏழைகளுக்கு கல்வி வழங்கினார் ஷங்கர். 2007 இல் அதே கல்விப் பிரச்சினையைத்தான் சிவாஜியிலும் கையிலெடுத்தார். இன்னும் இருபது வருடங்கள் கழித்தும் இதே பிரச்சினையைப் பற்றி அவர் படமெடுப்பார்.

ஷங்கர், முருகதாஸ் போன்றவர்களின் படங்கள் சமூகப் பிரச்சினைகள் குறித்துப் பேசுவதில்லை. மாறாக சமூகப் பிரச்சினைகளை என்டர்டெயின் செய்கின்றன. பிரச்சினைகள் குறித்து பேசாமல் மௌனம் சாதிப்பதைவிட, இப்படி பிரச்சினைகளை என்டர்டெய்ன் செய்வது ஆபத்தானது.

இருக்கிற பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட்டது போன்றும், நம்முடைய பிரச்சினைகள் தீர்க்கப்பட்டது போன்றும் ஒருவித போலி மயக்கத்தை பார்வையாளர்களுக்கு இப்படிப்பட்ட படங்கள் தருகின்றன.

ஒருபக்கம் கோக் விளம்பரங்களில் நடித்து பணம் சம்பாதிப்பது. இன்னொரு பக்கம் தண்ணியை கொள்ளையடிச்சிட்டாங்க என்று பிலிம் காட்டுவது. இந்த அட்டைக் கத்திகளைத்தான் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம்.

**- வெப்துனியா**

சரியாக ஐந்தாண்டுகள் இருக்கும். குமுதத்தில் இருந்த நேரம். பத்திரிகையாளர் தேவா மூலம் அறிமுகமானார் கோபி. அதிக படிப்பாளி. படைப்பாளியும்கூட. திரைப்படக்கதை மற்றும் இயக்கம் பற்றி பிரமிப்பாக பேசுவார்.

அப்படித்தான் தண்ணீருக்கான அரசியல், பன்னாட்டு பெரு முதலாளிகளின் பங்கு என்ற விதத்தையும் விவரித்தார். அவரது பகுதியில் நடந்த உண்மைச் சம்பவத்தை வைத்து. எப்படி என்றால் திரைக்கதையாகவே. முற்போக்கு சிந்தனையோடு இப்படி மக்கள் பிரச்சினையை அணுகும் விதம் சினிமாவில் குறைவு.

"காவிரி தண்ணீர்ப் பிரச்சினை என்றால் தஞ்சை விவசாயி மட்டும்தானே போராடுறான். மற்றவர்கள் இதை வேடிக்கை பார்த்தபடியே, "நமக்கென்ன வந்தது" என்று போகிறார்களே ஏன்? தண்ணீர்க் கஷ்டம் பற்றி அவர்களுக்குத் தெரியவில்லை. அவர்களுக்கும் அது தெரிய வேண்டுமானால் வீராணம் குழாயை உடைக்கணும். பூண்டி நீர்தேக்கத்தை முடக்கணும். நமக்குச் சோறு போடுற விவசாயிகளுடைய கஷ்டம் அப்பதான் இந்த நகரவாசிகளுக்குப் புரியும். இரண்டு நாள், குடிக்கவும் குடிநீர் இல்லாம தவிச்சால், காவிரி நதிநீர் பிரச்சினையும், விவசாயிகளுடைய போராட்டத்தையும் புரிந்துகொள்வார்கள்" என்று கோபி உணர்ச்சிவசப்பட்டு பேசினார்.

பிறகு ஒரு நாள் வந்தார். பிரபல இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸிடம் இந்தக் கதையைப்

---



# கே.வி. மகாதேவன் 19

**- பி.ஜி.எஸ்.மணியன் -**

வண்ணக்கிளி படத்தில் மற்றொரு பாடல்..

"வண்டி உருண்டோட அச்சாணி தேவை - என்றும்

அதுபோல வாழ்க்கை ஓடவே ரெண்டு அன்புள்ளம் தேவை" - சீர்காழி கோவிந்தராஜன் - பி. சுசீலா பாடும் கருத்துச் செறிவுள்ள ஒரு பாடல். எளிமையான பாடல் வரிகளும் - சீர்காழியும், சுசீலாவும் பாடி இருக்கும் விதமும் நம்மையும் அவர்கள் காதலுக்குள் கட்டிப்போட்டு விடுகின்றன.

மதுவின் மயக்கத்தில் ரவுடிக் கணவன் மனைவியைப் பாடச் சொல்ல அவள் பாடினால் எப்படி இருக்கும்?

"அடிக்கிற கைதான் அணைக்கும்."

இந்தப் பாடலைப் பாடியது எப்படி?

திருச்சி லோகநாதன் மதுவின் வாடையே பிடிக்காத நபர். அவரிடம் போதையில் நாக்குழறப் பாடவேண்டும் என்றார் கே.வி. மகாதேவன். எப்படிப் பாடுவது என்று யோசித்தவர் புகையிலையை வாயில் அடக்கிக்கொண்டு பாடிமுடித்தாராம்.

பி. சுசீலாவின் இணைக்குரலில் மிளிரும் அமைதியும், தொனிக்கும் பாவமும் பாடலை மீண்டும் மீண்டும் கேட்கத் தூண்டும்.

பி. சுசீலா அறுபதுகளில் தனித்த இசை அரசியாக பவனி வர ஏணிப்படிகளாக உதவிய பாடல்கள் என்று கூட "வண்ணக்கிளி" படப் பாடல்களைச் சொல்லலாம்.

"சின்ன பாப்பா எங்க செல்ல பாப்பா" - காது மடல்களை வருடும் ஒரு மெலடி. கீரவாணி ராகத்தில் மெய்மறக்க வைக்கும் ஒரு அருமையான, நயம் மெல்லடி வைத்தாற்போல அமைந்த பாடல் இது.

"குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே

ஐக்கியமாகிவிடும் இது உண்மை ஜகத்திலே" - பி. சுசீலாவின் குரலில் இன்னொரு இனிமையான பாடல். மூன்றுமே ஒன்றை ஒன்று விஞ்சி நிற்கும் பாடல்கள்.

அதுவரை மகாதேவனின் இசையில் வெளிவந்த படங்களில் அனைத்துப் பாடல்களுமே பெருவெற்றி பெற்ற பாடல்களாக அமைந்தன என்று சொல்ல முடியாது. படத்துக்கு ஒன்றிரண்டு பாடல்கள் மீண்டும் மீண்டும் கேட்க வைக்கும் பாடல்களாக அமைந்துவிடும்.


ஆனால். வண்ணக்கிளி படத்தைப் பொறுத்த வரையில் பாடல்கள் அனைத்துமே மிகப் பெரிய வெற்றியைக் கண்டன.

"வண்ணக்கிளி" வெளிவந்த 1959 ஆம் ஆண்டு கே.வி. மகாதேவனைப் பொறுத்த அளவில் மறக்க முடியாத ஒரு பொன்னான ஆண்டு என்று தான் சொல்லவேண்டும்.

"இசைச் சக்ரவர்த்தி" ஜி. ராமநாதனை தனது இசையில் படத்தில் பாடவைத்தார் என்றால் அது மறக்க முடியாத ஆண்டுதானே?

இந்த இடத்தில் "இசைச் சக்ரவர்த்தி" ஜி. ராமநாதன் பற்றி இன்றைய தலைமுறையினர் தெரிந்துகொள்ள ஒரு சிறு அறிமுகம்.

திரை இசையின் ஆரம்பகாலத்தில் அதாவது பேசும் சினிமா அறிமுகமான காலகட்டத்தில் திரை உலகில் இசை அமைப்பாளராக



ஜி.ராமநாதன்



கே.வி.மகாதேவன்

அறிமுகமானவர். இசை என்பது அவரது ரத்தத்தோடு கலந்த ஒன்று.

"பறவைகள் எழுப்பும் ஒலிக்குக் கூட ஸ்வரம் சொல்லக்கூடியவர்" என்று அவரைப் பற்றிக் குறிப்பிடுகிறார் பிரபல கதை வசனகர்த்தா ஆரூர்தாஸ்.

மூன்று தீபாவளிகளைக் கடந்து ஓடிய மாபெரும் வெற்றிச் சித்திரமான "ஹரிதாஸ்", "மந்திரிகுமாரி", "தூக்குத்தூக்கி", உத்தமபுத்திரன் (பி. யு. சின்னப்பா நடித்த முதல் படத்துக்கும், நடிகர் திலகம் சிவாஜிகணேசன் நடித்த அதன் மறுபதிப்பான இரண்டாவது படத்துக்கும்), மதுரை வீரன், சக்கரவர்த்தி திருமகள், அரசிளங்குமரி ஆகிய பல வெற்றிச் சித்திரங்களுக்கு இசை அமைத்து காலத்தால் அழிக்க முடியாத காவியப் பாடல்களைக் கொடுத்தவர்.

அது மட்டும் அல்ல. ஆசியா கண்டத்திலேயே மிகச் சிறந்த இசை அமைப்பாளர் என்ற விருதை தமிழ்ப் படத்துக்கு இசை அமைத்து வாங்கிய பெருமைக்குரிய ஒரே இசை அமைப்பாளர் அவர்தான்.

"வீரபாண்டிய கட்டபொம்மன்" படத்துக்கு அப்படி ஒரு விருதை அவர் கெய்ரோவில் நடந்த ஆசிய ஆபிரிக்க திரைப்பட விழாவில் வாங்கினார்.

இப்படிப்பட்ட ஒரு மாமேதை கே.வி. மகாதேவனின் இசை அமைப்பில் பாடினார் என்றால் அது பெருமைக்குரிய விஷயம் தானே?

ரவீந்தரநாத் தாகூரின் "டாங்கே வாலா" என்ற க்தை கே. சோமு இயக்கத்தில் ஏ.பி. நாகராஜனின் கதை வசனத்தில் "அல்லி பெற்ற பிள்ளை" திரைப்படமாக வெளிவந்தது. எஸ்.எஸ். ராஜேந்திரன், ராஜசுலோச்சனா, எம்.என்.ராஜம் நடித்திருந்த இந்தப் படத்தில் மருதகாசி பாடலை தனது இசை அமைப்பில் ஜி. ராமநாதன் அவர்களைப் பாடவைத்தார் கே.வி. மகாதேவன்.

பாடல் பதிவுக்கு ஜி. ராமநாதன் வந்தபோது அந்த இசை மேதையை எப்படி வேலை வாங்குவது என்ற தயக்கம் மகாதேவனுக்கு ஏற்பட்டது.

ஆனால் ராமநாதனோ, "நான் இங்கே ஒரு பாடகனாகத் தான் வந்திருக்கிறேன். நீங்கள் போட்டிருக்கிற டியூனுக்கு தகுந்தபடிதான் நான் பாடியாகணும் நோட்ஸைக் குடுங்க" - என்று கூறி வாங்கிக்கொண்டு பாடினார்.

"எஜமான் பெற்ற செல்வமே என் சின்ன எஜமானே.

பசும்பொன்னே என் கண்ணே

அழாதே அழாதே" - ராமநாதன் பாடி முடித்ததும் அவரது குரலில் வெளிப்பட்ட உணர்ச்சிப்பெருக்கு அந்த ஒலிப்பதிவுக் கூடத்தில் இருந்த கே.வி. மகாதேவன், ஏ.பி. நாகராஜன் உட்பட அங்கிருந்த அனைவரின் கண்களிலும் கண்ணீரை வரவழைத்தது.

கீரவாணி ராகத்தில் இந்தப் பாடலை வெகு நேர்த்தியாகச் செதுக்கி இருக்கிறார் கே.வி. மகாதேவன்.

அதனை ஜி. ராமநாதன் பாடியிருக்கும் அழகோ.. அதை விட நேர்த்தி.

(தொடரும்)

# நாலு இட்லி + ஒரு டீ = 'கத்தி' சுட்ட கதை

- பா.ஏகலைவன் -








பற்றி சொன்னதாக கூறினார். இன்னும் சில மாதம் கழித்துச் சந்தித்தபோது, கதையை விரிவாகச் சொல்லி விவாதித்துள்ளேன். படத்தை அவர் தயாரிப்பதாகவும், நான் இயக்குவதாகவும் திட்டம் என்றார். மகிழ்ச்சி, தீவிர உழைப்பிற்கு வெற்றி கிடைக்கட்டும் என்றேன்.

அடுத்த ஓரிரு மாதம் கழித்துச் சந்தித்த போது "தினமும் முருகதாஸிடம் கதை விவாதம் நடப்பதாகச் சொல்கிறீர். முன்பணம் ஏதாகிலும் கொடுத்தாரா. அல்லது செலவுக்கு ஏதேனும் தந்தாரா. என்றேன். நக்கலாக சிரித்துவிட்டு "இந்த ஒன்றரை வருஷத்தில் நாலே நாலு இட்லி. ஒரு டீ அவ்வளவுதான் வாங்கிக் கொடுத்திருக்கிறார். பிறகு ஒரு தடவை நூறு ரூபாய் மட்டும் கொடுத்தார். அதுவும் அன்று இரவு விவாதம் முடிய நடுநிசியானது. போக்குவரத்து வாகனம் இல்லை என்பதால் அந்த 100 ரூபாய் கொடுத்தார் என்றார் வேதனையோடு.

இப்படி ஒன்றரை வருடமாக சிரமப்பட்டுப் போய் கதைசொல்லி விவாதித்து முடிந்த படம்தான் இன்றைய "கத்தி" திரைப்படம்.

பிரபல இயக்குனர் ஏ.ஆர். முருகதாஸே "சொந்தமா யோசிச்சு" எடுத்த படம்....

இந்தப் படம் குறித்து நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்திருந்தார் நண்பர் கோபி. இவருடைய கதை ஸ்கிரிப்ட், முழுத் திரைக்கதை வடிவத்தையும் கொடுத்திருந்தார். ஆனால், வழக்கு தோற்றுவிட்டது.

இப்போது மீண்டும் புதிய வழக்கறிஞரைப் பிடித்து.. மீண்டும் வழக்கு போட்டிருக்கிறார். படத்தைப் பார்த்துவிட்டு கோபி கதறுகிறார். ஒவ்வொரு காட்சியும் நான் சொன்னதேதான். விவசாயி பிரச்சினை, பூண்டி நீர் தேக்கத்தை முடக்கணும், வீராணம் குடிநீர் குழாயை மூடணும் என்று சொன்னதைக்கூட எடுத்து காட்சிப் படுத்தியிருக்கிறார்கள். நான் நீதிமன்றத்தில் ஒப்படைத்த திரைக்கதைப் பிரதியில் எல்லாமும் அப்படியே இருக்கு என்று புலம்புகிறார்.

பணபலம், அதிகார பலம், செல்வாக்கு எல்லாம் "எப்போதும் ஏற்றமாகவே" இருந்துவிடுமா என்ன? மீண்டும் வழக்கு நடக்கிறது. இந்தமுறை முருகதாஸுக்கு எதிராக தீர்ப்பு வரும் என்கிறார்கள்.

பொய்மை எப்போதும் ஓங்குவதுமில்லை.
உண்மை எப்போதும் தூங்குவதுமில்லை.

## மணலை மட்டும் அனுப்புங்கள்

இந்தியாவின் தெற்கு மாநிலமான கேரளாவிலிருந்து ஜேர்மனிக்கு தென்னை நார் கயிற்றைச் சிலர் ஏற்றுமதி செய்தனர். அப்போது எடையைக் கூட்டுவதற்காக கடல் மணலில் ஒரு புரட்டு புரட்டி எடுத்து அனுப்பினார்களாம். ஜெர்மானியர்கள் கயிற்றோடு இருக்கும் மணல் கருஞ்சிவப்பாக இருப்பதன் காரணத்தை ஆராய்ந்தனர். அதில் பெட்ரோமாக்ஸ் விளக்கின் திரி செய்யப் பயன்படும் "தோரியம்" என்ற உலோகம் இருப்பதைக் கண்டு பிடித்தனர். உடனே கேரள வியாபாரிக்கு "நீங்கள் கயிற்றுடன் மணலை அனுப்ப வேண்டாம். மணலை மட்டும் அனுப்புங்கள்" என எழுதினர்.

('பொது அறிவுப் பெட்டகம்' என்ற நூலிலிருந்து)

# சுவாமி விபுலானந்தா நிறுவகத்தில் இடம்பெற்ற மீளுருவாக்கக் கூத்துகள்

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வளாகங்களுள் ஒன்றான சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவகத்தில், நாடக அரங்கத்துறையிலுள்ள இறுதி வருட மாணவர்களால் 19.08.2014 அன்று மாலை, மீளுருவாக்கக் கூத்துக்கள் அரங்கேற்றப்பட்டன.

இறுதி வருட மாணவர்களின் பாடநெறியில் ஒன்றான "கூத்துமீளுருவாக்கம்" என்ற பாடத்தினை மையமாகக் கொண்டு இடம்பெற்ற இக்கூத்துக்கள் பாரம்பரிய முறைப்படி பயிலப்பட்டு மாணவர்களால் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

தமிழரின் பாரம்பரியக்கலையான கூத்தானது, பேரா.சு.வித்தியானந்தன் அவர்களால் பல்கலைக்கழக, பாடசாலைப் பாடத்திட்டத்தில் இணைக்கப்பட்டு கற்பிக்கப்படுகின்றமையும், பேரா. சி.மௌனகுரு அவர்களால் கூத்தின் அளிக்கை முறைகள், அவை சார்ந்த விடயங்கள் என்பன பல நூல்கள் வாயிலாக வெளிவந்தமையும் சிறப்பான விடயமாகும்.

இருப்பினும் இக்கூத்தினை பயிற்சிப் பரீட்சைக்காக, பல்கலைக்கழகங்களிலும், பாடசாலைகளிலும், விரிவுரையாளர்களாலும், ஆசிரியர்களாலும் மேடையில் ஆடுவதற்கு ஏற்றவகையிலே பயிற்றுவிக்கப்படுகிறது. இவ்வாறு பயிற்றுவிக்கப்படும் போது ஆட்டமுறையிலும், அளிக்கைமுறையிலும் பல மாறுதல்கள் ஏற்படுகின்றன. இதனால், மாணவர்களுக்கு பெரும்பாலும் பாரம்பரியக் கூத்தின் தனித்துவ அம்சங்கள் பற்றி அறியாத நிலையே ஏற்படுகிறது.

ஆயினும், வெளிச்சூழலில் பாரம்பரியக்கூத்தானது, ஆரம்ப காலகட்டம் போலவே இன்று பெருமளவில் பல இடங்களில் ஆடப்படுவதும், கோயில் திருவிழாக்களில் அரங்கேற்றப்படுவதும் கண்கூடே.

இன்று பல இளந்தலைமுறையினரும் கூத்தின் பால் ஈடுபாடு கொண்டு கூத்து எழுத முற்படுவதும், அண்ணாவிமார்களிடம் பயிற்சி பெற்று செவ்வனே ஆடி அரங்கேற்றுகின்றமையினையும், இதற்கூடாக பல இளம் கூத்துக் கலைஞர்கள் உருவாகியுள்ளமையினையும் அவதானிக்க முடிகிறது.

இக்கலையை அதற்குரிய அண்ணாவிமார்களின் பயிற்றுவிப்போடு பயிற்சி பெறுவது அவசியமாகும். இத்தகைய செயற்பாடு சென்ற வருடமும் கிழக்குப் பல்கலைக்கழக, நுண்கலைத்துறை மாணவர்கள் இடத்தே ஜெயசங்கர் அவர்களின் முன்னெடுப்பின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டது.

அதேபோன்றே இம்முறை சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவகத்திலும் முதல் தடவையாக இச்செயற்பாடு இடம்பெற்றுள்ளது. ஜெயசங்கர் அவர்களே பல்கலைக்கழக மாணவர்களை கூத்து நடைபெறும் கிராமங்களுக்கு செல்ல வைத்து, அங்குள்ள அண்ணாவிமார்களோடு தொடர்பினையும் ஏற்படுத்திக் கொடுத்து அவர்களிடம் பயிற்சி பெற வைத்துள்ளார். இதன் மூலம் ஊருக்குள் நிகழும் கூத்து சார்ந்த நடைமுறைகளை அறிந்ததோடு, சட்டங் கொடுத்தல், சதங்கையணி விழா, பொங்கி மடை வைத்தல் எனப் பல சம்பிரதாய முறைகளையும் அனுபவத்தினூடாக மாணவர்கள் பெற்றுக் கொண்டுள்ளனர்.

இக்கூத்தினை பயிற்றுவித்தவர்களான அண்ணாவியார் ப.கதிர்காமத்தம்பி, அண்ணாவியார் மா.ஞானசெல்வம், இளம் அண்ணாவி ம.கேதீஸ்வரன், இளம் கூத்து எழுத்தாளர் க.புவிக்குமார் மற்றும் திலீபன், கூத்துக்கலைஞன் துஷாந்தன் முதலியோர் பாராட்டிற்குரியவர்கள்.

இங்கு ஆடப்பட்ட கூத்துக்களான பவளக்கொடி, நல்லதங்காள், அல்லியின் நியாயம் என்பன ஏற்கனவே பாரம்பரியமாக ஆடப்படுகின்ற கூத்துக்கள். இங்கு, இவை முக்கியமான கட்டங்கள் நீங்கா வண்ணம் சுருக்கப்பட்டுள்ளதுடன் மீளுருவாக்கமும் செய்யப்பட்டுள்ளது. மீளுருவாக்கக் கூத்தானது: பாரம்பரியக்கூத்தின் தனித்துவங்கள் மாறாது, அவை ஆடப்படுகின்ற புராணக்கதைகளிலுள்ள, தற்கால நடைமுறைகளுக்கு பயன்படாத அம்சங்களை தற்கால சூழலுக்கு ஏற்றவகையிலும் பெண் ஒடுக்குமுறை, உயர்ந்தோர்-தாழ்ந்தோர் என்ற பாகுபாடு போன்றவற்றையும் நீக்கி, மாற்றியமைத்து ஆடப்படுவது.

இக்கூத்துக்களில் கட்டியக்காரன் இடையிடையே வந்து கதையின் முக்கியமான அம்சங்களை பாடி ஆடுவதுமுண்டு. அத்தோடு பறையறைவோன் பாத்திரமும் ஏனைய கூத்துக்களில் வருவதைப் போன்று கேளிக்கையாகவும், கீழ்த்தனமாகவும் காட்டப்படாமல், அரசகட்டளை அறிவிக்கும் அறிவுடையோனாக காட்டப்படுகின்றான்.

அல்லிஅர்ச்சுனா, தர்மபுத்திரன் நாடகம், இராம நாடகம் போன்ற பல கூத்துக்கள் அல்லியின் எதிர்வாதம், சிம்மாசனப்போர், சீதை சூர்ப்பனகை என மீளுருவாக்கம் செய்யப்பட்டு அரங்கேற்றப்பட்டன.







இதற்கமையவே இந்நிறுவகத்திலும் வடமோடிக் கூத்துக்களான: பவளக்கொடி, நல்லதங்காள், தென்மோடிக் கூத்தான: அல்லியின் நியாயம் முதலிய மீளுருவாக்கக் கூத்துக்கள் இடம்பெற்றன.

இதில் பவளக்கொடிக் கூத்தின் கதையம்சமானது: அர்ச்சுனன் தனது மகனின் விருப்பத்தை நிறைவு செய்வதற்காக பவளத்தேர் தேடிச்செல்கிறான் அங்கு பவளக்கொடி எனும் பெண்ணைக் கண்டு காதல் கொண்டு கிரு'ணனின் துணையுடன் அவளை மணக்க முற்படுகிறான் அவளோ அதை மறுத்து கேள்வி கேட்பதாக அமைகின்றது.

மகனின் தேவை ஒன்றிற்காக வந்த ஒருவன் எவ்வாறு இன்னொரு பெண்ணை மணக்க முடியும்? இங்கு அப்பெண்ணின் விருப்பு வெறுப்பிற்கு என்ன இடம்? இதற்கு கடவுள் ஏன் துணை நிற்க வேண்டும்? போன்ற நடைமுறைக் கேள்விகளை கொண்டதாக தற்காலச் சூழ்நிலைக்கு மாற்றி ஆடப்பட்டது.

நல்லதங்காள் கூத்தானது, நல்லதங்காள் வறுமை காரணமாக தனது ஏழு பிள்ளைகளை அழைத்துக் கொண்டு அண்ணனான நல்லதம்பியிடம் தஞ்சம் அடைகின்றாள். பின் அங்கேயும் வாழமுடியாமல் தன் ஏழு பிள்ளைகளோடு தானும் தற்கொலை செய்ய முனைகின்றாள் இச்சமயம் பிள்ளைகள் பல கேள்விகள் கேட்டு, தாய்க்கு ஆலோசனையும் கூறி தற்கொலையினை தடுத்து தமது சொந்த நாட்டிற்கு செல்வதாக கதை அமைந்தது. ஏற்கனவே உள்ள கூத்தில் அண்ணனின் மனைவி கொடுமைப் படுத்துவதாகவும், இவர்கள் தற்கொலை செய்வதாகவும் அமைந்திருந்தது. இவ்வாறாக இக்கூத்துக்கள் மீளுருவாக்கம் செய்யப்பட்டு ஆடப்பட்டன.

மேலும் இக்கூத்துக்களில் பங்குபற்றிய அனேகமானோர் இறுதி வருட மாணவிகளே. இவர்களில் பலர் இங்கு ஆண்வேடம் பூண்டு மிகச் சிறப்பான முறையில் ஆடினர். அத்தோடு முக்கியமாக வீரமான ஆட்டமுறைகளை கொண்ட வேடுவர்கள் பாத்திரங்களையும் இரு பெண்களே ஆடினர்.

மாணவிகள் ஆண் பாத்திரத்தினை மிக நுட்பமாக உள்வாங்கி வெளிப்படுத்தியமை பாராட்டத்தக்க விடயமாகும். வழக்கமாக பாரம்பரியக்கூத்தில் ஆண்களே பெண்பாத்திரங்களை தாங்கி நடிப்பர். மீளுருவாக்கக்கூத்துக்கள் பலவற்றில் பெண்கள் கூத்தாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வுயர் கல்வி நிறுவகச்சூழலில் ஒவ்வொரு வருடத்திலும் பல மாணவர்கள் கல்வி பயிலினும் வழக்கமாக ஒரு சில மாணவர்களே பயிற்சிப் பாடநெறியில் வல்லுனர்கள் எனவும் திறமைசாலிகள் எனவும் மேலுயர்த்துவது வழக்கம். ஆனால் இக்கூத்து அரங்கேற்றமானது எல்லா மாணவர்களையும் மிகத் திறமைசாலிகள் என்பதைக் காட்டியதுடன், விரிவுரையாளர்களே இம்மாணவர்கள் ஆடும் போது "அந்தப்பாத்திரம் யார்?" "இந்தப்பாத்திரம் யார்?" என வினவி, வியந்தமையினையும் அவதானிக்க முடிந்தது.

அண்ணாவியார் என்பவர் எத்தகைய ஆளுமை என்பதனையும் பறைசாற்றுவதற்கு இத்தகைய செயற்பாடுகள் அவசியம். பல்கலைக்கழகம் என்பது பல திசை மாணவர்களையும் ஒருங்கிணைத்த ஒரு நிறுவகம் என்பதால் பல திசை மாணவர்களுக்கும் எமது பார்ம்பரிய கலைகளும், அவற்றின் உண்மையான தனித்துவங்களும் இலகுவில் சென்றடையும் எனலாம்.

துஷ்யந்தி,
விடுகை வருடம்,
**நுண்கலைத்துறை,**
**கிழக்குப் பல்கலைக்கழகம்**

# அமைச்சர் டக்ளஸின் அழைப்பில் வடக்கிற்கு

# வருகை தந்த ஜனாதிபதியை கூட்.வரவேற்கவில்லை

## ஊடக செய்தியில் ஜீவன் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பின் பேரில் வடக்கிற்கு வருகைதந்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை வரவேற்காத கூட்டமைப்பு தலைவர்கள் தமது சொந்த சுயநலத்திற்காகவும் சுகபோகங்களுக்காகவும் ஜனாதிபதியை நாடும் பழக்கம் கூட்டமைப்பினரிடம் இன்று புரையோடிப்போயுள்ளது.

இவ்வாறு வலிகாமம் இணைப்பாளரும் வலி.மேற்கு பிரதேச சபையின் எதிர்க்கட்சித் தலைவருமான சிவகுரு பாலகிருஸ்ணன் (ஜீவன்) நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்கு விடுத்த செய்தியில் தெரிவித்துள்ளார்.

வடக்கிற்கு வருகை தந்த ஜனாதிபதியை வரவேற்காது, அவரது விசேட அபிவிருத்தி கூட்டங்களில் பங்கெடுக்காது முற்றாக மறுதலித்த கூட்டமைப்பினர், ஜனாதிபதியின் கூட்டத்திற்கு கொழும்புக்கு ஓட்டம் எடுக்கின்றனர் எனும் தலைப்பில் நேற்று முன்தினம் விடுத்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

எம் தேச தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ யாழ். குடாநாட்டின் இதர பகுதிகளுக்கு வருகை தந்து பல அபிவிருத்தித் திட்டங்களையும் முன்மொழிவுகளையும் முன்வைத்து மக்களின் ஏகோபித்த வரவேற்பை பெற்றுச் சென்றார்.

ஆனால் யாழ்ப்பாணத்தில் அவரை சந்திக்க விரும்பாத கூட்டமைப்பின் தலைவர்களும் உறுப்பினர்களும் கொழும்புக்கு அழைத்தவுடன் வாகனங்களில் பறக்கின்றனர். இவ்வாறான முகமூடி தலைவர்கள் ஜனாதிபதியை யாழில் வரவேற்கப் போனால் தமது நிலையை ஏனையவர்கள் பார்த்திடுவார்கள் என்ற எண்ணம அவர்களிடத்தில் புரையோடிப் போயுள்ளது.

வடக்கிற்கு வருகை தந்த ஜனாதிபதியை வடமாகாணத்தின் முதல்வர் க.வி.விக்கினேஸ்வரன் மற்றும் கூட்டமைப்பு நாடாளுமன்ற உப்பினர்கள், வடமாகாண சபை உறுப்பினர்கள் வரவேற்று மதிப்பளித்திருக்க வேண்டும்.

ஆனால் இவர்களில் எவருமே தேசத்தலைவர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திக்க விரும்பவில்லை. உரிய மதிப்பளிக்கவும் தவறிவிட்டனர். இதனை விட மேலாக அவ்வப் பிரதேசங்களுக்கு ஜனாதிபதி சென்ற போது அப்பிரதேசங்களின் கூட்டமைப்பு பிரதேச சபை உறுப்பினர்கள், தவிசாளர், உப தவிசாளர்கள் எவரும் மதிப்புக் கொடுத்து வரவேற்கச் செல்லவில்லை.

ஆனால் ஜனாதிபதி கொழும்புக்கு அழைக்க ஒரு 'காட்' போட்டால் போது தங்களது உருவை மாற்றி, அழகுபடுத்தி சில கோரிக்கைகளையும் முன் வரைபுகளையும் சுயலாபநோக்கில் கடித உறையில் வைத்துக் கொண்டு வாகனத்தில் பறக்கின்ற கூட்டமைப்பு தலைவர்களையே இன்று காணுகின்றோம்.

உண்மையில் இவ்வாறு செல்லுபவர்கள் யார்? தாம் கொழும்பு சென்று ஜனாதிபதியின் கூட்டத்தில் பங்கெடுத்து விட்டு, ஜனாதிபதி வழங்கும் சுவைமிகு உணவுகளை ஹோட்டலில் உண்டு விட்டு தாம் போனது இந்த யாழ்ப்பாணத்து தமிழருக்கு தெரியாதது போன்று வந்து மௌனிகளாக இருந்து விடுகின்றனர்.

இவ்வாறான நிலைகளை இனிவரும் தலைவர்களும், தற்போதுள்ள தலைவர்களும் உணர வேண்டும். வீட்டு வாயில் தேடி வந்தவர்களை முதலில் மதிக்க வேண்டும், குறைகள் - நிறைகள் இருந்தால் நேரில் சொல்லத் தெரியவேண்டும்.

அதனைவிடுத்து கொழும்புக்கு வாகனத்தில் ஒளிந்து செல்வது மறைத்து செல்வது என்பது உண்மையில் அருவருக்கத்தக்க செயல்.

உண்மையான செயல்வீரன் உண்மையான தலைவன் ஒருவன் வரும்போது அவனை வரவேற்பவனே உண்மையான தலைவன்.

ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள் நீங்கள் யார் என்பது புரியும் என்றார்.



அருள்மிகு சூரி சிவன் கோவில் சைவத்தமிழ் சங்கம் - சுவிஸ் வரப்புயர மரநடுகைத் திட்டத்தின் கீழ் வலிகாமம் வடக்கில் அண்மையில் மீள குடியமர்ந்த குரும்பசிட்டி கிழக்கு மக்களுக்கு பயன்தரு தென்னை மரங்களை வழங்கியுள்ளது. (48)

# தொழில் நுட்ப மாற்று பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை கைத்தொழில் அபிவிருத்தி சபையினால் ஜாம், கோடியல், பழங்களிலான பானங்கள், பழக்கூழ் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கான உற்பத்தி செயன்முறை தரக்கட்டுப்பாடு, பொதியிடல் போன்ற பயிற்சி நெறி, எதிர்வரும் 12, 13 ஆம் திகதிகளில் சபையின் யாழ்.மாவட்ட அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி நெறியினை பெறவிரும்பும் தொழில் முயற்சியாளர்கள் சபையுடன் 021 222 2421 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு சபையின் பிரதிப் பணிப்பாளர் சி.சிவகெங்காதரன் அறிவித்துள்ளார்.

# துணுக்காய் பிரதேச சபை அபிவிருத்தியில் பின் தங்கியுள்ளது

## ஆளும் கட்சி – எதிர்க்கட்சி மோதல் வலுப்பு

(யாழ்ப்பாணம்)

துணுக்காய் பிரதேச சபையில் ஆளும்கட்சி - எதிர்க்கட்சி மோதல் வலுத்துள்ளது. சனசமூக அபிவிருத்திகள் உட்கட்டுமானம் தொடர்பாக முன்வைக்கப்படும் திட்டங்களுக்கு ஆளும் கூட்டமைப்பு தவிசாளர் எதிர்வாதங்களை முன்வைத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதனால் வீதி விளக்குகள் பொருத்துதல், வீதிகள் புனரமைப்பு மற்றும் கிணறு புனரமைப்பு தொடர்பில் தொடர் இழுபறி தொடர்கிறது. மக்களை நோக்கிய எந்த செயற்பாடும் இதுவரை இடம்பெறவில்லை.

இதனால் கடந்த 3 ஆண்டுகள் அபிவிருத்தியற்ற ஓர் சபைக்கான விருது துணுக்காய் பிரதேச சபைக்கு வழங்கலாம் என கூட்டமைப்பு உறுப்பினர் ஒருவர் கவலை தெரிவித்துள்ளார். (140)

# சுயதொழிலுக்கு உதவி

(யாழ்ப்பாணம்)

சமூக சேவைகள் அமைச்சினால் வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் இரு அங்கத்தவர் கொண்ட ஒன்பது குடும்பங்களுக்கு கோழிப்பண்ணை, கோழிவளர்ப்பு போன்ற சுயதொழில் முயற்சியை மேற்கொள்ள ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

ஒரு குடும்பத்துக்கு 15 ஆயிரம் ரூபாவும் எட்டுகுடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாக கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இச் சுயதொழில் பணம் பெறவுள்ள கீழ்வரும் பெயரையுடைய குடும்பங்கள் உடன் பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

ஜே.கோமலீலி தம்பாலை, கதிரிப்பாய், அச்சுவேலி, என்.இரத்தினேஸ்வரி தோப்பு அச்சுவேலி தெற்கு, எஸ்.மேரி அன்ரனீற்ரா சேனவளவு கோப்பாய் மத்தி, ஏ.செவ்வந்தி விக்னேஸ்வரா வீதி புத்தூர் கிழக்கு, புத்தூர்.

கே.விஜயகுமாரி பத்மாலயம் மானிப்பாய் றோட் உரும்பிராய் மேற்கு, கே.கேமலா சங்கானை வீதி, பத்தமேனி, அச்சுவேலி, ரி.உதயமலர் செல்வபுரம் உரும்பிராய் தெற்கு, எஸ்.பிரவீனா மாவடி வீதி, அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி, எஸ்.தர்சினி புதிய செம்மணி வீதி ஆனந்தபுரம் இருபாலை. (08)

# நீர்வேலி பகுதிகளில் வெங்காய பயிர் அழிவு

யாழ்.நகரில் நீர்வேலி, புத்தூர், சிறுப்பிட்டி ஆவரங்கால் போன்ற பகுதிகளில் விவசாயிகளால் பயிரிடப்பட்ட காலபோக வெங்காயப் பயிரானது முற்றாக அழிவடைந்துள்ளதாக விவசாயிகளால் தெரிவிக்கப்படுகின்றது. குறித்த பகுதிகளில் மேறகொள்ளப்பட்ட வெங்காயப் பயிரானது நல்ல நிலையில் காணப்பட்டதாகவும் பின்னர் விளைச்சல் பருவத்தை எட்டும் நிலையில் தொடர்ந்து பெய்த மழையால் வெங்காய பாத்திகளில் மழைநீர் தேக்கி நின்று பயிர் அழிவடைந்துள்ளதாகவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

எனவே இதனால் தமக்கு நஷ்டம் ஏற்பட்டுள்ளதுடன் பெரும் போக வெங்காய செய்கைக்கான விதை வெங்காயத்திற்கு தட்டுப்பாடு ஏற்படலாம் எனத்தெரிவிக்கும் இவர்கள் அதிக விலை கொடுத்தே விதை வெங்காயத்தைப் பெறவேண்டிய நிலையுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர். (85)

# அங்கத்தவர் இணைப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் இயங்கி வரும் கொக்குவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தையொட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி வரை அங்கத்தவர்களை இலவசமாக இணைக்கும் செயற்றிட்டத்தை அமுல்படுத்தியுள்ளதாக நூலகர் அறிவித்துள்ளார்.

# முரசின் இன்றைய பலன்



(29.10.2014 புதன்கிழமை)

ஜய வருஷம் ஐப்பசி மாதம் 12 ஆம் திகதி.
ஷஷ்டி / அமிர்தம். பி.இ. 03.33 வரை.
பின் உத்தராடம்.
இராகு காலம 12.03 - 01.33 வரை. சுபநேரம 04.33 - 06.03 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | நீண்ட காலம் நிலவிய பாதகமான நிலைப்பாடு நீங்கிவிடல், வெளியூரிலிருந்து பணம் கிடைத்தல். |
| ரிஷபம் | சுமத்தப்பட்ட பழிகளை எண்ணி மனங்கலங்காது விடல், இடமாற்றகடிதத்தால் உளப்பாதிப்பு ஏற்படல். |
| மிதுனம் | அபராதம் ஏற்படல், நிகழ்வில் பங்குகொள்ளல். |
| கடகம் | காணி உரிமை உறுதி இருந்தும் அடாத்தாக குடியேறிய குடும்பத்தை எழுப்ப முயற்சி எடுத்தல். பொது நிகழ்வில் கலந்து கொள்ளல். |
| சிம்மம் | போட்டிகளில் பங்குபற்றி பரிசில்கள் பாராட்டுக்கள் பெறுதல், வெளியூர் வேலைவாய்பினால் தொழிலை இழத்தல். |
| கன்னி | தகுதி திறமை இருந்தும் அரசுப்பணி நழுவிவிடல். பணியில் சுமூகநிலை ஏற்படல். |
| துலாம் | கட்டுப்பாட்டினை இழந்த வாகனம் விபத்தில் சிக்கும் நிலை, வரவு, சம்பளவிபரம் சட்ட நடவடிக்கைக்கு உள்ளாதல். |
| விருச்சிகம் | வியாபாரப்பதிவு நீக்கப்படும் அபாயம், திறப்பு விழாக்களில் கலந்துகொள்ளல். |
| தனுசு | அவதூறு செய்ய முயன்றவருக்கு நியாயத்தை எடுத்துக்கூறல், விலக்கி வைக்கப்பட்ட உறவுக்கு ஒன்றுசேர மீண்டும் கரம் நீட்டல். |
| மகரம் | கேலி செய்ய முயன்ற வேளை வாக்குவாதம் ஏற்படல். தெய்வ தரிசனத்தில் ஈடுபடல். |
| கும்பம் | வெளியூர் திருமணத்தைக் கைவிடல். மின்னல் வீழ்கையிலிருந்து மயிரிழையில் ஆபத்து விலகுதல். |
| மீனம் | எதிர்பாபாராத செயற்பாட்டால் நன்மை ஏற்படல், நூல்களை நன்கொடை செய்ய முனைதல். |

# வைத்தியசாலை பாஸ்நடைமுறையில் மன உளைச்சலடையும் பார்வையாளர்கள்



யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது அதிக வசதிகள் மற்றும் சேவைகள் ஏற்படுத்தப்பட்டுள்ள போதிலும் நோயாளர்களைப் பார்வையிடச் செல்லும் அவர்களது உறவினர்கள் பெரியளவில் அசௌகரியங்களுக்கும் மனஉளைச்சல்களுக்கும் ஆளாகிவருகின்றனர்.

நோயாளர்களை பார்வையிடச் செல்லும் மக்களுக்கு பாஸ் நடைமுறையை அமுலுக்குக் கொண்டு வந்துள்ளமையால் இரண்டு நபர்களுக்கு மேல் நோயாளரைச் சென்று பார்வையிடமுடியாதுள்ளது.

வடமாகாணத்தில் முக்கிய வைத்தியசாலையாக விளங்கும் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு நாளாந்தம் ஆயிரக்கணக்கான நோயாளர்கள் அனைத்துப் பிரதேசங்களிலிருந்தும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களை பார்வையிட வரும் உறவினர்கள் நீண்ட பயணங்களை மேற்கொண்டு குறிப்பிட்ட, நோயாளர்களை பார்வையிட அனுமதிக்கப்பட்ட நேரத்திற்கு சென்று பார்வையிடும் போது பாஸ் நடைமுறை அமுலில் இருப்பதால் நோயாளிகளைச் சென்று பார்க்கமுடியாத நிலைக்கு உள்ளாகின்றனர்.

தூர இடங்களிலிருந்து நோயாளர்களை பார்க்கவரும் உறவினர்கள் வைத்தியசாலை வாயில் கடவையில் பணிபுரியும் பாதுகாவலர்களால் மிகவும கீழ்த்தரமான முறையில் நடாத்தப்படுவதுடன் கெட்ட வார்த்தைகளினால் பேசி திருப்பி அனுப்பப்படும் பரிதாப நிலைக்கும் உள்ளாகின்றனர்.

வைத்தியசாலைக்கென்று ஒரு கட்டுப்பாடு இருப்பது அவசியம் தான். நடைமுறை சார்ந்த கட்டுப்பாடுகளை விதிப்பது நியாயமானதுதான். ஆனால நோயாளர்களை பார்வையிடுவதற்காக தூர இடங்களில் இருந்து வரும் உறவினர்கள் வைத்தியசாலையினால் வழங்கப்படும் இரண்டு அனுமதிச்சீட்டுக்களை கொண்டு அவர்களது உறவினர்கள் பலர் உட்செல்ல முடியாதுள்ளனர்.

நோயாளர்களை பார்க்கச் செல்லும் உறவினர்களின் நலன் கருதி குறைந்தது ஒரு அனுமதிச்சீட்டில் ஒரு குடும்பத்தினரையாவது நோயாளியைப் பார்க்க அனுமதித்தால் வைத்தியசாலையின் நுழைவாயில் வீதியோரத்தில் குவிந்து நிற்கும் மக்களையும் வீதிப்போக்குவரத்து இடைஞ்சலையும் தடுத்து நிறுத்த முடியும் என்பதுடன் தற்போது மழைகாலம் என்பதால் மழையில் மக்கள் நனையும் அசௌகரிய நிலைமையையும் தடுத்து நிறுத்த முடியும் என மக்கள் தெரிவித்துள்ளனர்.

## விபத்தில் ஒருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். உடுவில் மதவடிப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் வவுனியாவைச் சேர்ந்த ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளது.

யாழ். உடுவில் மதவடிப் பகுதியில் இராணுவ ட்ரக் வாகனமும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதிக் கொண்டதில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 07.20 மணியளவில் இடம் பெற்ற குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்தவரான வவுனியா மகாறம்பைக் குளத்தைச் சேர்ந்த வைரமுத்து ஜெயராசா என்பவரே படுகாயமடைந்தவராவார்.

இச் சம்பவம் குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(48)

## குருநகர் தொடர்மாடி பகுதியில் இளைஞரை காணவில்லை

யாழ்.குருநகர் தொடர்மாடிப்பகுதியில் இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளதாக யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குருநகர் தொடர்மாடி பகுதியைச் சேர்ந்த கிறிஸ்ரியன் ஜீவன் (வயது 16) என்ற இளைஞரே காணாமற் போயுள்ளதாகவும். கடந்த 24 ஆம் திகதி காலை வீட்டில் இருந்து வெளியே சென்றவர் இதுவரையில் வீடு திரும்பவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த 3 தினங்களாக உறவினர்களின் வீடுகளில் தேடி வந்த நிலையில், இளைஞர் எங்கு இருக்கின்றார் என்ற தகவல் இதுவரை கிடைக்கவில்லை என நேற்று முன்தினம் திங்கட்கிழமை யாழ். பொலிஸ் நிலையத்தில் இளைஞரின் தாயார் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

அந்த முறைப்பாட்டின் பிரகாரம் யாழ். பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(25)



சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் பாடசாலையின் பரிசளிப்பு விழாவை முன்னிட்டு சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தால் வழங்கிவைக்கப்பட்ட போது....

(48)

# ஆயுர் வேதம்



## பாதங்களில் வலி - எரிச்சல்!

இடுப்பு தண்டுவடத்தில் வில்லைகள் நழுவி நரம்பு மண்டலத்தை அழுத்தும் நிலையில் கால்களில் அடிப்பாகத்தில் எரிச்சல், நடந்தால், நின்றால், அமர்ந்து படுத்தல் போன்ற நிலைகளிலும் இருகால்களிலும் பாதம் வரை வலியும் எரிச்சலும் ஏற்படக்கூடும்.

இதற்கு காரணமாக வயிற்றில் வாயுவின் சேர்க்கை, மலச்சிக்கல், குளிரூட்டப்பட்ட அறையில் நெடுநேரம் ஒரே நிலையில் அமர்ந்திருத்தல், நாற்காலியில் சாய்ந்து கால்களை நீட்டி முதுகு வளைத்து அமர்தல், இருசக்கர வாகனத்தில் குண்டும், குழியும் உள்ள சாலைகளில் ஏற்றி இறக்கிப் பயணித்தல், பேருந்தில் பயணம் செய்யும்பொழுது பின் பகுதியில் அதிகநேரம் நிற்க வேண்டிய நிலை, குளிர்ந்த நீரில் அடிக்கடி நீராடுதல், வயிற்றில் வாயுவின் சேர்க்கையை அதிகப்படுத்தும் கிழங்கு வகைகள், காரமான உணவுப்பொருட்களைச் சாப்பிடுவதில் ஆர்வம், சிற்றின்பத்தில் அதிகமான ஈடுபாடு, குஷன் போன்ற படுக்கையில் படுத்து உறங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

இடுப்பு நரம்பு அழுத்தத்தின் காரணமாக துன்பப்படுபவர்கள் மேற்குறிப்பிட்ட காரணங்களைத் தவிர்த்து உணவு செயல் மற்றும் மருந்துகளில் கொண்டு வர வேண்டிய கவனங்களை மனதிற்கொண்டு நடைமுறைப்படுத்த மேற்குறிப்பிட்ட உபாதைகளிலிருந்து நிவாரணம் பெறலாம்.

எளிதில் சமிபாடடையக் கூடிய வெதுவெதுப்பான நெய்ப்பு உள்ள புழுங்கலரிசியை மையமாகக் கொண்டு தயாரிக்கப்படும் கஞ்சி வகைகள், பொங்கல், உளுந்தும் வெந்தயமும் சேர்த்தரைத்த தோசை, கருவேப்பிலைத் துவையல், தேங்காய்ச் சம்பல், சின்ன வெங்காயம், முருங்கைக்காய் சேர்த்த சாம்பார் ஆகியவற்றைக் காலை உணவாகச் சாப்பிடுதல், இடுப்பு தண்டுவடத்தை வலுப்படுத்தும் நல்லதொரு உணவுமுறையாகும்.

மதியம் பிரண்டைத் துவையல், வெங்காயம், தக்காளி சேர்த்த சட்னி, நெல்லிக்காய் தயிர், மிளகு, சீரகம் பூண்டு சேர்த்தரைத்த ரசம், ஆட்டுக்கால் சூப், புளிப்பான தயிர் அன்னம் போன்றவற்றை மதிய உணவாகக் கொள்ளலாம்.

இரவில் எலும்பிலிருந்து உறிஞ்சப்படும் மஜ்ஜை, முட்டை, கோழி வகையறாக்களை கோதுமையைக் கொண்டு தயாரிக்கப்படும் சுக்கா ரொட்டியுடன் சாப்பிடுவதும் நல்லதே. இரவில் படுக்கும் முன் சூடான ஒரு கிளாஸ் (300 மில்லி லீற்றர்) பசும் பாலுடன் தேவையான அளவு சீனி கலந்து அமுக்கரா சூரணத்தை ஒரு தேக்கரண்டி (5 கிராம்) அதில் சேர்த்துச் சாப்பிடுவதின் மூலமாக இடுப்பு எலும்புகளின் இடையே அமைந்துள்ள வில்லைப் பகுதிகளை நன்றாக வலுப்படுத்திக் கொள்ளலாம்.

இடுப்பில் விளக்கெண்ணெய்யை சூடாக்கித் தடவிவிட்டு வெந்நீர் விட்டு நீராடுதல், மலச்சிக்கல் ஏற்படாத வகையில் நார்ச்சத்துள்ள காய்களை உணவில் அதிகம் சேர்த்துக் கொள்ளுதல், வாயுவின் சேர்க்கையை குடலில் இருந்து தவிர்ப்பதற்காக செய்து கொள்ளக் கூடிய எனிமா சிகிச்சைமுறைகள், ஆயுர்வேத மருத்துவரின் ஆலோசனைப்படி சாப்பிட வேண்டிய கஷாயம் மற்றும் மாத்திரை மருந்துகள் ஆகியவற்றின் மூலமாக எரிச்சல் உபாதையைப் போக்கிக் கொள்ளலாம்.

கணனி முன்பு அமர்ந்து அதிக நேரம் வேலை செய்வதன் மூலமாகவும், அதிக நேரம் தொலைக்காட்சி பார்ப்பதன் மூலமாகவும் ஏற்படும் கண் எரிச்சல் நீங்க திரிபலா சூரணத்தை ஐந்து கிராம் எடுத்து ஒன்றரைக் கரண்டி, அரைக் கரண்டி நெய் குழைத்து இரவு படுக்கும் முன் சாப்பிட்டு அதன் மேல் பால் அருந்தி படுத்துறங்குவது நல்லது.

இடுப்பு தண்டுவடப்பகுதியில் செய்யப்படும் கடிவஸ்தி எனும் சிகிச்சைமுறை இலை ஒத்தடம், ஆசனவாய் வழியாகச் செலுத்தப்படும் வஸ்தி சிகிச்சை, நாடீ ஸ்வேதம் எனப்படும் மூலிகை வேர்களால் உண்டாக்கப்படும் நீராவிக் குளியல் சிகிச்சை போன்றவை நல்ல பலனைத் தரலாம். ஆயுர்வேத மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை எடுத்துக்கொள்வது நல்லது.

# அபிவிருத்தியின் அறுவடை

## ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டு செயற்றிட்டங்கள்



(யாழ்ப்பாணம்)

ஈ.பி.டி.பியின் மூன்று நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியுதவியில் யாழ்.மாவட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆராயும் கலந்துரையாடலொன்று ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் மேற்படி விடயம் தொடர்பிலான கலந்துரையாடல் இடம்பெற்றது. இக்கலந்துரையாடலில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைத்திட்டம், புதிதாக நடைபெறவுள்ள வேலைத் திட்டங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டன.

இதன்போது கருத்துரையாற்றிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வேலைத் திட்டங்களை இரண்டு மாதங்களுக்குள் ஆரம்பிக்க வேண்டும்.

அத்துடன் இவ்வேலைத்திட்டங்களில் மாதர்சங்கங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்களின் பிரதிநிதிகளை ஈடுபடுத்த வேண்டுமெனவும் மக்களுக்கு சரியான வகையில் இத்திட்டங்களின் பயன்கள் சென்றடைய வேண்டுமெனவும தெரிவித்தார்.

எதிர்வரும் டிசம்பர் மாதத்திற்குள் மேற்படி நிதி ஒதுக்கீட்டின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற பணிகளை துரிதப்படுத்தி நிறைவு செய்ய வேண்டும் எனவும் அதற்கான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளு மாறும் உரிய அதிகாரிகள் உள்ளிட்ட அனைவருக்கும் அமைச்சர் பணிப்புரை விடுத்தார்.

பிரதேச செயலர்கள் இரண்டு வாரத்திற்கு ஒருமுறை இவ் வேலைத் திட்டங்களின் முன்னேற்றம் தொடர்பில் தனக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்

இக்கலந்துரையாடலில் வடமாகாண பிரதம செயலர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், யாழ்மாவட்ட அரசாங்க அதிபர் சுந்தரம் அருமைநாயகம், பிரதேச செயலர்கள், மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபைத் தவிசாளர்கள், அமைச்சரின் இணைப்பாளர்கள், பொலிஸார் என பல்துறைசார்ந்தோர் பலர் கலந்து கொண்டனர்.

## வேலணை அலுவலகத்துக்கு விஜயம்



ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேலணை அலுவலகத்திற்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்று முன்தினம் விஜயம் மேற் கொண்டார்.

இதன்போது அலுவலகத்தைப் பார்வையிட்டதுடன், அதன் சுத்தம் சுகாதாரம் தொடர்பிலும் அவதானம் செலுத்தினார்.

இதேவேளை தையல் பயிற்சி நிலைய பணியாளர்களுடனும் அமைச்சர் கலந்துரையாடி அவர்கள் எதிர் நோக்கி வரும் பிரச்சினைகள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்போது ஈ.பி.டி.பியின் வேலணை பிரதேச இணைப்பாளர் சி.சிவராசா உடனிருந்தார்.

## புகையிரத நிலையத்துக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலையத்தை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாண புகையிரத நிலையத்திற்கு அமைச்சர் மற்றும் ஆளுநர் விஜயம் மேற்கொண்டனர்.

இதன்போது புகையிரத நிலையத்தின் தேவைகள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பில் ஆராயப்பட்டன. இதில் யாழ்.பிரதான புகையிரத நிலையத்தின் நிலக் கீழ்பாதையில் தண்ணீர் தேங்கி நிற்பதாகவும் அதனை சீர்செய்து தருமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

மேற்படி கோரிக்கையினை ஆராய்ந்த அமைச்சர் துறை சார்ந்தோருடன் கலந்துரையாடி உரிய நடவடிக்கை எடுப்பதாகத் தெரிவித்தார்.

## நாமலின் பெயரைக் கூறி மோசடி செய்தவர் கைது

(கொழும்பு)

நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் செயலாளர் தான் எனக் கூறி, அக்கரைப்பற்றை சேர்ந்த ஒருவரிடம் 20 இலட்சம் ரூபாய் பணத்தை மோசடி செய்தார் எனும் குற்றச்சாட்டில் ஒருவர கைதானார் கைதான ஒருவரை, நவம்பர் மாதம் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கு மாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற நீதிபதியும் மேலதிக நீதவானுமாகிய எச்.எம்.எம். பஸீல், நேற்று முன்தினம் உத்தரவிட்டார்.

20 இலட்சம் ரூபாயை வழங்கிய அக்கரைப்பற்றை சேர்ந்த நபர், கொழும்பு விசேட புலனாய்வு பிரிவினரிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

அந்த முறைப்பாட்டுக்கமைய, விசேட புலனாய்வு பிரிவினர், குறித்த சந்தேக நபரைகடந்த 20ஆம் கைது செய்து கொழும்பு அளுத்கடை நீதிமன்றில் 21ஆம் திகதி ஆஜர்படுத்தினர்.

விசாரணையை மேற்கொண்ட நீதிமன்றம் சந்தேக நபரை பிணையில் விடுதலை செய்தது கடந்த 21 ஆம் திகதி அக்கரைப்பற்றும் நீதிமன் றில் ஆஜராகுமாறு உத்தரவிட்டது.

அளுத்கட நீதி மன்ற உத்தரவின் பேரில் அக்கரைப்பற்று நீதிமன்றில் நேற்று ஆஜரான சந்தேகநபரை, எதிர்வரும் நவம்பர் மாதம் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

## 7 பொலிஸ் அதிகாரிகளுக்கு உடனடி இடமாற்றம்

(கொழும்பு)

உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் ஏழு பொலிஸ் அதிகாரிகளுக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் மூன்று பிரதிப் பொலிஸ்மா அதி பர்கள், நான்கு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள் ஆகியோருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் நான்கு பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் 08 பொலிஸ் நிலையங்களின் பொறுப்பதிகாரிகளும் இடமாற்றப்பட்டுள்ளனர்.

எதிர்வரும் நாட்களில் இன்னும் ஏராளமான பொலிஸ் அதிகாரிகளுக்கு இவ்வாறான திடீர் இடமாற்றங்கள் வழங்கப்படலாம் என்று பொலிஸ் தலைமையக தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## "கரட்" வந்தது எப்படி? விசாரணை அவசியம்

நாடாளுமன்றத்துக்குள் கரட் மரக்கறி எடுத்து வரப்பட்டமை தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று உத்தர விடப்பட்டுள்ளது.


இந்த விடயத்தை ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜெயமஹா நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்தார்.

தமது மேசைக்கு முன்னால் அந்த கரட் வைக்கப்பட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது நாடாளுமன்றத்தின் பாதுகாப்பு தொடர்பில் ஆளும் கட்சியினரும் தமது கரிசனையை வெளிப்படுத்தினர்.

இந்தநிலையில் குறித்த கரட்டை தூக்கி பிடித்த நளின் பண்டார, "அரசாங்கத்தின் 2015ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டமும் இந்த கரட்டை போன்றதே" என்று குறிப்பிட்டார்.

## ஜனவரியில் குடத்தனை வீதி மீள்புனரமைப்பு செய்யப்படும்



மருதங்கேணி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குடத்தனை - பொற்பதி வீதியை புனரமைப்பதற்கு 11 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.


புனரமைப்பு பணிகள் 2015 ஜனவரி முதல்வாரத்தில் ஆரம்பமாகும் எனவும் பருத்தித்துறை பிரதேசசபை தலைவர் பூபாலசிங்கம் சஞ்ஜீவன் தெரிவித்தார்.

3.7 கிலோமீற்றர் நீளமான மேற்படி வீதி பாரியளவில் சேதமடைந்து போக்குவ ரத்தில் ஈடுபடமுடியாத நிலையில் உள்ளது. 3 கிராம அலுவலர் பிரிவுகளை சேர்ந்த 500இற்கும் மேற்பட்ட மக்கள் பயன்படுத்தும் வீதியாக இவ்வீதி காணப்படுகின்றது.

வீதி சேதமடைந்திருப்பதால் பாடசாலை மாணவர்கள், நோயாளிகள் உள்ளிட்ட பலர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

தற்போது மழை காலம் ஆரம்பித்துள்ளமையால் வீதி மேலும் சேதமடைந்துள்ளது. இதனால் இவ்வீதி முன்னுரிமை பிரகாரம் ஜனவரியில் மீள் புனரமைப்பு செய்யப்படவுள்ளது என்றார் தவிசாளர்.

● கரைப்பட்டுள்ள இலங்கைப் படத்தைப் பயன்படுத்தி 26, 27 ஆகிய வினாக்களுக்கு விடை எழுதுக.




26. பொலன்னறுவை நகரத்தைக் குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?
(1) A (2) B
(3) C (4) D

27. களுகங்கையைக் குறிக்கும் ஆங்கில எழுத்து யாது?
(1) W (2) X
(3) Y (4) Z

28. "டங் டங் சத்தம்பார் ஆலையிலே இரும்பு உருக்கி அடிக்கிறார் ஆலையிலே" இப்பாடல்
(1) அருவிவெட்டுப் பாடல் (2) தொழிற்பாடல்
(3) வண்டிப்பாடல் (4) விளையாட்டுப் பாடல்

29. உருவில் உள்ள பொலிஸ்காரரின் சைகை எதனைக் குறிப்பிடுகின்றது?




(1) பின்னாலிருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிற்பாட்டுக.
(2) முன்னாலிருந்து வரும் வாகனங்களை மாத்திரம் நிற்பாட்டுக.
(3) முன்னாலிருந்து பின்னாலிருந்தும் வரும் எல்லா வாகனங்களையும் நிற்பாட்டுக.
(4) முன்னாலிருந்தும் பின்னாலிருந்தும் வரும் எல்லா வாகனங்களையும் நிற்பாட்ட வேண்டாம்.

30. போக்குவரத்திற்காகச் சைக்கிள்களைக் கூடுதலாகப் பயன்படுத்துவதுடன் தொடர்புபட்ட பிழையான கூற்று
(1) சுற்றாடல் மாசடைவதைக் குறைக்கலாம்.
(2) போக்குவரத்துச் செலவுகளைக் குறைக்கலாம்.
(3) விபத்துக்களைக் குறைக்கலாம்.
(4) நோய்களைக் குறைக்கலாம்.

31. சந்திர கிரகணம் ஆரம்பிக்கும்போது
(1) சந்திரன் படிப்படியாகக் கருமையடைகின்றது.
(2) சந்திரன் ஒரே தடவையில் கருமையடைகின்றது.
(3) சந்திரனின் பிரகாசம் படிப்படியாக அதிகரிக்கின்றது.
(4) சந்திரனின் பிரகாசம் ஒரே தடவையில் அதிகரிக்கின்றது.


32. ஒருவருடைய பாதத்தில் துருப்பிடித்த ஆணி குத்தினால் அவருக்குத் தாமதமின்றிக் குடிக்கக் கொடுப்பதற்கு உகந்த மருந்து
(1) கொத்துமல்லி (2) மரமஞ்சள் (3) வில்வம் பூ (4) ஆவரசம் பூ

33. நீர் நிரம்பிய ஒரு போத்தலின் வாயைத் தேநீர் வடியினால் மூடி, உருவில் உள்ளவாறு கவிழ்த்துப் பிடிக்கும்போது போத்தலில் உள்ள நீர்



(1) துளித்துளியாக விழும்.
(2) தனி அருவி போல் கீழ்நோக்கிப் பாயும்.
(3) மெல்லிய அருவி போல் விசிறப்படும்.
(4) விழாமல் இருக்கும்.

34. நீர் நிரம்பிய கண்ணாடிக் குவளையின் அடியில் மாபிள் ஒன்று உருவில் உள்ளவாறு இருக்கின்றது.நீர் மட்டத்திற்கு மேலே கண்ணை வைத்துப் பார்க்கும்போது அந்த மாபிள் தெரிவது



(1) குறித்த அளவிற்குச் சமமாக குறித்த ஆழத்தில் இருப்பதுபோல்
(2) குறித்த அளவிற்குச் சமமாக குறைந்த ஆழத்தில் இருப்பதுபோல்
(3) குறித்த அளவிலும் பெரிதாக குறித்த ஆழத்தில் இருப்பதுபோல்
(4) குறித்த அளவிலும் பெரிதாக குறைந்த ஆழத்தில் இருப்பதுபோல்

பயிற்சி வினாக்களின் விடைகள் எதிர்வரும் சனிக்கிழமை வெளியாகும்



## தரம் - 5 புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி- 2015

பகுதி - II
1 மணி 15 நிமி



# கல்வி முரசு

01. பின்வரும் கவிதைகளை வாசிக்க.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
 கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
 வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
 கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுது
 தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது

- பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் -

இக் கவிதைகளைப் பயன்படுத்திக் கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) இக்கவிதைகளில் வருணிக்கப்படும் காட்சி என்ன என்பதை எழுதுக.

..........................................................................................

(ii) பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.

(அ) செக்கச்சிவந்த ..........................................................

(ஆ) கண்விழித்தல் ..........................................................

(iii) இங்கு உள்ள ஓர் உவமானத்தை எழுதுக.

..........................................................................................

(iv) இக் கவிதைகளில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.

..........................................................................................

(v) நின்ற இருள் சொல்லாமல் ஓடுது" என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து

..........................................................................................

02. பின்வரும்தொடர்கள் ஒவ்வொன்றும் வெளிப்படுத்தும் கருத்தை எழுதுக.

(i) விளையும் பயிரை முளையில் தெரியும்

..........................................................................................

(ii) சாடிக்கு ஏற்ற மூடி போல

03. பின்வரும் வாக்கியங்களில் பொருத்தமான இடங்களில் நிறுத்தற் குறிகளை இடுக.
(i) அந்த மலரில் சிவப்பு நீலம் ஊதா ஆகிய நிறங்களுள்ள இதழ்கள் ஆறு உண்டு
(ii) தந்தையே நீடூழி வாழ்க

04. அடைப்பினுள்ளே இருக்கும் சொற்களை மாத்திரம் பயன்படுத்திச் சரியான கருத்துள்ள மூன்று வாக்கியங்களை எழுதுக. ஒவ்வொரு வாக்கியத்திலும் நான்கு சொற்கள் இடம்பெற வேண்டும். ஒரு சொல்லை ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்துக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அம்மா | துலக்கினான் | உணவு | உலாவி | விடியற்காலையில் | புத்தகத்தில் |
| தங்கை | வந்தேன் | பாடங்களை | எனது | நேற்று | பை |
| நான் | சமைத்தாள் | பல் | பாடசாலைக்கு | கவி | முந்தநாள் |
| நண்பன் | செய்தாள் | ஆயத்தம் | இரவில் | தமிழ் | வேலை |

(i) ..............................

(ii) ..............................

(iii) ..............................

05. வெற்றிடத்திற்குப் பொருத்தமான விடையை எழுதுக.

(i)  This is a ..............................

(i) இரவு என்பதற்குரிய ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

..............................

06. பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்தில் எழுதுக.
''தயவுசெய்து உங்கள் பேனையை எனக்குத் தாருங்கள்''

..............................

● 7, 8 ஆகிய வினாக்களில் உள்ள வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

07. I will bring flowers ..............................

08. மகே கம யாப்பனய..............................

09. இங்கு வாருங்கள் என்னும் வாக்கியம் சிங்களத்தில் கூறப்படும் விதத்தைத் தமிழில் எழுதுக.

..............................

● 10 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடு இடுக.



10. இவ் உருவில் உள்ள தாவரம்
(1) நன்னாரி (2) முடக்கொத்தான்
(3) இருவேரி (4) பொன்னாங்கண்ணி

11. ஆபத்து ஏற்படுவதை உணர்ந்தவுடன் தனது உடலை வட்டமாகச் சுருட்டிக்கொள்ளும் விலங்கு
(1) பிள்ளைப் பூச்சி (2) மரவட்டை (3) அட்டை (4) மயிர்கொட்டி

12. மழை பெய்யப் போவதை உணர்ந்துகொள்ளத்தக்க விலங்கின் நடத்தை
(1) பூனை கத்தும் (2) நரி ஊளையிடுதல் (3) நாய் குரைத்தல் (4) ஈசல் பறத்தல்



13. இரவில் திரியும் பறவை
(1) ஆந்தை (2) மரங்கொத்தி (3) மீன்கொத்தி (4) கானாங்கோழி

14. பின்வரும் எச்சந்தர்ப்பத்தில் வீட்டில் உள்ள நாய் உரத்துக் குரைக்கும்?
(1) தனது எல்லைக்குள்ளே வேறு நாய் வரும்போது
(2) வெளியாள் வீட்டிற்கு வரும்போது
(3) நாய் கவலையை அல்லது தனிமையை உணரும்போது
(4) எவரும் நாய்க்குத் தொந்தரவு செய்யும்போது

15. சர்க்கரைச் சாத்தை' தயாரிக்கும்போது பயன்படுத்தப்படும் வித்து
(1) கௌபீ (2) பாசிப் பயறு (3) வெண்டி (4) பலாக்கொட்டை

16. மூடாமல் சமைக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்
(1) வத்தாளை (2) ஈரப்பலா (3) மரவள்ளி (4) பலா

17. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கக்கூடாத பொருள்
(1) கருவா (2) வெள்ளைப்பூண்டு (3) கொறக்காய் (4) இஞ்சி

18. கையில் ஒட்டிய பலாக்காய்ப் பாலை எளிதாக அகற்றப் பயன்படுத்தத்தக்க பொருள்
(1) சவர்க்காரம் (2) குளிர்நீர் (3) வெந்நீர் (4) மண்ணெண்ணெய்

19. நீலச் சாயத்தையும் சிவப்புச் சாயத்தையும் கலந்து தயாரிக்கப்படும் நிறம் யாது?
(1) பச்சை (2) ஊதா (3) மஞ்சள் (4) கறுப்பு


20. வலைப்பந்தாட்டக் குழுவில் உள்ள ஆட்டக்காரர்களின் எண்ணிக்கை (பதிலாட்டக்காரர்கள் தவிர)
(1) 6 (2) 7 (3) 8 (4) 9

21. ஓட்ட வீரர் ஓடி முடித்தவுடன் செய்ய வேண்டியது
(1) சிறிது நேரத்திற்கு நிலத்தில் கால்களை நீட்டியிருத்தல்
(2) குளிர்பானத்தைப் பருகுதல்
(3) உடலை நீரினால் நனைத்தல்
(4) எளிய பயிற்சியில் ஈடுபடுதல்

22. ஒருவர் வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழைப் பெறச் செல்ல வேண்டியது
(1) பிரதேசச் செயலாளரிடம்
(2) கிராம அலுவலரிடம்
(3) பொலிஸ் நிலைய அலுவலரிடம்
(4) சமுர்த்தி அலுவலரிடம்

23. சந்தேகத்திற்கிடமான பொதியைக் கண்டவுடன் பாதுகாப்பிற்காக அறிவிக்க வேண்டிய தொலைபேசி இலக்கம்
(1) 119 (2) 147 (3) 456 (4) 1919

24. குறித்த நிறங்கள் இடாமல் தரப்பட்டுள்ள பின்வரும் இலச்சினைகளிடையே இலங்கையின் தபால் சேவையின் இலச்சினையைத் தெரிந்தெடுக்க.

 (2)  (3)  (4) 

25. மகாசேன மன்னன் கட்டுவித்த குளம்
(1) திசாவாவி (2) மின்னேரியாக் குளம் (3) கலாவாவி (4) பராக்கிரம சமுத்திரம்

# "கித்துளக வருண-2014"

# கண்காட்சியும் விற்பனையும்

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சானது மாத்தறை மாவட்டத்தில் கித்துள் உற்பத்திப் பொருட்களைப் பிரபல்யப்படுத்தி ஊக்குவிக்கும் நோக்கில் மாத்தறை மாவட்டத்தில் மாத்தறை நூபே பழைய ஒல்லாந்தர் கட்டடத் தொகுதியில் 2014 ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதி முதல் நவம்பர் 2 ஆம் திகதி வரையில் 'கித்துளக வர்ண' கண்காட்சியையும் விற்பனைச் சந்தையையும் நடாத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளதாக பாரம்பரிய கைத்தொழிகள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இக்கண்காட்சி மூன்று நாட்களிலும் காலை 9 மணி முதல் இரவு 9. மணி வரை பொது மக்களின் பார்வைக்கும் விற்பனைக்கும் திறந்து வைக்கப்படடிருக்கும். இதற்கு நுழைவுக் கட்டணம் எதுவும் அறவிடப்படமாட்டாது இந்த 3 நாட்கள் கண்காட்சி மற்றும் விற்பனைச் சந்தையை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு தனது அமுலாக்கல் நிறுவனமான கைத்தொழில் அபிவிருத்திச சபையுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ளது.

பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வழிகாட்டலிலும் தலைமைத்துவத் திலும் இடம்பெறும் இந்நிகழ்வில் இளைஞர் அலுவல்கள் மற்றும் திறன்கள் விருத்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன, புனர் வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர் சந்திர சிறி கஜதீர, மாத்தறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரும் தபால் சேவைகள் பிரதி அமைச்சருமான சனத்ஜெயசூரிய கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக பிரதி அமைச்சர் ஹேமல் குணசேகர, பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் பிரதி அமைச்சர் விஜய தகநாயக்க, பாரம்பரிய கைத்தொழிகள மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் வீரகுமார திஸாநாயக்க ஆகியோரும் மற்றும் தென்மாகாண சபை அமைச்சர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் பல முக்கிய பிரமுகர்களும் கலந்து சிறப்பிப்பார்கள்.

இக் கண்காட்சியில் தரம் வாய்ந்த கித்துள் உற்பத்திகளைக் காட்சிப்படுத்துவதற்காகவும் கித்துள் உற்பத்தியாளர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை நுகர்வோருக்கு நேரடியாக சந்தைப்படுத்துவதற் காகவும் 20. காட்சிக் கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன. உற்பத்தியாளர்கள் கித்துள் பாணி, கித்துள கருப்பட்டி, கித்துள் பாகு, கித்துள் மா, கித்துளை அடிப்படையாகக் கொண்ட புடிங், ஹலப, தலப போன்ற உணவு வகைகள் புதிய உற்பத்திகளான கித்துள் ஜெலி மாமலேற் கித்துள் பானம் கித்துள் சொக்கிலேட் மற்றும் கைப்பணிப் பொருட்கள் மரம் சார்ந்த உற்பத்திகள் போன்றவற்றையும் காட்சிப்படுத்துவதுடன் உற்பத்தியாளரையும் நுகர்வோரையும் இணைக்கின்ற தளமாக இந்தக் கண்காட்சி அமையும் என அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்

## டெங்கு நோயாளர்கள் 61 பேருக்கு சிகிச்சை



யாழ்.போதனா வைத்தியசாலையில் கடந்த 28 நாட்களில் 61 டெங்கு நோயாளர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அவ்வைத்தியாலையின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் இருந்தே இவர்கள் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாக அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்றைய தினம் யாழ்.சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இருந்து ஒருவர் இவ்வாறு சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார். (பா)

## அன்னதான மடம் அமைக்க நடவடிக்கை

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பிரசித்திபெற்ற ஆலயங்களில் ஒன்றான கிருஷ்ணர் ஆலய வளாகத்தில் அன்னதான மடம் ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டுவிழா அண்மையில் இடம்பெற்றது. இதில் வடமாகாண சபை உறுப்பினரும் பிரஸ்தாப ஆலயப் பரிபாலன சபையின் தலைவருமான சு.பசுபதிப்பிள்ளை மற்றும் ஆலய பரிபாலன சபையைச் சேர்ந்தவர்கள், வர்த்தகர்கள், ஆலய பக்தர்கள், மதகுருமார் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் ஆலயம் நீண்டகாலமாக சிறிய கொட்டகையாகச் செயற் பட்டு வந்தது. இதனைத் தொடர்ந்து ஆலய பரிபாலன சபையினர் எடுத்த துரித நடவடிக்கை மூலம் பல மில்லியன் ரூபா செலவில் நவீன கலை வடிவமைப்புடன் புதிதாக ஆலயம் நிர்மாணிக்கப் பட்டுள்ளது.

தற்போது அதனுடன் அன்னதான மடம் அமைக்கும் பணியும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## பூநகரி பிரதேசத்தில் அனர்த்த ஒத்திகை

(பூநகரி)

கிளிநொச்சி மாவட்ட செயலகத்தின் அனர்த்த முகாமைத்துவ பிரிவினரால் பூநகரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள வலைப்பாடு கிராமத்தில் அனர்த்த ஒத்திகை மிக அண்மையில் நடாத்தப்பட்டது.

அரசாங்க அதிபர் திருமதி. ரூபவதி கேதீஸ்வரனின் வழிகாட்டலில் அனர்த்த முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் க.சுகுணதாஸ் தலைமையிலான அணியினர் இதனை நிகழ்த்தினார்கள்.

வலைப்பாடு கிராம மக்கள் போதுமான ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். (90)








வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர் :- ........................................

முகவரி :- ........................................

பிறந்த ஆண்டு :- ........................................

கூப்பன் ஐந்தும், புகைப்படமும்

........................................

பெற்றோர் கையொப்பம்


# முருகன் சூரனை அழித்த சூரசம்ஹாரம் இன்று

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற முருகப் பெருமானுடைய கோவில்களில் இன்று சூரன்போர். ஆணவமே வடிவான அசுரன் சூரபன்மன் தேவர்களைச் சிறையிலிட்டான். முனிவர்களை வருத்தினான் அதனால் அவர்கள் சிவபெருமானிடம் சென்று முறையிட்டனர்.

அதனால் சிவபெருமான் தமது நெற் றிக் கண்ணிலிருந்து முருகனை உதிக்கச் செய்தார் சூரபன்மன் முதலான அசுரர்களை அழிக்கவே ஆறுமுகன் ஷண்முகனாகவந்து தோன்றினார். அதை உணர்த்துவதே கந்த ஷஷ்டிப் பெருவிழா.

கொடிய அசுரன் சூரபன்மனுக்கு இரண்டு தம்பிமார் இருந்தனர். சிங்கமுகாசுரன், தாரகாசுரன் இருவரும் முருகனோடு போர் புரிந்து அவருடைய வேலாயுதத்தினால் மாண்டு போயினர். ஈற்றில் சூரபன்மனும் முருகப் பெருமானோடு யுத்தம் செய்து தனது மாஜாபலத்தினால் மாமரமாய் மாறி நின்றான். முருகனோ மாமரத்தையும் வெட்டி வீழ்த்தினார்.



பின்பு சூரனைக் கொன்று அவனை இருகூறுகளாக்கி சேவலும் மயிலுமாகி வர, சேவலைத் தம்முடைய கொடியிலே நின்று உதவுமாறு பணித்தார் மயிலைத் தமது வாகனமாக ஆக்கிக் கொண்டார். இதனையே இன்றைய சூரன்போர் விளக்குகிறது.

இந்தச் சூரசம்ஹாரத்திலே ஒரு தத்துவமே அடங்கி இருக்கின்றது. ஆணவம்-சூரன், கன்மம்-சிங்கமுகன், மாயை-தாரகன் இந்த மூன்றும் அழிந்ததால் தான் நாம் கடவுளைக் காணலாம்.

முருகன் சிவபரம் பொருள். சிவனும் முருகனும் ஒன்று தான் ஆகவே மும்மலங்களையும் அடக்கி ஆள்பவரே பதி. அவர் தான் ஆறுமுருகப் பெருமான் தேவர்களைச் சிறை மீட்டு வெற்றிவாகை சூடியதனால் முருகனுக்கு ஒரு பரிசு கொடுக்க விரும்பிய தேவர்கள் இந்திரனின் வளர்ப்பு மகளாகிய தெய்வயானை அம்மையை முருகனுக்குத் திருமணம் செய்து கொடுக்க எண்ணினார்கள். நாளை நடைபெறும் திருக்கல் யாணம் இதனை உணர்த்தி நிற்கிறது.

அதனால் ஆறுமுகப் பெருமானுக்கு தெய்வயானை அம்மை கிரியா சக்தியாக அமைந்தார். அது முதல் முருகப பெருமான் தேவ சேனாதிபதியாக அருளாட்சி புரிகின்றார். அடியார்க்கு அருள் பாலிக்கின்றார்.

ஆக்வே இன்றைய சூரனை வதம் செய்த திருநாளில் எங்கள் கலியுகவரதனாகிய கந்தப் பெருமானின் திவ்ய பெருங்கருணைக்குப் பாத்திரமாகி அவனருள் பெற்றுய்வோம்.

எமது கந்தப் பெருமானின் கருணை வெளிப்படும் கந்த ஷஷ்டி விரத நான்னாளிலே "வெற்றிவேல்! வீரவேல்!! சூரபன்மன் மார்பைத் துளைத்த வேல், விண்ணோர் சிறை மீட்டவேல்! என வணங்கி இனிமேல் "வேலுண்டு வினையில்லை, கந்தன் கருணையுண்டு கவலை இல்லை, மயிலுண்டு பயமில்லை! என்று சிந்தித்து வந்தித்து முருகப் பெருமானைச் சேவித்து நிற்போமாக.

* * * *

தெய்வத் தமிழ்ச் சுடர்
இராசையா ஸ்ரீதரன்

# குர்தீஷ் பெண் வீராங்கனை தலை துண்டித்து கொலை




குர்தஷ் படையில் இணைந்து, ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளுக்கு எதிராக வீரத்துடன் போரிட்டு வந்த பெண் வீராங்கனை

ரெஹேனாவை உயிருடன் பிடித்து தலையைத் துண்டித்து ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகள் கொடூரமாக கொலை செய்துள்ளனர்.

இவரது மரணச் செய்தி இதுவரை உறுதி செய்யப்படவில்லை. ஆனாலும் பல்வேறு இணையதளங்களிலும் இந்த மரணச் செய்தி காட்டுத் தீயாக பரவி வருகின்றது.

இந்தப் பெண்மணி குர்தீஷ் படையில் இருந்தபோது நூற்றுக்கணக்கான ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாதிகளை கொன்று குவித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# வெடித்து சிதறும் எரிமலையால் ஜப்பான் அழியும் அபாயம்



ஜப்பானில் அதிக அளவில் எரிமலைகள் உள்ளதாகவும் இவை அவ்வப்போது வெடித்து சிதறி மக்களை அச்சுறுத்தி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றன.


ஆனால் இவை அனைத்தும் ஒரே நேரத்தில் ஒட்டு மொத்தமாக வெடித்தால் அங்கு மிகப்பெரிய சேதம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவும் இதனால் ஜப்பான் நாடே அழியும் அபாயம் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமட்டுமன்றி அங்கு வாழும் 12 கோடியே 70 இலட்சம் மக்களின் உயிருக்கும் ஆபத்து ஏற்படும் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் கோபே பல்கலைக் கழகத்தின் புவியியல் பேராசிரியர் யோஷியுகி தட்சுமி, உதவி பேராசிரியர் கெய்கோ சுசுகியும் தங்கள் ஆய்வின் மூலம் இதை கண்டறிந்துள்ளனர். இதுபோன்ற நிகழ்வு அடுத்த நூற்றாண்டில் ஏற்படும் வாய்ப்பு உள்ளதாகவும் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

# இந்திய-சீனா எல்லையில் பாதுகாப்பு நிலைகள்

## கடும் எதிர்ப்பில் சீனா



(சீனா)

இந்திய-சீனா எல்லையில் இந்தோ- திபெத்திய எல்லை பாதுகாப்பு நிலைகளை அமைக்கும் இந்தியாவின் முடிவுக்கு சீனா கடும் எதிர்ப்பு தெரிவித்திருப்பதுடன் மிரட்லும் விடுத்துள்ளது. சீன வெளியுறவுத் துறை அமைச்சக செய்தி தொடர்பாளர் செய்தியாளர்களிடம் பேசுகையில் இதனை தெரிவித்தார்.

சீனா - இந்தியா இடையிலான எல்லைப் பிரச்சினையில் சிக்கலை ஏற்படுத்தக் கூடிய எந்த நடவடிக்கையிலும் இந்தியா ஈடுபடாது என தாங்கள் நம்புவதாக அவர் தெரிவித்தார். இல்லையென்றால் இரு நாடுகளுக்குமிடையேயான எல்லைப் பிரச்சினை மேலும் சிக்கலாகி விடும் என்று கூறிய அவர், இவ்விகாரத்தில் சீனாவின் நிலைப்பாடு தெளிவானது என்றும் தெரிவித்தார்.

எல்லைப் பிரச்சினைக்கு இந்தியாவுடன் நட்பு ரீதியிலான பேச்சுவார்த்தை நடத்தி தீர்வு காண சீனா விரும்புவதாகவும் குறிப்பிட்டார்.

இந்நிலையில் அருணாச்சலப் பிரதேச மாநிலத்தில் இந்திய-சீன எல்லையையொட்டி 54 இந்தோ-திபெத்திய எல்லைப் படையின் நிலைகளை அமைக்க இந்தியா முடிவு செய்துள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வரும் சீனா, இந்தியாவுக்கு மிரட்டல் விடுக்கும் தொனியில் பேசியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உலகச் செய்திகள்

# போகோஹறம் தீவிரவாதிகளால் நைஜீரியாவில் 32 சிறுவர்கள் கடத்தல்

நைஜீரியாவின் வடகிழக்கு பகுதியில் உள்ள மாபா என்னும் கிராமத்துக்குள் பிரவேசித்த போகோஹறம் தீவிரவாதிகள் 32 சிறுவர்களை கடத்தியுள்ளனர்.

கிராமத்துக்குள் பிரவேசித்த தீவிரவாதிகள் சரமாரியாக துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்டுள்ளனர். இதன்போது 17 கிராமவாசிகள் கொல்லப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.


நைஜீரிய அரசாங்கம் தீவிரவாதிகளுடன் சமாதான பேச்சுவார்த்தைக்கு அழைப்பு விடுத்துள்ள நிலையிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.



2009ஆம் ஆண்டு முதல் இதுவரையில் போகோஹறம் தீவிரவாதிகள் பெண்கள் உள்ளிட்ட 500 இற்கும் மேற்பட்டவர்களை கடத்திச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# கிருஷ்ணகிரியில் அணை திறப்பு வெள்ள அபாய எச்சரிக்கை

கிருஷ்ணகிரி கே.ஆர்.பி. அணை மற்றும் கெலவரபள்ளி அணைகளில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டுள்ளதால் தென் பெண்ணை ஆற்று கரையோரம் உள்ள 5 மாவட்ட மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



கனமழை பெய்து வருவதால் கிருஷ்ணகிரி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் அணையின் முழு கொள்ளளவான 52 அடியில், 51.01 அடிக்கு நீர் எட்டியுள்ளது. அணைக்கு விநாடிக்கு 1500 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. நீர் மட்டம் உயர்ந்துள்ளதால் அணையின் கீழ் மதகு வழியாக 1500 கன அடி தண்ணீர் நேற்று முன்தினம் காலை முதல் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் தென் பெண்ணையாற்றில் தண்ணீர் ஆர்ப்பரித்துச் செல்கிறது. இதையடுத்து கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை, விழுப்புரம், கடலூர் மாவட்டங்களில் தென் பெண்ணையாற்று கரையோர மக்களுக்கு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தண்ணீரின் அளவு அதிகரிக்க வாய்ப்புள்ளதால் ஆற்றங் கரையோரம் தாழ்வான பகுதியில் வசிக்கும் மக்கள் மேட்டுப்பாங்கான பகுதிகளுக்கு செல்லுமாறு பொதுப் பணித்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

# 70 ஆயிரம் கோடி மதிப்புள்ள தங்கம் இந்தியாவிற்கு வழங்கியது சுவிஸ் வங்கிகள்




உலக நாடுகள் கறுப்பு பணத்தை ஒழிக்கும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதால், சுவிஸ் வங்கிகள் இந்தியாவுக்கு சுமார் 7ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை அனுப்பியுள்ளன.

இந்தியாவில் கறுப்பு பணத்திற்கு எதிரான வழக்கு பலவீனமாக மாறத் தொடங்கியதால் செப்ரெம்பர் மாத காலகட்டத்தில் மட்டும் சுவிஸ் வங்கிகள் 2.2 பில்லியன் பிராங்க் மதிப்புள்ள தங்கத்தை இந்தியாவுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

மேலும் இந்தியாவில் தீபாவளி பண்டிகையில் தங்கத்தின் தேவை அதிகரித்ததால், அதனை சுவிஸ் வங்கிகளும், கறுப்பு பணம் வைத்திருந்தவர்களும் பயன்படுத்திக் கொண்டதாக வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

சுவிஸ் வங்கிகள் இந்தியாவிற்கும் பிற நாடுகளுக்கும் வங்கி கணக்காளர்கள் மற்றும் இதர தகவல்களை வெளியிடும் போது வங்கிகளின் செயற்பாடு மற்றும் தரம் பாதிக்காத வகையில் தகவல் அளிக்குமாறு ஒப்புதல் பெற்றுள்ளது.

# டுபாயில் கடலுக்கடியில் இலத்திரனியல் காட்சியறை




ஜப்பானைச் சேர்ந்த பிரபல இலத்திரனியல் நிறுவனமான சோனி தன்து புதிய எக்ஸ்பீரியா ஆகுவாடெக் காட்சியறையை டுபாயில கடலுக்கடியில் அமைக்கும் புதிய வணிக முயற்சியில் இறங்கியுள்ளது.

இந்த காட்சியறையில் எதிர் வரும் டிசம்பர் மாதம் மூன்றாம் திகதி முதல் சோனி நிறுவனம் தனது புது அறிமுகமான தண்ணீரால் பாதிப்பு ஏற்படாத ஸ்மார்ட் போன், டபலட மற்றும் பிற சாதனங்களையும் விற்பனைக்காக வழங்க இருக்கிறது.

இந்த நவீன தொழில் நுட்பம் மற்றும் புதுமையான வியாபார யுக்தி சந்தையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர் பார்க்கப்படுகிறது.

# ரஜினிகாந்தை நம்பி கட்சி நடாத்தவில்லை

## தமிழக பா.ஜ.க.தலைவர் அதிரடி

ரஜினிகாந்தை நம்பி நாங்கள் கட்சி நடத்தவில்லை என்று தமிழிசை சவுந்தரராஜன் அதிரடியாக கூறியுள்ளார்.

தமிழக பா.ஜ.க. தலைவர் தமிழிசை சவுந்தரராஜன் டில்லியில் செய்தியாளர்களிடம் பேசும்போது, "தமிழகத்தில் அ.தி.மு.க., தி.மு.க. ஆகிய கட்சிகளுக்கு மாற்றுக் கட்சி பா.ஜ.க. தான் என்று நாங்கள் சொல்லி வருகிறோம். தமிழகத்தில் எங்கள கட்சியை பலப்படுத்த, பொறுப்பாளராக நியமிக்கப்பட்டு இருக்கும் ராஜீவ் பிரதாப் ரூடியின் வழிகாட்டுதல் மிகவும் உறுதுணையாக இருக்கும் என்ற நம்பிக்கையுள்ளது.

நடிகர் ரஜினிகாந்தை நாங்கள் வலியப் போய் எங்கள் கட்சிக்கு அழைக்கவில்லை. தேசிய எண்ணம் கொண்ட திரைப்பட கலைஞரான அவர் வந்தால் நன்றாக இருக்கும் என்றுதான் எங்கள் கருத்துகளை பகிர்ந்து கொண்டோம். அதற்காக அவரை மட்டுமே முழுவது மாக நம்பி நாங்கள் கட்சியை நடத்தவில்லை என்பது தெளிவான உண்மையாகும்.

நரேந்திர மோடியின் தலைமை, எங்கள் கொள்கை, எங்கள் தொண்டர்களின் அர்ப்பணிப்பு ஆகியவற்றை நம்பித்தான் எங்கள் கட்சி இருக்கிறது.



ரஜினிகாந்த் மட்டுமல்ல, தேசிய எண்ணம் கொண்ட மற்ற நடிகர்கள், கலைஞர்கள், மருத்துவர்கள் என்று எந்தத்துறையில் இருந்தாலும் அவர்கள் எங்களுடன் இணைய வேண்டும் என்று விரும்புகிறோம். தமிழகத்தில் பா.ஜ.க. மிகப்பெரும் சக்தியாக மாறி அடித்தட்டு மக்களின் ஆதரவுடன் 2016இல் ஆட்சியை பிடிக்கும்" என்றார்.

# நாடு திரும்புவதற்கு தயக்கம்

# தமிழக அகதிகளின் இன்றையநிலை

## ஆய்வில் வெளியாகியது உண்மை

இந்தியாவில் தங்கியிருக்கும் இலங்கை அகதிகளில் பெரும்பாலானோர் தொடர்ந்தும் இந்தியாவில் தங்கியிருக்கவே விரும்புவதாக ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

டி.ஐ.எஸ்.எஸ். என்ற மும்பாயில் உள்ள சமூக தரவுகள் அமைப்பு இந்த ஆய்வை மேற்கொண்டது.

இதன்படி இந்தியாவில் தங்கியிருக்கும் சுமார் ஒரு இலட்சம் இலங்கை அகதிகளில் 67 சதவீதமானோர் இந்தியாவில் தொடர்ந்தும் இருப்பதையே விரும்புகின்றனர்.

சுமார் 520 குடும்பங்களில் 23 சதவீதமான குடும்பங்களே இலங்கைக்கு திரும்ப விருப்பம் வெளியிட்டுள்ளன.

மன்னார் மற்றும் வவுனியாவை சேர்ந்தவர்களே மீண்டும் திரும்பும் விருப்பத்தை வெளியிட்டுள்ளனர். அதிலும் 42 வீதமானோர் ஐக்கிய நாடுகள் அகதிகள் நிறுவனத்தின் அனுசரணையில் திரும்ப விரும்புகின்றனர். 4 சதவீதத்தினர் மூன்றாம் நாடு ஒன்றுக்கு செல்ல விரும்புகின்றனர்.

இந்தியாவில் 111 முகாம்களில் 67ஆயிரம் அகதிகள் தங்கியுள்ளனர். ஏனையவர்கள் முகாமகளுக்கு வெளியில் தங்கியுள்ளனர்.

# கடலில் படகுகள் கண்காணிப்பு அமைச்சரவைப்பத்திரம் சமர்ப்பிப்பு

ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள பரிந்துரைகள் தொடர்பில், இலங்கை எடுத்துள்ள நடவடிக்கை குறித்து ஒன்றியத்தின் பிரதிநிதிகளுக்கு தெளிவூட்டப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவிக்கின்றார்.

இது தொடர்பில் ஐரோப்பிய ஒன்றியம் சிறந்த பதிலை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்துள்ள பரிந்துரைகளில் பிரதான விடயமான படகுகளை கண்காணிக்கும் கட்டமைப்பை நிறுவுவதற்கான அமைச்சரவை பத்திரத்திற்கான அனுமதியை இந்த வாரத்திற்குள் பெற்றுக்கொள்ளவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள எட்டு பரிந்துரைகளுள் இதுவரையில் ஐந்து பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய 3 பரிந்துரைகளில் இரண்டிற்கான அமைச்சரவை அனுமதி கடந்த வாரம் பெற்றுக்கொண்டதாக அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

படகுகளை கண்காணிக்கும் கட்டமைப்பை நிறுவுவதற்கான பரிந்துரை மாத்திரமே தற்போது எஞ்சியுள்ளதுடன், அதற்கான ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவதற்கான அமைச்சரவை பத்திரம் முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

நாளை வியாழக்கிழமை அதற்கான அனுமதி கிடைத்தவுடன், குறித்த கட்டமைப்பை நாட்டில் செயற்படுத்த முடியும்.

அதன் பின்னர் நாட்டின் மீன்பிடி துறைக்காக ஐரோப்பிய ஒன்றியம் முன்வைத்த பரிந்துரைகள் அனைத்து பூர்த்தி செய்யப்படுவதோடு, அனைத்து பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ள முடியும் என அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

**தபால்...**

தபால் சேவை இலாபம் எதிர்பார்த்து நடாத்தப்பட்டு வரும் ஒரு நிறுவனம் அல்ல எனவும், மக்களின் தபால் தேவையை நிறைவு செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள ஒரு நிறுவனம் எனவும் அவ்வறிக்கையில் அமைச்சர் மேலும் கூறியுள்ளார்.

**லண்டன்...**

சாரதி வாகனத்தை நிறுத்தாது தப்பிச்சென்றுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. தனது நண்பர்களினால் செல்வம் என அறியப்படுகின்ற ஜெயரட்ணம் கந்தையா (வயது-43) என்பவரே நேற்றையதினம் இவ்வாறு மரணமடைந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இவர், 2000ஆம் ஆண்டு இலண்டனுக்குச்சென்று 14 வருடங்களாகின்றன எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

**இந்திய...**

தூதர் உறுதிமொழி வழங்கினார். நெடுந்தீவுக் கடற்பரப்பில் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவின் பேரில் யாழ். சிறைச்சாலையில் தடுத்துவைக்கப்பட்டிருந்த 24 இந்திய மீனவர்களுமே நேற்று முன்தினம் அதிகாலை முதல் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (25)

**அனந்தியின்...**

என கருதிக்கொள்ளாது நாமும் இங்கு இருக்கிறோம் என்பதை மறந்துவிடாதீர்கள். எங்கள் கருத்துக்கள் தெரிவிக்க எங்களுக்கும் வாய்ப்புக்கள் தரவேண்டும். நீங்கள் சர்வாதிகாரமாக அவையை நடத்துகிறீர்கள் என குமுறிய அனந்திக்கு,

நான் முடிவுசெய்த பின்னர் தெரிவிக்கும் கருத்துக்கு பின்னர் தெரிவிக்கும் எந்தக் கருத்துக்கும் நான் பயப்படப்போவதில்லை என பதிலளித்தார் அவைத்தலைவர் சிவஞானம். (இ)

**வடமாகாணசபை...**

நேற்றுக் காலை 9.30 மணியளவில் வடமாகாணசபையின் 18 ஆவது அமர்வு ஆரம்பமான சில நிமிட நேரத்தில் பெரும் கருத்து முரண்பாடு ஏற்பட்டு பெரும் களேபரம் ஏற்படுமோ என எண்ணக் கூடிய வகையில் இருந்தது.

அவைத்தலைவரின் பிரேரணைக்கு கருத்துத் தெரிவிக்கும் வகையில் பிரதி அவைத்தலைவரினால் கூட்டமைப்பின் அமைச்சர்கள் செய்யும் பிரதேச வேறுபாடுகளை சுட்டிக்காட்டியதுடன், முதலமைச்சரின் செயற்பாடுகளையும், அவைத்தலைவரின் ஆதங்கத்தையும் அவையில் விலாவாரியாக புட்டுப்புட்டு வைத்தவேளை அவையே அசந்து போய் இருந்தது இதற்கு பதிலளிக்கும் வகையில் பேசிய சர்வேஸ்வரனின் கருத்துக்கும் குறுக்கீடு வகையில் ஒரே மேசையில் அமர்ந்திருந்த இருவரும் பெரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டனர்.

இது தவிர கூட்டுறவு நியதிச் சட்டம் தொடர்பில் சயந்தனின் உரையை குழப்பும் வகையில் சிவாஜிலிங்கம் குறுக்கிட்டதுடன் சயந்தனின் உரத்த சத்தத்தால் வடமாகாணசபையே அதிர்ந்தது. தகாத வார்த்தைப் பிரயோகங்களும் தாராளமாக உலாவந்தன.

இதைகட்டுப்படுத்த இயலாத நிலையில் ஒலிவாங்கியை நிறுத்தியும் உறுப்பினர்களின் வாய்த்தர்க்கம் குறையவே இல்லை.

அது மட்டுமல்லாமல் முதலமைச்சரின் கருத்தை சாடும் வகையிலும் கருத்துக்கள் பல அவையில் அன்ரனி ஜெயநாதனினால் வெளியிடப்பட்டிருந்தன.

அதேபோல் முதலமைச்சருக்கும் சில அமைச்சர்களுக்கும் அரசியலைப் பொறுத்தவரையில் ஒன்று,இரண்டு ஆண்டுகள் தான் அனுபவம் இருக்கிறது. அவர்களுக்கு இன்னும் சிறிது கால அவகாசம் கொடுத்து பார்த்துவிட்டு அமைச்சரவை மீதும் அமைச்சர்கள் மீதும் எமது உறுப்பினர்கள் பேசமுடியும் அரசியலில் முதிர்வானவர்களுக்கு ஆதங்கம், கோபம் ஏற்படலாம். இங்குள்ள ஐங்கரநேசனைத்தவிர மற்றைய அமைச்சர்களை விட நானும் அரசியலில் முத்தவன் தான் இதற்காக நாம் இதை மிகப்பெரிய குறைபாடாக காட்டக்கூடாது என தெரிவித்தார் கூட்டமைப்பின் உறுப்பினர் கஜதீபன்.

எனினும் எமது கருத்துக்களுக்கும் இடம் கொடுங்கள் தனியே முதலமைச்சர், அமைச்சர்கள் மட்டும்தான் வடமாகாணசபை அல்ல என தெரிவித்தார் அனந்தி சசிதரன். அவர் கருத்து தெரிவிக்க முற்பட்டவேளையில் நேரம் கொடுக்காது விடயத்தை முடிவுக்குக் கொண்டுவருவதாக அவைத்தலைவர் தெரிவித்து அனந்தி சசிதரனை தடுக்க முற்பட்டவேளையில் கடும் தொனியில் சர்வாதிகாரமாக செற்படுகிறீர்கள் எனதெரிவித்து அமர்ந்தார் அனந்தி. இது தவிர இராணுவம் காங்கேசன்துறையில் புகையிரதத்தில் ஏறினால் மக்களுக்கு இடம்போதாதநிலை ஏற்படும் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து புகையிரத பாதையில் படுப்பேன் என தெரிவித்த கருத்துக்கும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சிலருக்கும் பெரும் வாதங்கள் இடம் பெற்றதுடன், அமர்வில் 7 பிரேரணைகள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதுடன் பிற்பகல் 2.30 மணியளவில் அவைத் தலைவரினால் எதிர்வரும் 19ஆம் திகதிக்கு அவை ஒத்திவைக்கப்பட்டது. (இ)

### - நகை கொள்வனவு தொடர்பாக -

# சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் யாழ். வணிகர் கழகம் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நகைக்கடை உரிமையாளர்கள் நகை கொள்வனவின் போது கடைப்பிடிக்கப்படவேண்டிய முக்கிய விடயங்கள் குறித்து யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருடன் யாழ். வணிகர்கழகத்தினர் கலந்துரையாடியதுடன் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து யாழ். மாவட்ட நகைக்கடை உரிமையாளர்களுக்கு விளக்கமளிக்கும் சந்திப்பொன்று நேற்றுப் பிற்பகல் 3.30 மணிக்கு யாழ். வணிகர் கழகத்தில் நடைபெற்றது.

யாழ். வணிகர் கழகத்தலைவர் ஆர்.ஜெயசேகரம் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் நகைக்கடை உரிமையாளர்கள் நகை கொள்வனவின்போது கடைப்பிடிக்க வேண்டிய சில விதிமுறைகள் பொலிஸாரினால் வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த வணிகர் கழகத்தலைவர் ஒவ்வொரு நகைக்கடைகளிலும் சி.சி.ரி.வி கமறா பெருத்தப்படவேண்டும் என்றும் அதில் பதிவு செய்யப்படும் காட்சிகள் மூன்று மாதங்களுக்குப் பேணப்படவேண்டும். என்னும் புதிய நடைமுறையொன்றை கடைப்பிடிககுமாறு நகைக்கடை உரிமையாளர்களை பொலிஸார் வலியுறுத்தியுள்ளதாகவும், மேலும் நகை கொள்வனவின்போது முறையான கொள்வனவுப்பதிவேடு ஒன்றைப்பேணுமாறும் நகை விற்பவர் நகையின்தரம், விலை, நகையின் பெயர் போன்ற விபரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட்டு பற்றுச்சீட்டை வழங்கவேண்டும். சில வேளைகளில் நகைவிற்றவர் களவு நகையெனில் விற்ற கடையை அடையாளம் காட்டும் போது நகைகடை உரிமையாளர் வந்திருப்பவர் பொலிஸ் சீருடையுடன் வந்திருக்கிறாரா? என்று பார்க்கவேண்டும். அத்துடன் எந்த பொலிஸ் நிலையப் பொலிஸார் என்று தெரிந்து கொள்ளவேண்டும். வெளிமாவட்ட பொலிஸார் என்றால் நகைக்கடை உரிமையாளர் தமது பகுதி பொலிஸ் நிலையத்துடன் தொடர்பு கொண்டு விபரம் தெரிவிக்கவேண்டும் என்றும் தெரிவித்த ஜெயசேகரம், களவு நகைகளைப்பிடிப்பதற்கு நகைக்கடை உரிமையாளர்கள் இவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றி ஒத்துழைப்பு வழங்கவேண்டும் என்று தம்மிடம் யாழ். சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கேட்டுக்கொண்டதாகவும் தெரிவித்தார்.

மேலும் கொள்வனவு செய்யப்பட்ட நகை களவு நகை எனில் அந்த நகை திருப்பிக்கொடுக்கப்படவேண்டும். பொலிஸாரிடம் கொடுக்கும் போது, பெறும் பொலிஸாரிடம் கையெழுத்துடன் ஆவணமொன்றையும் நகைக்கடை உரிமையாளர் பெற்றுக் கொள்ளவேண்டும். இவை தவிர களவு நகை குறித்தும், களவு சம்பந்தமானவர் குறித்தும் எந்தவேளையும் தம்மிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு தெரிவிக்கமுடியும் என்றும் தொலைபேசி இலக்கத்தையும் தந்துள்ளதாகவும் யாழ். வணிகர் கழகத்தலைவர் ஆர். ஜெயசேகரம் தெரிவித்துள்ளார். (பா)

**மாகாண அமைச்சர்கள்...**

கிறார்கள், முல்லைத்தீவுக்கு இல்லை. ஏன் அங்கு வயல் இல்லையா? பார்த்தீனியம் யாழ்ப்பாணத்தில் மட்டுமா இருக்கு முல்லைத்தீவிலும் இருக்கு. முல்லைத்தீவுக்கு அமைச்சரும் இல்லை, எம்.பியும் இல்லை என்பதாலா? முள்ளிக்குளத்தை விட முள்ளிவாய்க்காலில் அழிவுகள் கூட. நீங்கள் முள்ளிக்குளத்தில் 82 வீட்டுக்கு அத்திவாரக்கல் வைத்து அங்கே கொடிகட்டுகிறீர்கள் அவர்கள் இராணுவக் கட்டுப்பாட்டில் வாழ்ந்தவர்கள் ஆனால் நாங்கள் புலிகளுடன் இருந்து எல்லாவற்றையும் இழந்து கோமணக் குண்டியரானவர்கள் இது அரசாங்கம் தந்தநிதி. அமைச்சருடைய நிதி அல்ல. இவை சமமாகப் பங்கிடப்பட வேண்டும்.

அது மட்டுமல்ல அமைச்சரவைத் தீர்மானங்களை எங்களுக்கு சொல்வதில் உங்களுக்கு என்ன கஷ்ரம் நாங்கள் கேட்டம் ஆனால் எந்த முடிவும் இல்லை. நீங்கள் நிர்வாகம் செய்வது என்றால் நாங்கள் போகிறோம். எங்களுடைய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நாங்கள் வேலைமினக்கட்டு இங்கு வரவில்லை கைநாட்டு போடுற மக்களும் எங்களை கேள்வி கேட்கிறார்கள். வடமாகாணசபையால் செய்யக்கூடிய விடயங்களை ஏன் செய்யவில்லை எனக்கேட்கிறார்கள். ஏலாவிட்டால் விட்டு விட்டுப்போங்கள் சும்மா மக்களை ஏமாற்றவேண்டாம்.

இன்னும் ஒரு விடயம் ஜனாதிபதி முதல்முறை வந்தபோதுதெல்லிப்பளைக்கு முதலமைச்சர் போய் வரவேற்று அவருடன் இருந்தார் எங்களை வாருங்கள் என்று நீங்கள் அழைக்கவும் இல்லை. இப்போது ஜனாதிபதி வந்தபோது நீங்கள் கூடி தீர்மானித்திருந்தீர்கள் போகக்கூடாது என்று சம்பந்தர் இது தொடர்பாக இரண்டு நாளுக்கு பின் அறிவிப்பதாக சொன்னார் ஆனால் அவரும் அறிவிக்கவில்லை. முதலமைச்சரும் எழுத்துமூலம் அறிவிக்கவில்லை. 12ஆம் திகதி ஜனாதிபதி வருகிறார் 9ஆம் திகதி இடம் பெற்ற பேரவையில் கூட போகவேண்டாம் என்று சொல்லவில்லை. நாங்கள் என்ன சாத்திரம் பார்த்துப்போவதா? எங்களை தூக்கி எறிகின்ற நிகழ்ச்சி இங்கு நடந்து கொண்டு இருக்கின்றது. அமைச்சரவை தீர்மானங்களை சொல்வதற்கு ஏன் பயப்படுகிறீர்கள் ஏன் அங்கு களவு நடக்கிறதா? பிரதம செயலாளரை வேண்டாம் என்கிறீர்கள், சரியில்லை என்கிறீர்கள் ஆனால் அங்கே அமைச்சரவையில் பிரதம செயலாளர் சொல்வதை அனைவரும் ஏற்றுக்கொள்வதாக நான் இரகசியமாக கசிந்த செய்தியில் அறிந்துள்ளேன் இப்படி இரட்டை வேடம் போடவேண்டாம்.

நாம் மறத் தமிழர். எம்மை விலைக்கு வாங்கமுடியாது நாம் உண்மையைப்பேசுவோம் எமக்கு ஏதாவது இடையூறு ஏற்படுத்தினால் உடனடியாக இராஜினாமா செய்து விட்டு வெளியேறுவோம். நாம் இதை நம்பி வரவில்லை அவைத்தலைவரே பிரேரணையை முன்வைப்பது நீதியற்ற செயல். முதலமைச்சரும் அமைச்சர்களும் எமக்கு பதில் சொல்லவேண்டும். எங்களை எடுத்தெறிந்து விட்டு நீங்கள் மட்டும் செயற்படுகிறீர்கள் வெளிநாட்டில் இருந்து வந்த சேனாதிராஜா மட்டும் தான் ஜனாதிபதியிடம் போகக்கூடாது என செய்தி வெளியிட்டார் உள்ளூரில் இருந்த இவர்கள் எம்மை மதிக்காது "வந்தா வாங்கடா வராட்டி போங்கடா" இப்படி எங்களை அவமதிக்க இடமளிக்கமுடியாது ஒரு செயல்செய்தால் அதில் உச்சப்பயன் பெறவேண்டும். அதைவிட்டு இவ்வாறான செயல்களை செய்வதை நிறுத்துங்கள் என எச்சரிக்கும் தொனியில் தெரிவித்தார். (இ)

# தேசிய ரீதியில் வெள்ளிப்பதக்கம் சுழிபுரம் மாணவிக்கு பாராட்டு

(சுழிபுரம்)


சுழிபுரம் விக்ரோறியா கல்லூரியின் தரம் 11 மாணவி செல்வி கணேசநாயகம் யசோதா வெள்ளிப்பதகக்கத்தினை தேசிய ரீதியில் பெற்றதை கல்லூரி சமூகம் முழுமையாக வாழ்த்தியுள்ளது.

கொழும்பு பல்கலைக்கழக இந்து மன்றம் நாடு தழுவிய மத்திய பிரிவு இந்து சமய கட்டுரைப் போட்டியில் இரண்டாம் இடத்தினைப் பெற்று சான்றிதழும், வெள்ளிப்பதக்கமும் பெற்று வெற்றி பெற்றிருந்தார்.

கொழும்பு இராமகிருஸ்ணன் மண்டபத்தில் வைத்து மேற்படி மாணவிக்கு வழங்கப்பட்ட நிகழ்வை பாராட்டியே கல்லூரிச் சமூகமும் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்துள்ளது.

# புதிய ஆசிரியர் சேவைச் சட்டம் இன்று முதல் போராட்டம்

## இலங்கை ஆசிரியர் சங்கம் களத்தில்



புதிய ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை சட்டதிருத்தத்துக்கு எதிராக இன்று முதல் மாகாண ரீதியில் ஆர்ப்பாட்டங்களை ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது,

இதன்படி, முதலாவது ஆர்ப்பாட்டம் இன்று காலியில் நடைபெறவுள்ளதாக அச்சங்கத்தின் பிரதம செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

புதிய ஆசிரியர் மற்றும் அதிபர் சேவை திருத்தச் சட்டத்தின் படி அதிகபட் சசம்பள அதிகரிப்பாக ஆசிரியர்களுக்கு 105 ரூபாவும், அதிபர்களுக்கு 425 ரூபாவும் வழங்கப்படவுள்ளது.

இந்த சட்ட திருத்தத்தின் மூலம் முன்வைக்கப்பட்டுள்ள திருத்தம், ஏற்கனவே ஆசிரியர் தொழிற்சங்கங்களினால் புறக்கணிக்கப்பட்ட சம்பள முறைமையையாகும்.

ஆசிரியர்களை ஏமாற்றும் இந்த நடவடிக்கைக்கு எதிராக எதிர்வரும் காலத்தில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் சங்கத்தின் செயலாளர் சிங்கள ஊடகமொன்றிடம் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# நாடளாவிய தொழிற்சங்கப் போர் தெற்கில் ஏற்பாடுகள் மும்முரம்

(கொழும்பு)

[illegible] செலவுத் திட்டத்தில் எதி[illegible]கப்பட்ட சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படவில்லையெனவும் இதனால், நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கப் போராட்டமொன்றை அரச மற்றும் தனியார் துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இணைந்து முன்னெடுக்கத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அரச துறையினர் எதிர்பார்த்த சம்பள அதிகரிப்பில் மூன்றில் ஒரு பகுதியாவது இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் வழங்கப்படவில்லை. அதேபோன்று, தனியார் துறை ஊழியர்களுக்கு பத்தில் ஒரு வீத சம்பள அதிகரிப்பாவது இடம் பெறவில்லை.

அதிகரிக்கப்பட்டுள்ள சம்பளத்திலும் அரச ஊழியர்களுக்கு கிடைப்பது 2764 ரூபாவாகும்.

இதேவேளை, அமைச்சு ஒன்றின் செயலாளரின் சம்பளம் 31000 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக தொழிற்சங்க நடவடிககைகளுக்கான ஏற்பாட்டாளர் சமன் ரத்னப்பிரிய தெரிவித்துள்ளார்.

# மோட்டார் சைக்கிளினால் மோதி கல்லூரி மாணவன் காயம்

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய் பகுதியில் வீதியைக் கடக்க முற்பட்ட மாணவனொருவரை மோட்டார் சைக்கிளால் மோதி காயப்படுத்திய இருவரை பொலிஸார் கைது செய்த சம்பவமொன்று நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் காயமடைந்த உரும்பிராய் கல்லூரியொன்றைச் சேர்ந்த 13 வயது மாணவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று மதியம் பாடசாலை முடிவடைந்த நிலையில் மேற்படி மாணவன் வீதியைக் கடக்க முற்பட்ட வேளையில் அவ்வழியால் வேகமாக வந்த மோட்டார் சைக்கிளொன்று மாணவரை மோதியுள்ளது.

இதன்போது பாடசாலை ஆசிரியர்கள் ஒன்று கூடி மோட்டார் சைக்கிளில் சென்றவரை மடக்கிப்பிடித்து பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நல்லூர் சங்கிலிதோப்பு மந்திரி மனையை காப்பாற்ற ஆராய்ச்சி நிலையம் முன்வரவேண்டும்



(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை வீதி நல்லூரில் அமைந்துள்ள மந்திரி மனையை தொல்பொருள் ஆராய்ச்சி அமைச்சு உள்வாங்க வேண்டும்.

இவ்வாறு வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேற்படி விடயம் தொடர்பாக வடமாகாண சபை எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசாவால் நேற்று முன்வைக்கப்பட்ட பிரேரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூரில் அமைந்துள்ள சங்கிலி தோப்பு இராஜ அரண்மனை அமைந்துள்ள காணியை சீனிவாசகம்பிள்ளை தம்பிப்பிள்ளை சமாதி நிதியத்தினர் வர்த்தகருக்கு குத்தகைக்கு வழங்கியுள்ளனர்.

இக்காணி தற்போது கனரக வாகனங்கள் தரிப்பதற்கான இடமாக மாறி சூழல் பாதிப்பினை ஏற்படுத்தியுள்ளது.

மந்திரி மனையின் கட்டடங்கள் சேதமடையும் நிலையில் தற்போது உள்ளன. எனவே 9 பரப்பு காணியில் அமைந்துள்ள மந்திரி மனையினை தொல்பொருள் ஆராய்ச்சி நிலையத்திற்கு பாரப்படுத்தும் வண்ணம் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிப்பதற்கு மத்திய கலாசார அலுவல்கள் மற்றும் தேசிய மரபுரிமை அமைச்சும் வடமாகாண கல்வி அமைச்சும் முன்வரவேண்டும் என்ற பிரேரணையை நேற்று முன்தினம் முன்வைத்தார் எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா.

# நவ.8 புற்றுநோய் பரிசோதனை; தாய்மார்கள் சிகிச்சை பெறலாம்

தெல்லிப்பளை சுகாதார வைத்தியதிகாரி பிரிவுக்குட்பட்ட தாய்மார்களுக்கு புற்றுநோய் தொடர்பான பரிசோதனைகள், வைத்தியதிகாரி பணிமனையால் கடந்த சனிக்கிழமை முதல் முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுகாதார வைத்தியதிகாரி எஸ்.நந்தகுமார் தெரிவித்தார்.

இப் பரிசோதனையில் கழுத்து, வாய், இரைப்பை மற்றும் மார்பு புற்று நோய்க்கான மருத்துவ பரிசோதனைகள் தனித்தனியாக மேற்கொள்ளப்படுகின்றன.

இரண்டு வாரங்களில் ஒரு சனிக்கிழமை என்றவாறு சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் இடம்பெறும் இந்த வைத்திய பரிசோதனையை, தெல்லிப்பளை புற்றுநோய் வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்திய நிபுணர் திருமதி இ.கிரிசாந்தி, மகப்பேற்று வைத்திய நிபுணர் எஸ்.முகுந்தன் ஆகியோர் மேற்கொள்கின்றனர்.

முதன்முதலாக கடந்த சனிக்கிழமை நடைபெற்ற மருத்துவ பரிசோதனையில் 15 தாய்மார்கள் பயன்பெற்றார்கள்.

தொடர்ந்து, நவம்பர் 8 ஆம் திகதி சனிக்கிழமை இடம்பெறவுள்ள மருத்துவ பரிசோதனையில் பரிசோதனை மேற்கொள்ள விரும்பும் தாய்மார்கள் சுகாதார வைத்தியதிகாரி பணிமனையில் முற்பதிவு செய்துகொள்ள முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (பா)

# அரிசி இறக்குமதி பங்களாதேஷிடமிருந்து

(கொழும்பு)

இலங்கைக்கு 50,000 மெட்ரிக் தொன் அரசியை வழங்குவதற்கு பங்களாதேஷ் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

ஒரு தொன் அரிசி, 450 டொலர்களுக்கு இலங்கைக்கு விற்பனை செய்யப்படவுள்ளதாக ரொய்ட்டர்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இரண்டு நாடுகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமொன்றிற்கு அமைய, பங்களாதேஷினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நுகர்வுத் தேவைக்கு அதிகமாக அரிசி கையிருப்பில் இருப்பதால், இலங்கைக்கு வழங்குவதற்குத் தீர்மானித்ததாக பங்களாதேஷ் உணவுத்துறை அமைச்சர் குறிப்பிட்டார்.

# போதை வர்த்தகம் தெற்கில் அமோகம்

## 20468 பேர் இந்த ஆண்டில் கைது

(கொழும்பு)

ஹெரோயின் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கடந்த 10 மாதங்களில் பிரதான நபர்கள் 13 பேர் உட்பட 20,468 பேர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அதற்கு மேலதிகமாக வெளிநாடுகளிலிருந்து ஹெரோயின் அனுப்பும் வர்த்தகர்கள் அறுவரை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸாரின் உதவியை நாடியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

அந்த அறுவருக்கு எதிராகவும் நமது நாட்டு நீதிமன்றத்தினால் ஆறு சிவப்பு நோட்டீஸ் விடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தனர்.

கடந்த காலத்தில் 311 கிலோகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாவும் கடந்த மூன்று மாதங்களில் 50-60 இலட்சம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட ஹெரோயின் கிலோகிராம் தற்போது ஒரு கோடி 50 இலட்சம் ரூபாவுக்கு மேல் விலையேறியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நாட்டில் ஹெரோயின் விற்பனை செய்யும் பிரதான குழுக்கள் நான்கில் மூன்று குழுக்களின் முக்கியஸ்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# இலத்திரனியல் அடையாள அட்டை ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தி

நாட்டில் அறிமுகம் செய்யப்படவுள்ள டிஜிட்டல் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்வதற்கு 15 வயதைத் தாண்டி, தகுதி பெற்ற 160 லட்சம் பேர் காணப்படுவதாக ஆட்பதிவுத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் ஆர்.எம்.எஸ். சரத் குமார தெரிவித்துள்ளார்.

புதிய தேசிய அடையாள அட்டை மூன்று மொழிகளிலும் அமையப் பெற்றுள்ளதாகவும் இதனை எதிர்வரும் 2016 ஆம் ஆண்டு முதல் விநியோகிக்கவுள்ளதாகவும் சிங்கள ஊடகமொன்றிடம் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# கனேடிய தேர்தல்களில் மூன்று தமிழர்கள் தெரிவு



கனடாவில் நடைபெற்ற தேர்தல்களில் போட்டியிட்ட தமிழர்களில் மார்க்கம் கல்விச்சபைக்கான பிரதிநிதி வொனிற்றாநாதன், ரொறன்ரோ கல்விச்சபைக்கான பிரதிநிதி பார்த்தி கந்தவேல் மற்றும் மார்க்கம் நகராட்சி மன்ற உறுப்பினர் லோகன் கணபதி ஆகியோர் வெற்றிபெற்றுள்ளனர்.

கனடாவின் மிகப்பெரிய நகரமான ரொறொன்ரோவின் அடுத்த மேயராக ஜோன் ரொறி தெரிவு செய்யப்பட்டுள்ளார். இந்த வெற்றி ரொறொன்ரோ நகர சபையில் இடம்பெற்ற வோட் சகோதரர்களின் கொந்தளிப்பான ஆட்சியை முடிவிற்கு கொண்டு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஒக்ரோபர் 28 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.